Registered as a Newspaper
பக்கம் -20 விலை 12/=

# தமிழ் அலை
வாரமலர்
TAMILALAI

அலை - 01 சனிக்கிழமை, 11-10-2003 ஓசை -28

## காஞ்சிரன்குடா படுகொலை !
## நினைவுகளில் ஓர் ஆண்டு



# குரங்கு பாஞ்சான் வந்து பாரு!

**தமிழ் பேசும் மக்களின் உணர்வலை**

F:\computer\11.10.2003 Tamilalai.cdr

தமிழ் அலை
வாரமலர் Tamilalai

பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
தொ. பே, தொலைநகல் 065.2226110
E-MAIL. tamilalai32@yahoo.com.
www.tamilalai.net

11.10.2003

## அனைத்து கட்சிகளின் ஆதரவும் வேண்டும்.

சிறிலங்கா அரசு இந்திய வம்சாவழித் தமிழர்களுக்குக் குடியுரிமை வழங்கி நீண்ட கால இடை வெளிக்குப் பின் ஒரு நற் சேவை புரிந்துள்ளது. அண்மையில் நாடாளுமன்றத்தில் மலையகத்தில் குடியியல் உரிமையற்ற மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான சட்ட மூலம் கொண்டுவரப்பட்ட போது,

அனைத்து எதிர்க் கட்சிகளும் கட்சி பேதங்களை மறந்து சட்ட மூலம் ஏகமனதாக நிறைவேறுவதற்கு ஆதரவு வழங்கின.

எந்த ஒரு கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரோ அரசின் சட்ட மூலத்துக்கு எதிர்ப்பினைக் காட்டவில்லை. கடந்த பல வரலாறுகளைப் புரட்டிப் பார்த்தால் சிங்கள ஆட்சியாளர்களால் மலையகத் தமிழினம் ஏமாற்றப்பட்டது. உண்மை.

1953ம் ஆண்டு டட்லி - நேரு பேச்சுவார்த்தை, 1954 கொத்தலாவல - நேரு பேச்சு வார்த்தை, 1964 சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் இப்படி எத்தனையோ ஒப்பந்தங்கள் பேச்சுக்கள் நடத்திய போதும் மலையகத் தமிழ் மக்கள் வந்தேறு குடிகளாகச் சிங்கள ஆட்சியாளர்களால் கணிக்கப் பட்டனர். மலையகத் திலிருந்து அரசியல் தலைமைத் துவங்கள் தலை எடுத்த போதும் தொண்டமான் தொடக்கம் இற்றவரை மலையகத்தைப் பிரதி நிதித்துவப் படுத்தும் அமைச்சர்கள் வரை ஆட்சிக் கட்டிலில் இருக்கும் தலைமைகளுக்குச் சாமரம் வீசுபவர்களாகவே செயற்பட்டனர். தற்போது மலையகத் தமிழர்களின் குடியுரிமைகள் வழங்கப்பட்டதை யடுத்து அவர்களின் மிக நீண்ட காலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்திருக்கிறது.

மலையகத் தமிழ் மக்களின் பிரஜாவுரிமையை வழங்க முடியாத அரசு எப்படி வடக்குக் கிழக்கு மக்களின் பிரச்சினையைத் தீர்க்கப் போகிறது என்ற சந்தேகம் களையப்பட்டு விட்டது. இனி எழும் பிரச்சினை என்னவென்றால் மலையகத் தலைமைகள் அற்ப சலுகைகளுக்காக விலை போகக் கூடாது. மலையகத் தமிழனாக இருந்தால் என்ன வடக்கு கிழக்குத் தமிழனாக இருந்தால் என்ன தமிழினத்தின் தேசியத் தலைமை ஒன்று தான். அதனை ஆழப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மறுபுறம் மலையக மக்களின் குடியுரிமையை வழங்குவதற்கு அனைத்துக் கட்சிகளும் வழங்கிய ஆதரவு போன்று ஒரு அதிகாரப் பலம் மிக்க இடைக்கால நிர்வாக சபையை வழங்கும் இக் கட்சிகள் அரசுக்கு ஆதரவு நல்க வேண்டும்.

# மலையக மக்கள் வாக்குரிமை இன்று நாளை தமிழின உரிமைக்கு கிடைக்குமா?

மலையக தமிழ் மக்களது பிரஜாவுரிமை வாக்குரிமை பறிப்பின் மூலம் சுதந்திர இலங்கையில் ஆட்சியை ஆரம்பித்த சிங்கள சமூகம் 55வருடங்களின் பின்னர் அதற்கு பிராயச்சித்தம் தேடும் வகையில் பிரஜாவுரிமை இல்லாத அனைவரும் பெறக்கூடிய வகையில் சட்டத்தை நிறை வேற்றியுள்ளது. அதுவும் பிரஜாவுரிமையை வாக்குரிமையைப் பறித்த ஐக்கிய தேசியக் கட்சியே அதுவும் பிரதான எதிர்க் கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி சிவப்புச்சட்டை போர்வையில் இனவாதத்தை மூலதனமாக்க என்னும் ஜே.வி.பி மற்றும் அன்று வாக்குரிமை பறிப்புச் சட்டத்திற்கு ஆதரவு வழங்கிய தமிழ்க் காங்கிரஸ் கட்சி, பிரஜாவுரிமைப் பறிப்பினால் உருவான தமிழரசுக் கட்சி அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலை மற்றும் ஸ்ரீலங்கா ச.க,ரெலோ, புளொட், ஈபிடிபி,கூட்டணி என்பனவும் ஆதரித்து வாக்களித்துள்ளது.

இது இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் முக்கிய திருப்பு முனையாகும். தந்தை செல்வாவின் பேரவாக்களில் ஒன்று நிறைவேறியுள்ளது.அதே போல் தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளிட்ட போராளிக் குழுக்கள் ஒருமித்து முன்வைத்த திம்பு கோரிக்கைகளில் ஒன்றும் நிறைவேறியுள்ளது.

ஒரு இனம் சம்மந்தப்பட்ட சட்ட மூலம் எந்த எதிர்ப்புகளுமின்றி நிறைவேற்றப்பட்டது. பெரிதும் யோசிக்கப்பட வேண்டிய விடயமென்பது மட்டுமல்ல நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு இந்த முன் உதாரணம் உதவுமா என்பதே அனைவரது கேள்வியுமாகும். ஆனால் சிறுபான்மை மக்கள் விவகாரத்தை ஏகமனதாகக் கையாள அனைத்து கட்சிகளும் முன்வந்து இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் இடம் பெற்ற தலை சிறந்த நிகழ்வு என்று குறிப்பிடலாம்.

இலங்கையில் இன முரண்பாடுகள் தீவிரம் பெறுவதற்கான முக்கியமான நேரடி நடவடிக்கைகளாக மலையகத் தமிழ் மக்களது குடியுரிமை வழக்குரிமை பறிப்பைக் கொள்ள முடியும் 1948ம் ஆண்டின் 18ம் இலக்கச் சட்டம் 15-11-1948முதல் நடைமுறையில் உள்ளது. இச் சட்டப்படி இலங்கையில் பிறந்த ஒருவர் பிரஜாவுரிமை பெறுவதற்கு அவரின் தந்தை இலங்கையில் பிறந்திருக்க வேண்டும் அல்லது தந்தை வழி பாட்டனும், பூட்டனும் இலங்கையில் பிறந்திருக்க வேண்டுமென இச் சட்டத்தின் பிரிவு 4(1)குறிப்பிடுகிறது.

இலங்கைக்கு வெளியே பிறந்த ஒருவர் பிரஜாவுரிமை பெறுவதற்குத் தந்தையும் தந்தை வழிப் பாட்டனும்அல்லது தந்தை வழிப்பாட்டனும், பூட்டனும் இலங்கையில் பிறந்திருக்க வேண்டும் எனப் பிரிவு 4(2)குறிப்பிடுகிறது.

பிறப்பவர் ஒருவர் இலங்கை பிரஜையாகக் கொள்ளப்படுவதற்கு பிறக்கும் போது தந்தை இலங்கைக் குடிமகனாக இருக்க வேண்டுமென்பதே குடியுரிமைச் சட்டத்தின் அடிப்படை ஏற்பாடுகளாக இருந்தது..

பிரஜாவுரிமை பெறுவதற்கு தமிழர்களும், முஸ்ஸிம்களும் முக்கிய ஆவணமாக பிறப்புச் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். 1895ம் ஆண்டின் 11வது இலக்கச் சட்ட மூலம் பிறப்பைப் பதிவது கட்டாயப் படுத்தப்பட்டதையடுத்தே பிறப்புப் பதிவு இடம்பெற்றது. ஆனால் அதற்குப் பின்னர் பலர் பதிவு செய்வதில் அக்கறை காட்டவில்லை. இதனால் குடியுரிமையை நிலை நிறுத்துவதில் பலர் சிரமங்களை எதிர் நோக்கினார்கள்.இதனால் வாக்களிக்க, வேலைவாய்ப்புப்பெற, கடவுச் சீட்டு பெறமுடியாத நிலை ஏற்பட்டது.

1949ம்ஆண்டின் 3ம்இலக்க இந்திய, பாகிஸ்தானியர் குடியுரிமைச் சட்டம் கொண்டு வந்து ஒருலட்சத்து 32240ஆயிரம் பேருக்கு குடியுரிமை வழங்கப்பட்டது.

இச் சட்டமானது 1946ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து விவாகமாகா தவராயின் பத்து வருடங்களுக்குக்குறையாமலும் விவாகமான வராயின் ஏழு வருடங்களுக்குக் குறையாமல் தொடர்ச்சியாக வசிப்பதுடன் உறுதியான வருமானத்தைக் கொண்டிருக்க வேண்டுமென குறிப்பிட்டது. எனினும் அப்போது குடியுரிமை பதிவு ஆணையாளராக கடமை புரிந்தவர் பிழையாகசட்டவிதிகளை அறிமுகப் படுத்தியதால் தொல்லை கொடுத்தார். இது தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவுகளை அரசாங்கம் ஊதாசீனப் படுத்தியதால் பலருக்கும் நிவாரணம் கிடைக்கவில்லை.

பின்னர் 1964 அக்டோபர் மாதம் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் 525,000பேரை இந்திய பிரஜைகளாகவும் 3லட்சம் பேரை இலங்கை பிரஜைகளாகவும், அங்கீகரிக்கப்படுவதுடன் எஞ்சிய ஒன்றரை லட்சம் பேர் தொடர்பாக பின்னர் ஆராய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.இந்த உடன்படிக்கையை நடைமுறைப் படுத்துவதற்காக1967ம் ஆண்டின் 14ம் இலக்கச் சட்டம் ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்டு நால்வருக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கும் போது 7பேர் நாடு கடத்தப்பட்டார்கள்.

மிகுதியாக இருந்த ஒன்றரை லட்சம் பேரில் 75,000 பேருக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்க சிறிமாவோ இந்திரா காந்தி ஒப்பந்தத்திற்கு இணக்கம் காணப்பட்டது. 1981ம் ஆண்டின் 47ம் இலக்க சட்டம் , 1988ம் ஆண்டின்3ம் இலக்க சட்டம் என்பனவும் பிரஜாவுரிமை தெடர்பாக நிறை வேற்றப்பட்டன.

இந்த நிலையிலும் 168141 மலையகத் தமிழ் மக்கள் பிரஜாவுரிமை பெறாத நிலை இருந்ததால் தற்போது நிவாரணம் வழங்கும் வகையில் சகல கட்சிகளும் இணைந்து சட்டத்தை நிறைவே ற்றியுள்ளது. 1964ம் ஆண்டிற்குப் பின்னர் தொடர்ந்து இலங்கையில் வசிப்பதாக விண்ணப்பதாரிகள் கடதாசியில் விண்ணப்பிக்க வேண்டும்.

பாராளுமன்றம் சட்டத்தை நிறைவேற்றிய போதிலும் அமுலாக்கம் பேரினவாத அதிகார வர்க்கத்திடமே இருக்கப் போகிறது.சிறுபான்மை மக்கழுக்கு நிவாரணமளிப்பதற்கான சட்டங்கள் திட்டங்களை அமுல்படுத்தும்போது அதிகார வர்க்கம் தேவையற்ற மேலதிக ஆவணங்களைக் கோருதல், காலத்தை இழுத்தடித்துச் சலிப்படையச் செய்தல் போன்ற கைங்கரியங்களில் ஈடுபடுவது வழமை. உதாரணங்களாக தமிழ் மொழி அமுலாக்கல் தொடர்பாக சட்டம் கறுப்பு, வெள்ளையாக இருந்தும் நடைமுறையில் இல்லை. அரசியலமைப்பில் உள்ள அடிப்படை உரிமைகளும் சிறுபான்மை மக்களுக்கு எட்டாக்கனிகளே. எனவே பிரஜாவுரிமை சட்ட நிறை வேற்றத்தில் ஒன்றாக செயற்பட்ட கட்சிகள் அமுலாக்கத்திலும் கூடிய கரிசனை காட்ட வேண்டும்.

எனினும் மலையகத் தமிழ் மக்களுடைய பிரஜாவுரிமை பிரச்சினைக்கு முடிவு கட்டப்பட்டு விட்டதாக இச் சட்டத்தின் மூலம் சிங்கள ஆட்சியாளர்கள் மாற்றப்படலாம். ஆனால் இந்த நிலை ஏற்படுவதற்கு மலையத மக்கள் மீது கொண்ட பரிவு அக்கறை என்று ஆட்சியாளர்கள் பெருமை பேச முடியாது.

தற்போதைய விகிதாசார பிரதி நிதித்துவத் தேர்தல் முறையின் கீழ் மலையக மக்களும் முக்கிய அரசியல் சக்தியாக உள்ளனர். பத்தாவது பாராளுமன்றத்தின் இரு தரப்பு சம நிலைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தோள் கொடுத்த போதிலும் அறுதிப் பெரும் பான்மைக்கு மலையக மக்கள் முன்னணியே தோள் கொடுத்தது. பின்னர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வலுவூட்டியது. அதே போல் கடந்த பாராளுமன்றத்திலும் சரி இன்றைய பாராளுமன்றத்திலும் சரி மலையக மக்கள் முன்னணியும் இலங்கை தொழிலாளர்கள் காங்கிரசும் இணைந்து அரசாங்கத்தைத் தக்கவைத்துக் கொண்டு வருகின்றன. இந்த நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணியும் சரி ஐக்கிய தேசியக் கட்சியும் சரி ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைக்க மலையக அரசியல் கட்சிகளின் தேவையைக் கருதியே ஆதரித்து வாக்களித்தனர். ஜே.வி.பி ஒரு புறம் தன்னை இடது சாரியாகக் காட்டிக் கொண்டுஇனவாத அணியை நடாத்தி வருகின்றது. இந்த நிலையில் மலையக தொழிலாளர் வர்க்கத்தை ஆதரிப்பதாக இடது சாரி முகத்தைக் காட்டவே ஆதரித்தது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்காக இந்தியாவோடு ஜே.வி.பி. உள்ளிட்ட சகல கட்சிகளும் கை கோர்த்து நிற்பதால் இந்தியாவுக்கும் கடந்த 55வருடங்களாக தலையிடியைக் கொடுத்து வரும் பிரஜாவுரிமை பிரச்சினைக்குத் தீர்வுகாண ஒத்துழைப்பதன் மூலம் இந்தியாவின் நல்லெண்ணத்தைச் சம்பாதிப்பதற்கும் முனைந்துள்ளன. மேலும், இன்று தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதில் மலையகத் தமிழ் மக்களும் பங்களிப்பை வழங்கி வருகிறார்கள். அவர்களுக்குரிய முக்கிய பிரச்சினைகளில் ஒன்றான் பிரஜாவுரிமை பிரச்சினையைத் தீர்க்கலாமென பேரினவாதிகள் கருதுகின்றார்கள்.

55வருட பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தமிழரின் விடுதலைப் போராட்டமும் முக்கியமான பக்க காணமாக இருப்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். தமிழ் தேசியத் தோடு மலையக தமிழ் மக்களை இணையாதவாறு தடுப்பதில் ஜே.ஆர் அரசு முக்கிய பங்கை ஆற்றியது. பிரஜாவுரிமை வழங்குவதில் முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் மலையக அபிவிருத்திக்கும் குறிப்பிடத்தக்க நிதி ஒதுக்கீடு வழ்ங்கப்பட்டது.

மலையக மக்களிடம்பறித்த

**~ ஜி.நடேசன் ~**

பிரஜாவுரிமையை, வாக்குரிமையை சிங்கள ஆட்சியாளர் வழங்கியது பறித்ததைத் திருப்பி வழங்கியதே தவிர உரிமையை வழங்கியதாகக் கருத முடியாது. எனினும் தமிழ்த் தேசியத்தோடு மலையக தமிழர்களும் இணைந்து விடுவார்களோ என்ற அச்சத்தில் இப்போது பறித்ததைக் கொடுத்துள்ளார்கள். அதேவேளை வாக்குரிமையைப் பறிக்கும் சட்ட மூலத்திற்கு தமிழ் அரசியல் வாதிகளில் ஒரு சாரார் ஆதரவளித்ததை உதாரணமாகக் கூறி பிரிகோடு இட முற்பட்டார்கள். ஒட்டு மொத்தமாக தமிழ்க் காங்கிரஸ் உள்ளிட்ட சகல தமிழ்க் கட்சிகளும் ஆதரவழித்தன் மூலம் அதற்கு பிராயச் சித்தம் தேடப்பட்டுள்ளது.

மலையகத் தமிழ் மக்கள் தமது தனித்துவங்களை பேணும் அதே வேளை தமிழ்த் தேசியம் என்ற அகன்ற வரை யறைக்குள் தம்மை ஈடுபடுத்துவதன் மூலமே பாதுகாப்பு உள்ளிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். பேரின வாதிகளின் வலைக்குள் சிக்காது செயற்பட வேண்டிய, சிந்திக்க வேண்டிய சூழல் இதுவாகும்.

அதிரடிப் படையினரின் அராஜகத்தினால் பலியான அப்பாவி பொதுமக்களின் 2003.10.09 ஓராண்டு நினைவாக இக்கட்டுரை எழுதப்பட்டிருக்கிறது.

தமிழீழ அரசினுடைய தேசியத் தலைவர். மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் சிறிலங்கா அரசின் தலைவருடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதன் பின்னர் விடுதலைப் பாதையில் புனிதப் போர் செய்த போராளிகள் தமது ஆயுதங்களினை ஓய்வு நிலையில் வைத்திருந்தனர். ஆனாலோ துரதிஷ்டவசமாக சிறிலங்கா அரச படையினரின் துப்பாக்கிகள் தமிழனை நோக்கிய வண்ணமே இருந்தது, என்பது பல சம்பவங்களின் வடுக்கள் மூலம் அறியலாம்.

இவர்களுடன் பாடசாலை மாணவர்கள் 06 பேரும், குடும்பஸ்தர் 01 நபரும் இஸ்தலத்திலேயே பலியானார்கள். பலியானவர்களின் விபரம் கதிரமலை ரவி (20), விஜயராசா ஜெயப்பிரகாஷ் (19), அரசரெட்ணம் செல்வக்குமார்(18), நல்லையா குமாரகுலசிங்கம் (25), மனோகரன் சத்தியநாதன் (18), கதிரமலை சசிக்குமார் (19) நாகராசா சசிக்குமார் (19) ஆகியோர் ஆவர்.

இப்படுகொலை தொடர்பாக

சென்றார்கள்.

மேலும் இச்சம்பவத்தினைமனித உரிமைகள் ஆணைக்குழு ஓர் விசாரணைக் குழுவினை அனுப்பிவைத்தனர். விசாரணைகள்மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்- சரத்குரே தலைமையிலும் நடைபெற்றது. அத்துடன் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் மஜிஸ் திரேட் எம் - வை - எம் - சிஸ் ஸதீன் தலைமையிலும் ஒரு விசாரணைக் குழு விசாரணைகளினை நடாத்தி இற்றை வரைக்கும் மனித உரிமை ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவரவில்லை.

ஆனாலோ பலியானோரின் குடும்பங்களுக்கு இது வரைக்கும் ஒன்றும் கிடைக்கவில்லை. முதலில் எதனையாவது கொடுப்பதற்கு அரசு துரித நடவடிக்கையினை எடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பத்தின் நிலையைப் பார்த்தால் ஒரேயொரு ஆண்பிள்ளையாகவே இருக்கின்றனர். இவர்களின் மரணத்தின் பின் குடும்பத்துக்கு



உடும்பங்குள கோட்டம் (திருக்கோவில்) அரசியல்துறை பொறுப்பாளர்- பிள்ளையானைச் சந்தித்த போது:

''காஞ்சிரன் குடா சம்பவம் தொடர்பான உண்மை அறிக்கையினை சகல தரப்பினரிடமும் அறிவித்துள்ளோம். இது வரைக்கும் அப்பாவித் தமிழ் மக்களினைத் துடிக்கத் துடிக்கச் சுட்ட இராணுவத்தினருக்கு எதிராக எதுவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவே இல்லை. முடியுமான வரையில் எம்மால் சில உதவிகளைப் பாதிக்கப்பட்ட

# காஞ்சிரன்குடா படுகொலை கொடூர வரலாற்றில் ஓர் ஆண்டு

சமாதான காலத்தில் பல பிரதேசங்களில் முஸ்லிம் மக்கள் இழப்புக்களையும், சேதங்களையும், பொருளாதார நஷ்டங்களையும் எதிர் நோக்கினர். அவைகள் பற்றிய உண்மையான அறிக்கைகள் சுடச்சுட வெளியாக்கப்பட்டது. உடனுக்குடன், நஷ்ட ஈட்டுத் தொகைகளும், நிவாரண உதவிகளும் வழங்கப்பட்டது.

ஆனால் சென்றவருடம் 10ம் மாதம் 09ம் திகதி காஞ்சிரன்குடா அதிரடிப்படை யினரினால் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய

அப்பாவிப் பொதுமக்களின் நிலை இன்று வரைக்கும் அம்போ... என்ற நிலையில் விடப்பட்டுள்ளது.

இலங்கை போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழு அம்பாறை மாவட்ட குழுத்தலைவர் கார்ல்சீபேக் தலைமையில் நேரடியாக சம்பவ இடத்துக்குச் சென்று அதிரடிப்படையினரின் கூற்றை உள்ளடக்கி ஒரு தலைப்பட்சமான அறிக்கையினை வெளியிட்டது. இது இக்குழுவின் மீது தமிழ் மக்களுக்கு இருந்த நம்பிக்கையினைப் பூரணமாக இழக்கச் செய்தது, இவ்வறிக்கை மூலம்.

சிறிலங்கா அரசின் மூலம் - முன்னாள் விமானப்படைத் தளபதி ஏயார் மார்ஷல் ஹரி

குணதிலக, ஓய்வு பெற்ற நீதியரசர் - ஒலிவர் வீரசேன, ஆசிரியர் எஸ் - விவேகானந்தர் ஆகியோரை விசேட விசாரணைக் குழுவாக



உழைத்துக் கொடுக்க ஆளில்லை, நிர்க்கதியான நிலையில் வாழ்கிறார்கள், ஏமாந்த குடும்பமாகவுள்ளது.

மரணித்த மாணவர்கள் படித்து எதிர்காலத்தில் அவர்களது குடும்பத்தினைக்

படம், கட்டுரை: ஜ-எல்- ஜலீல்

குடும்பங்களுக்கும், பதிகப்பட்டவர்களுக்கும் செய்திருக்கிறோமே தவிர இலங்கை அரசாகத்தினால் இற்றைக்கு ஓர்வருடமாகியும்



**இது வரைக்கும் அப்பாவித் தமிழ் மக்களினைத் துடிக்கத் துடிக்க சுட்ட இராணுவத்தினருக்கு எதிராக எதுவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவே இல்லை**



சென்ற வருடம் ஒக்டோபர் -09ம் திகதி அன்று தம்பிலுவில், திருக்கோவில், வினாயகபுரம் போன்ற பகுதிகளினூடாக அமைதிப் பேரணி ஒன்றினைப் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் நடத்தினர். இப் பேரணி களுத்துறைச் சிறைச்சாலையில் விசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மேற்கொண்ட உண்ணாவிரதத்திற்கு ஆதரவாகவும், திருக்கோயிலில் கடந்த 02.10.2002ல் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட மேகலா சிறிதரனின் படுகொலையைக் கண்டித்தும், காஞ்சிரன்குடா விசேட அதிரடிப்படை முகாம் படையினரால் கோமாரி விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் உட்பட இருவர் கேள்வி எதுவுமின்றி தாக்கப்பட்ட சம்பவத்துக்கு எதிராகவும் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டப் பேரணியை அதிரடிப்படை முகாம் அருகில் சென்று திரும்புவது என்ற திட்டத்துடன் சென்றனர்.

அமைதியாக நடாத்தப்பட்ட பேரணி காஞ்சிரன்குடா முகாமை அண்மித்ததும் படையினர் நாலா பக்கமும் சரமாரியாகத் துப்பாக்கி பிரயோகம் செய்தனர். இதில் 22க்கு மேற்பட்டவர்கள் படுகாயமுற்றனர்.

நியமித்து இவ் விசாரனைக் குழுவிற்குச் செயலாளளராக சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் - சவங்கன் என்பவரையும் அரசு நியமித்தது.

இவ் விசேட ஆணைக்குழு - அதன் உறுப்பினர் விவேகானந்ததுக்கு ஒவ்வாமையான கருத்துக்களுடன் அறிக்கையினை தயாரித்தது. அது இதுவரைக்கும் வெளியிடப்படவில்லை. ஏதோ விவேகானந்தன் மட்டும் தனியே வேறு ஒரு அறிக்கை தயார் செய்தார். இது இவ்வாறிருக்க விசாரணைக்காக மட்டும் வந்த எயார் மார்ஸல் குணதிலக்க விசாரணை அறிக்கையை - விமானப்படையினரின் விமானத் தாக்குதலில் தனது மகன் இறந்ததற்கு - எல்.ரி.ரி.ஈ. தான் காரணம் என்று இதற்குப் பதிலீடாகப் புலிகளுக்கு எதிராகவே தனது அறிக்கையினைத் தயாரித்தார். அத்தோடு நிற்காமல் அதற்கும் மேலாகப் போய் படையினரினால் ஆரம்பத்தில் தாக்கப்பட்ட கோமாரி பிரதேச அரசியல்த்துறைப் பொறுப்பாளர் விஷ்வநாதனுக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்றும் கூறினார். அது அவரது வேலையுமில்லை. அது அவரது விடயத்துக்கு அப்பாற்பட்ட விசயம். அது மட்டுமல்லாமல் விசாரணை என்ற பேரில் பொதுமக்களினைப் பேய்க்காட்டி விட்டு

கவனிக்கக் கூடிய நிலையில் இருந்திருப்பார்கள். ஆனால் பெறுமதியான உயிரையும் பலிகொடுத்துவிட்டு நிர்க்கதியான முறையிலுள்ளனர்.

மரணமடைந்த நாகராசா சசிகுமாரின் அப்பா இளையதம்பி நாகராசா துயரத்துடன் பேசுகையில் மகனின் மரணச் செய்தியினால் மனைவி ஒரு வாரத்தின் பின்னர் இறந்து விட்டார். பெண்பிள்ளைகள் மூன்று பேர் உள்ளனர். எனக்கு உழைக்க முடியவில்லை, இன்னும் வீடு கூடக் கட்டவில்லை, எதுவிதமான நஷ்ட ஈடோ, நிவாரணமோ அரசினால் வழங்கப்படவில்லை என்றார்.

பலியான கதிரமலை ரவியின் அம்மா வேலுப்பிள்ளை சரஸ்வதியைச் சந்தித்தபோது '' எனது மகன்செத்தத்திற்குப் பிறகு என்ன கவனிக்க யாருமில்லப்பா, என்ட பொம்புளப்புள்ள குமராகி ஏங்குது. ஒரு ஊடுகட்ட வசதியில்ல அரசாங்கத்தால ஒரு நன்மையுமில்லப்பா. ஏதோ புள்ளயள்ரசவத்தை அடக்க 10,000/= காசி தந்தாங்க, பாதிரியாரும் 5,000/= தந்தாங்க நேரு எம்-பி ஏதோ எங்களுக்கு தருவாராம் எண்டு கதைக்காங்க. தந்தாவாங்கிக்கிவம் என்ட புள்ள உசிரை எடுத்துட்டானுகள் பாவி ராணுவம், அவனுகள் அழிஞ்சிடுவானுகள்'' என்று கதறினாள்.

எதுவித நஷ்டஈடோ, நிவாரண உதவியோ வழங்கவில்லை.'' என்றார்.


(தொடர்ச்சி 19ம் பக்கம்)

## போடியார் பொறிவெடி

போதைப் பொருள் கடத்தல் காறர் வீட்டில் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராசா விருந்துண்டதாக குற்றச்சாட்டு.

-செய்தி-

'ஆனந்தராசா'' 'அப்புகாமியாக' இருந்தா இந்தக் கதயே வந்திருக்காது.....



# வவுனியா பொங்கு தமிழில் பொங்கிய உணர்வுகள்

## பேரினவாதிகள் ஒன்றை மட்டும் விளங்கிக் கொள்ள வேண்டும். தமிழினத்தை அடக்க நினைத்தால் தோல்வி நிச்சயம்.



தமிழரின் அபிலாசை என்னவென்பதை உலக சமூகத்திற்கு எடுத்துச் சொல்லும் உணர்வெழுச்சி கொண்ட நிகழ்வாகத் தமிழ் மக்கள் அணிதிரண்டு நிகழ்த்தும்'பொங்கு தமிழ்' வவுனியாவில் பேரெழுச்சியுடன் நடைபெற்றது.

தமிழினம் பொங்கித் திரள வேண்டிய காலமிது என்பதை ஒவ்வொரு தமிழரும் உணர வேண்டும். மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திக் கொள்வதற்காக நடைபெறும் பொங்கு தமிழை ஏதாவதொரு வழியில் தடுத்து விட வேண்டுமெனக் களமிறங்கும் எவரெனினும் அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றோம் என்பதை உளரீதியாக முழுமையாகப் புரிந்து கொள்ளுவது இன வேறுபாடின்றி அனைவரிற்கும் நன்மையையே விளைவிக்கும்.

புலிக் கொடியை ஏற்றக் கூடாது, பொங்கு தமிழென எழுச்சி கொள்ளக் கூடாது என எவர் தடுப்பினும்..... மீண்டும் போரிற்குத் தூபமிடும் எண்ணம் கொண்ட செயற்பாடாகவே கருத வேண்டியுள்ளது. காரணம் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வினூடாக ஆயுதமின்றி உரிமை கோரும் போராட்டம் நடைபெறுகின்றது. இதனைத் தடுத்தால் ஆயுதப் போராட்டம் மூலமே சுயநிர்ணய உரிமையைப் பெறுவதற்குப் போராட வேண்டும். ஆகவே ''பொங்கு தமிழ்'' மக்கள் எழுச்சி கொண்ட கலாசார நிகழ்வொன்றினூடான அமைதி வழிப் போராட்டம். இதனைத் தடுப்பது பல தடுப்புக்களை மீற வைக்கும்.

வவுனியாவில் நடைபெற்ற பொங்கு தமிழ் பற்றி பலரும் பல்வேறு கருத்துக்களைக் கொண்ட வெவ்வேறு தளத்தில் நிற்பவர்களெனினும் ஏதாவது ஒரு நல்ல வழியில் தமிழர் ஒன்று பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டவர்கள். அது பொங்கு தமிழ் மூலமாகவெனினும் நிதர்சனமாகட்டும் என விருப்ப




முடையவர்கள்.அவர்கள் வவுனியாவில் நடைபெற்ற பொங்கு தமிழ் பற்றி என்ன கூறினார்கள் என்பதைப் பார்ப்பது பொருத்தமானதாக இருக்கும்.

* பொங்கு தமிழ் அமைதியான வழியில் எங்களுக்கென்ன வேண்டும் என்பதை கேட்கும் நிகழ்வு. இதனை மக்கள் சரியான வகையில் புரிந்து கொண்டுள்ளனர். அதனால் தான் பொங்கு தமிழில் பெரும் திரளான மக்கள் வந்து கலந்து தமது உணர்வை வெளிப்படுத்துகின்றனர். போர் மூலம் உழைத்து ஆடம்பரமாக வாழ்ந்தவர்கள், அதனையே விரும்புகின்றனர், போரை வைத்து அரசியல் நடத்தியவர்களும் அதனையே விரும்புகின்றனர், மக்கள் சுதந்திரமான வாழ்வை விரும்புகின்றனர்.பொங்கு தமிழ் ஊடாக மக்கள் திரள்வதற்குக் காரணம் சுதந்திரமில்லாத வாழ்வை வாழ்வதால் தான் தீர்வொன்று வந்தால் அது சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும். அது வரை தமிழர் பொங்கத்தான் வேண்டும்.

**வைத்திய கலாநிதி த. முத்துலிங்கம்**

* வவுனியாவில் பொங்கு தமிழில் கலந்து கொண்ட மக்கள் பேரினவாதிகளின் பொய்ப்பிரசாரங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளனர்.இதன் மூலம் பேரினவாதிகள் ஒன்றை மட்டும் விளங்கிக் கொள்ள வேண்டும். தமிழினத்தை அடக்க நினைத்தால் தோல்வி நிச்சயம். தமிழரின் வேதனையைத் தொடரவைப்பதற்காகச் செயற்படுகின்றவர்கள்.... மக்கள் எதை கேட்கின்றனர்.எதற்கு ஆதரவு கொடுக்கின்றனர் என்பதைக் கவனத்திலெடுக்காமல் பிதற்றித் திரிவதன் மூலம் தமிழரின் உரிமையை மறுக்கின்றனர். என்பதை வெளியுலகம் கவனிக்க வேண்டும். பொய்ப்பிரசாரங்களை மட்டும் நம்பிக் கொண்டிருப்பது தமிழரை ஏமாற்றுவதாகவே நாம் கருதுவோம்.ஆகவே எம்மை தொடர்ந்தும் ஏமாற்ற நாம் ஏமாறுவதற்கு மானம் கெட்டவர்கள் அல்ல... எமக்கெதிராக ஆட்டும் வாலை ஒட்ட நறுக்குவோம். அதற்காக நாங்களும் இது போன்று ஒன்றாக அணிதிரள வேண்டும்.

**செல்வம் அடைக்கலநாதன்**
**வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்**

* பொங்கு தமிழ் ஊடாக மக்கள் தங்களுடைய மனங்களில் புதைந்து கிடந்த அபிலாசை என்ன என்பதைப் புரிந்து கொண்டு அதனை அனைத்துலக சமூகத்திற்குப் புரிய வைப்பதற்காகவே.... பொங்கி வருகின்றனர். பயத்துடன் வாழ்ந்தவர்கள் பயமற்ற வாழ்வை வாழ விரும்புகின்றனர். அதனால் தான் பயமற்றவர்களாக இன்று மக்கள் பொங்குகின்றனர். இந்த மக்கள் எழுச்சியைத் தடுக்க நினைப்பவர்கள் தோல்வியையே காணப்போகின்றனர். மக்கள் எழுச்சியைத் தடுப்பவர்கள வெல்லப் போவதில்லை.... தமிழ் மக்கள் காலம் காலமாக அடிமைப்படுத்தப்பட்டே வந்தனர். அந்த அடிமைத் தனத்தை உடைத்துக் கொண்டு சுதந்திரமாக இருக்க விரும்புவதை உலகம் அறிய வேண்டும் என்பதற்காகப் பொங்கு தமிழில் பயமின்றி மக்கள் கலந்து கொள்கின்றனர். இதனால் கேட்கப்படுவதென்ன?

''எமது நிலம் எமக்கு வேண்டும்
எமது நிலமே எமக்கு வேண்டும்''

வேறு எவருடைய நிலமும் எமக்கு வேண்டாம். எமது நிலமே எமக்கு வேண்டும் என்று கேட்பது ஆருக்குமே பாதிப்பை ஏற்படுத்தப் போவதில்லை. ஏனென்றால் நாங்கள் வேற யாருடைய நிலத்தையும் கேட்கவில்லை எங்கள் நிலத்தைத்தான் நாங்கள் கேட்கின்றோம்.

''உயர்ந்தவர்கள் நாமெல்லாம்
உலகத் தாயின் வயிற்று மைந்தர்
நசிந்து இனி கிடக்க மாட்டோம்
நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம்''

**கலாநிதி சிதம்பரநாதன்**

* பொங்கு தமிழ் பிரகடனத்தை அரசும்,உலக சமூகமும் நிறைவேற்றினால் இங்கு எந்த விதமான பிரச்சினையும் ஏற்படப் போவதில்லை. காணி, நிதி,நீதி, காவல் துறை என்பன உள்ளடங்கிய இடைக்கால நிர்வாக சபை ஒன்று அவசியமானது. இதனைக் கொடுப்பதற்கு பின் நின்றால் தமிழ் மக்களிற்கு சுதந்திரத்தை வழங்குவதற்குத் தென்னிலங்கை அரசியல் சக்திகள் என்றுமே தயாரில்லை என்பது தானே கருத்து. அப்படியான நிலைப்பாட்டை உலகம் புரிந்து கொண்டு சரியான பதிலொன்றைத் தர



வேண்டும். அல்லது ''சுய நிர்ணய உரிமையை'' தமிழர் போராடித்தான் பெற வேண்டிய நிர்பந்தம் ஏற்படும்.

**சிவசக்தி ஆனந்தன்**
**வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்**

* பொங்கு தமிழ் ஊடாக இவ்வளவு தொகையான மக்கள் வருகின்றனர் என்றால் தமிழ் மக்களின் உணர்வை விளங்கித் தீர்வொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். இல்லையென்றால் மீண்டும் நாட்டில் துயரமான சம்பவம் நடக்கும். அமைதியாக ஆயுதமின்றி தமிழ் மக்கள் கேட்பதைக் கொடுப்பது மனச் சாட்சியுள்ளவர்களின் செயற்பாடு இன்றைய அரசியல் சூழ்நிலையில் செய்யத் தவறுவதை எப்படியான அரசியல் சூழ்நிலையிலும் செய்ய முடியாது. இன்றைய அரசியல் சூழ் நிலையில் மக்கள் கேட்பது தென்னிலங்கை அரசியல் வாதிகளின் செவிகளில் பிழையாகக் கேட்குமென்றால் நடப்பவையும் பிழையானவையாகவே நடந்து விடும். மக்களை மதிக்க வேண்டுமென்றே நான் வலியுறுத்துவேன்.

**இராஜகுகனேஸ்வரன்**
**வன்னிநாடாளுமன்ற உறுப்பினர்**

* உணர்ச்சிகரமான நிகழ்வாக பொங்கு தமிழ் உள்ளது. ஏன் இப்படி மக்கள் திரண்டு வருகின்றனர். என்பதை சம்மந்தப்பட்டவர்கள் கவனிக்க வேண்டும். ஆடிப் பாடி ..

எங்கள் வீடுகளுக்கு நாங்கள் போக உங்கள் வீடுகளிற்கு நீங்கள் போங்கள். என மக்கள் படையினரைப் பர்த்துக் கேட்கின்றனர். இந்தக் கேள்வி நீதியானது. உண்மையில் படையினர் தாம் யாருடைய வீட்டில் இருக்கின்றோம்.என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எங்கள் வீடுகளிற்கு நாங்கள் போக வேண்டுமெனக் கேட்கும் மக்கள் அகதிகளாக அலைந்து திரிகின்றனர். பொங்கு தமிழ் அன்று வந்து நின்று குரலெப்புகின்றவர்கள்வீண் வேலையொன்றைச் செய்யவில்லை.

**சித்திராஞ்சன், பத்திரிகையாளர்**

* தேசியத் தலைவன் பிரபாகரன் எனக் கூறியபடி கிழர்ந்து வந்துள்ள மக்களைப் பார்க்கும் போது பெரிய விழா ஒன்றிற்கு வந்திருப்பவர்கள் போல காட்சி தருகின்றது. மக்கள் ஏன் இப்படி வருகின்றார்கள்? என்ன தேவை உள்ளது? சும்மா நேரம் போகவில்லையென்று வேலை வெட்டி இல்லாமலா வந்துள்ளனர்.? அடக்கி ஒடுக்கப்படும் தமிழர் துணிந்து விட்டனர். இது விடுதலைப் புலிகளுக்குப் பலம் சேர்க்கும் நிகழ்வல்ல ... விடுதலைப் புலிகள் பலமாகவே உள்ளனர். ''பொங்கு தமிழ் '' தமிழரின் அபிலாசை, சுயநிர்ணய உரிமை என்பதை வலியுறுத்தும் நிகழ்வு.

**அ. விநாயகமூர்த்தி,**
**யாழ்.நாடாளுமன்ற உறுப்பினர்**

* மக்களை நாங்கள் ஊரூராய்ப் போய் சந்தித்தோம். அவர்கள் தங்களுடைய ஆசை என்னவென்று சொன்னார்கள். எமது நிலத்தில் நாம் வாழ வேண்டும் என்பதே மக்களின் ஆசை. ஒரு கிராமத்தில் வயோதிப ஐயா ஒருவர் சொன்னதைச் சொல்லலாமென நினைக்கின்றேன். ''எப்ப எங்கட கிணத்தில தண்ணியள்ளிக் குடிச்சு தாகம் தீர்க்கிறனோ அன்று தான் நிம்மதியான வாழ்வின் மீள் ஆரம்பம் என உணர்ச்சி வசப்பட்டு எங்களுக்குத் தெரிவித்தார்.'' இது போல எங்கு சென்றாலும் மக்கள் உணர்வுகளை வெளிப்படுத்தியதன் இறுதி நிகழ்வே இன்று பொங்கி வந்துள்ளனர். இது ஒரு சாதாரண நிகழ்வொன்றல்ல பொங்கு தமிழை சாதாரணமாக எடை போடக் கூடாது.

**செ.விந்தன்**
**அரங்கச் செயற்பாட்டுக் குழு**

* ''பொங்கு தமிழ்'' மக்கள் எழுச்சி நிகழ்வு இதனூடாக மக்கள் விடுதலைப் புலிகளை ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுள்ளனர். நாங்களும் அதனை ஏற்றுக் கொள்கின்றோம். மக்களின் அபிலாசை என்ன என்பது மக்கள் பொங்கி வரும் போது நிச்சயமாகத் தெரிகின்றது. இது போன்ற நிகழ்வினூடாக நாங்கள் ஒன்றாகத் திரண்டு குரல் கொடுக்க வேண்டியது எங்களது கடமை. பொங்கு தமிழ் பிரகடனம் இன்றைய அரசியல் சூழ் நிலையில் அவதானிக்கப்பட வேண்டிய ஒன்று. மக்களின் உணர்வுகளை உலகம் ஆதரிக்க வேண்டும். பொங்கு தமிழ் எவரையும் சீண்டும் நிகழ்வல்ல என்பதையும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

**ரவிராஜ்**
**யாழ் நாடாளுமன்ற உறுப்பினர்**

* நாங்கள் மக்களை சந்திக்கும் போது மக்கள் எதனை கூறினார்களோ....அதன்படி மக்கள் நடந்துள்ளனர். இப்படி மக்கள் எழுச்சி கொள்வது குழப்பங்களை ஏற்படுத்தும் என்பது தவறானதென்பதைத் தடுப்பவர்கள் கவனித்துக் கொள்ள வேண்டும். பொங்கு தமிழ் எவரிற்கும் எதிரானதல்ல..... தமிழரின் அபிலாசை என்னவென்று உலகிற்கு எடுத்துச் சொல்லும் கலாசார நிகழ்வு.

(தொடர்ச்சி 12ம்)

- (கனகரவி) -



# பொய் பிரசாரத்துக்கு ஆப்பு!

# குரங்கு பாஞ்சான் சென்ற ஊடகவியலாளர் குழு

> **முகாமைச் சுற்றி வெட்டவெளிப் பிரதேசம் முகாமில் நாய்,மாடு,புறா போன்ற மிருகங்களும், பறவைகளும் காணப்பட்டன.**



**இனிமேலாவது சிகல உறுமய கட்சியின் தலைவர் திலக் கருணாரத்தினா, ஜே.வி.பி.பொதுச் செயலாளர் விமல்வீரவம்ச, பாராளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டார நாயக்கா ஏன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவர்களெல்லாம் குரங்குபாஞ்சான் முகாம் விவகாரத்தை மிகப்படுத்தி குளிர்காய்வார்களா?**



திருகோணமலை குரங்கு பாஞ்சானில் விடுதலைப்புலிகளின் முகாம் அமைந்திருப்பது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருமலைக்கு ஆபத்து எனப் பேரினவாதிகள் மேற்கொண்டு வந்த விசமப் பிரசாரத்துக்கு விடுதலைப்புலிகள் ஆப்பு வைத்துள்ளனர்.

ஒக்டோபர் 8ம் திகதி தென்னிலங்கை ஊடகவியலாளர் குழு ஒன்றினை குரங்குபாஞ்சான் பகுதிக்கு அழைத்துச் சென்ற விடுதலைப்புலிகள் குரங்கு பாஞ்சான் யாருக்குச் சொந்தம் என்பதை அங்கு நிரூபித்துக் காட்டினர். இப்போது தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் உணர்ந்திருப்பார்கள். புலிகளின் முகாமின் வலு அது அமைந்திருக்குமிடம் சிறிலங்கா படை முகாமிற்குமிடையலான தூரம். போன்ற, பல்வேறு தரவுகளின் படி உற்று நோக்கினால் குரங்கு பாஞ்சான் முகாமால் சிறிலங்கா அரசுக்கோ அல்லது படைத்தரப்பினருக்கோ எந்த ஆபத்தும் இல்லை என்பதைச் சமாதானத்தை குழப்பியடிக்கும் சக்திகளும் இவ்வாறான சக்திகளுக்குத் துணை நிற்கின்ற சில கொழும்பு ஊடகங்களின் செய்திகளுக்கு ஆட்பட்டு சமாதான எதிர்ப்பியலாளர்கள் கண்ணை மூடிக்கொண்டு பேசுவதுஇனிமேலாவது நிறுத்தப்பட வேண்டும்.

கடந்தபுதன்கிழமை 40ற்கு மேற்பட்ட ஊடகவியலாளர் குழு தம்பலகாமம் எல்லையிலுள்ள சுளுக்கான்குளத்திலிருந்து விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திலக் அவர்களால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இக் குழுவில் தமிழ்,சிங்கள, ஆங்கில பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சி, ஒலிபரப்புச் சேவை செய்தியாளர்கள், படப்பிடிப்பாளர்கள், அடங்குவர். தினமின சிங்களப் பத்திரிகையில் இருந்து ஒரு பெண் பத்திரிகையாளர் கலந்து கொண்டார் இவரைத் தவிர ஏனைய அனைவரும் ஆண்களாவர்.

இவர்கள் தமது பயணத்தின் அடுத்த கட்டமாக ஐந்து கிலோமீற்றர் தூரம் கால் நடையாகப் புலிகளால் அழைத்து செல்லப் பட்டனர். குரங்குபாஞ்சான் முகாமைஅடைந்ததும் ஊடகங்களிலும் சிங்களப்பேரின வாதிகளாலும் விமர்சிக்கப்பட்டதைப் போன்றஒருபாரிய படைமுகாமாகக் குரங்கு பாஞ்சான் முகாம் தென்படவில்லை. ஒரு புளியமரம்அதன் அருகில் இரு கூடாரங்கள்இருபதுக்குள் உள்ளடங்கக்கூடிய விடுதலைப் புலி உறுப்பினர்கள் அவர்களில் நான்கு ஐந்து பேர்களிடம் மட்டுமே துப்பாக்கிகள்.

முகாமைச்சுற்றி வெட்ட வெளிப் பிரதேசம் முகாமில் நாய்,மாடு,புறாபோன்ற மிருகங்களும் பறவைகளும் வளர்க்கப்படுகின்றன. அங்கே திலக் அவர்களுடன் திருமலை மாவட்ட தாக்குதல் தளபதி விமலும் காணப் பட்டார். ஊடகவியலாளர்களைப் பார்த்து ''நீங்கள் சுதந்திரமாக இப் பிரதேசத்தைச் சுற்றிப் பாருங்கள்'', படங்கள் எடுங்கள் எனத் தெரிவித்தனர். இதனையடுத்து ஊடகவியலாளர்கள் முகாம் பிரதேசத்தைச் சுற்றிப் பார்வையிட்டனர். ஓர் இடத்தில் இரு மாவீரர்களின் துயிலும் கல்லறைகள் காணப்பட்டன. 2ம் லெப்ரினன் கணேஸ் 2ம் லெப்ரினன் லிங்மா ஆகியோரின் பெயர்கள் காணப்பட்டன. இந்த இரு கல்லறைகளும் கடந்த 1993ம் ஆண்டு கட்டப் பட்டதாகும்.

இதனையடுத்து ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு அரசியல் பொறுப்பாளர் திலக், தாக்குதல் தளபதி விமல் ஆகியோர் பதிலளித்தனர்.

1990ம் ஆண்டிலிருந்து நாம் குரங்கு பாஞ்சான் பகுதியில் இருக்கிறோம். தற்போது இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தான் புலிகள் முகாமிட்டுள்ளார்கள் என்பதை ஏற்க முடியாது என அவர்கள் தெரிவித்தனர்.

அப்பிரதேசத்தில் அழிபாடுகளுடன் காணப்பட்ட ஒரு கட்டிடத்தை அவதானித்த ஊடகவியலாளர்கள் இது முஸ்லிம்களின் ஒரு பாடசாலையாக இருக்கலாம் என்ற சந்தேகத்துடன் இப்பிரதேசம் முஸ்லிம்களின் பிரதேசமா? எனக் கேட்கப்பட்டதற்கு திருமலை அரசியல் பொறுப்பாளர் பதில் அளிக்கையில் கடந்த 90ம் ஆண்டிலிருந்து நாம் இப்பிரதேசத்தில் இருக்கிறோம்.அதற்கு முன்னதாகவே முஸ்லிம்கள் இருந்திருக்கலாம் என்றார். இதனை முஸ்லிம் ஊடகவியலாளர்களால் கூட உறுதிப்படுத்த முடியவில்லை மேலும் சிங்கள ஊடகங்களின் தவறான பிரசாரமும் போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினரின் தவறான அறிக்கைகளுமே குரங்கு பாஞ்சான் விவகாரம் சர்வதேசங்களின் பேசப்படும் அளவிற்குச் சென்றது எனக் கண்டனம் தெரிவித்தனர். விடுதலைப்புலிகளின் முகாம் இருக்கும் பிரதேசத்திலிருந்து தாம் தம்பலகாமம் வரும் வரை சிறிலங்கா இராணுவத்தின் படை முகாமையோ காவலரண்களையோ காணவில்லை என ஊடகவியலாளர் குழு தெரிவித்துள்ளது.

இனிமேலாவது சிகல உறுமய கட்சியின் தலைவர் திலக் கருணாரத்தினா, ஜே.வி.பி.பொதுச் செயலாளர் விமல்வீரவம்ச, பாராளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டார நாயக்கா ஏன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவர்களெல்லாம் குரங்குபாஞ்சான் முகாம் விவகாரத்தை மிகப்படுத்தி குளிர்காய்வார்களா? தென்னிலங்கை ஊடகங்கள் இனிமேலாவது உண்மையினைநேரில் கண்டவற்றைத் தெளிவாக எழுதி தென்னிலங்கை மக்களிடையே உண்மையை உலகறியச் செய்ய வேண்டும்.

~வேணிதன் ~

# சொன்னாலும் குற்றம்




**மீன்பாடும் மாவட்டத்தில் ஆரையம்பதி தொடக்கம் வாழைச் சேனை வரையும் ஆறேழு இடங்களில் பாலர் வகுப்பு தொடக்கம் ஐந்தாம் வகுப்பு வரை தனியார் கல்வி நிலையத்தில் ஆள் வைத்து ''ஆங்கில மொழிப் பேச்சு'' வகுப்புக்களை நடாத்தும் அம்மணி ஒருத்தி அந்தக் கல்வி நிலையங்களில் உள்ள ஆயிரத்து நாநூறு மாணவர்களுக்கும் பரீட்சை நடத்துவதாகக் கூறி கடந்த ஏப்ரல் மாதம் ஒரு மாணவருக்கு 800 ரூபா வீதம் அறவிட்டது மட்டுமல்லாமல் சீருடையும தைக்கும் படி கட்டளையிட்டாவாம்.**

**ஆறு மாதமாகியும் பரீட்சையே நடக்கவில்லை. தைத்தெடுத்த சீருடைகளும் ஆறுமாதமானதால் அளவு சிறிதாகியுள்ளதாம். தேனகத்து வடபுறத்தில் உள்ள ஒரு அறிவுக்கந்தோரில ஆலோசகராகக் கடமையாற்றும் இந்த அம்மணி மாணவர்களிட்ட பரீட்சைக்காக அறவிட்ட முழுத் தொகை ஒரு இலட்சத்துக்கு மேலாம்.**


**பரீட்சைக்காகப் பணம் செலுத்தியும் ஆறு மாதமாகப் பரீட்சை இடம் பெறாமையினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் இந்த மெடத்திடம் எப்போது பரீட்சை எனக் கேட்டால் அதுவா? என இழுத்தடிக்கிறாவாம். சில பெற்றோர் அம்மணியிடம் கதைக்க பயமாம். என்ன காரணம் தெரியுமா? அவரின் கணவர் காக்கி உடை அணியும் காவல்துறையாளராம் எண்டு சனங்கள் கதைப்பதிலும் உண்மை இருக்கத்தான் செய்யுது.**

# இலங்கை அரசியலில் தமிழ் மொழி

**பூ.ம. செல்லத்துரை**



**இலங்கையில் தமிழ் மொழி பல நூற்றாண்டுகள் வழக்கிலிருந்து வந்த காரணத்தாலே தமிழ் மொழி அறிவும் சிங்கள மொழி அறிவும் கொண்ட மக்கள் சமுதாயம் ஒன்று பண்டைக்காலத்தில் உருவாகி இருந்தது.**



"கி.மு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே இலங்கையில் தமிழர்கள் பிரதான பங்கை வகுத்து வருகிறார்கள்" என கலாநிதி எஸ். பரணவிதான பிரமிக்கல் வெட்டுகளை வாசித்தறிந்து தெளிந்தபின் தானெழுதிய கட்டுரையில் எழுதியுள்ளார்.

''2ம் 3ம் நூற்றாண்டுக்கு முன்பே இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் செல்வாக்கு மிக்க தமிழர்கள் வாழ்ந்தார்கள்" என கிளாரன்ஸ் மலோனி கூறியுள்ளார்.

வடஇந்தியா பிரமிக்கல் வெட்டிலிருந்து வேறுபட்டதாக இலங்கை பிரமிக்கல் வெட்டுகள் காணப்படுகின்றன. ஆனால் தென்னிந்திய பிரமிக்கல் வெட்டுகளும் இலங்கை பிரமிக்கல் வெட்டுகளும் ஒத்திருந்தன. பௌத்தமதத்துடன் வட இந்திய பிரமிக்கல் வெட்டுகள் அறிமுகமாவதற்கு முன்பே தமிழ் நாட்டில் பரவிய தமிழ் பிரமிக் எழுத்துக்கள் இலங்கையில் பாவனையிலிருந்தன" என சிங்கள ஆய்வாளர்களான இ. பி. பெர்ணாண்டோ, சத்தமங்களம் கருணாரத்தின, ஆரிய ரூபசிங்கா போன்றோர் கூறியுள்ளனர்.

இந்த அறிஞர் பருமக்களின் கருத்துப்படி தமிழர் இலங்கையின் ஆதிக்குடியினர் என்பதற்கு வேறு மறுப்புக்கான ஆதாரமில்லை. இதை மேலும். உறுதி செய்யும் பொருட்டு மேல் நாட்டு அறிஞரான வாட்யின்றான் தானெழுதிய ரோம் சாம்ராஸ்சியத்திற்கும் - இந்தியாவுக்கும் இடைப்பட்ட வாணிபம் என்னும் நூலில் 125ம் பக்கத்தில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் முன்பே இலங்கையில் தமிழர் ஆட்சி நடைபெற்றது. தெற்கில் சிவனின் மகனான முருகனின் ஆட்சி இடம்பெற்றது. இலங்கையின் வட கிழக்கு மட்டுமின்றி தெற்கு மேற்குவரையுள்ள சகல பகுதிகளிலும் தமிழர் ஆட்சி இடம் பெற்றது என எழுதியுள்ளார்.

பௌத்த சிங்கள அறிஞர்களும் ஆய்வாளர்களின் கூற்றுப்படி பௌத்த பிரமிக் எழுத்துக்களுக்கு முந்தியது தமிழ் பிரமிக் எழுத்துக்கள் என்பது உறுதி. எனவே இலங்கையின் பூர்வீகத்திற்கு உரிமையும் சொந்தமு முடையவர்கள் தமிழர் என்பதை சகலரும் அறிவார்கள். ஆனால் சிங்கள அறிஞர்களிலும் அரசியல் வாதிகளிலும் பெரும்பான்மையினர் பன்னாடை அறிவுடையவர்களாக இருப்பதே நாட்டின் தூரதிஸ்டமாகும்.

தேவநம்பிய தீசன் இலங்கையின் மன்னனாக முடி சூடிய கால கட்டத்தில் இந்தியாவில் மன்னனாக அசோகனும் முடி சூடிக்கொண்டான். தேவநம்பிய தீசனின் தந்தை மூத்த சிவனாகும். தாய் மாந்தையை ஆண்ட தெய்வீக கம்மியர் பரம்பரையைச் சேர்ந்தவள். இவர்கள் சைவசமயத்தைச் சேர்ந்தவர்கள். அசோகனின் தாய் தந்தையாரும் சைவசமயத்தவர்கள். அசோகனுக்கும் தேவநம்பிய தீசனுக்கும் இடையில் ஏற்பட்ட நட்புகாரணமாக இலங்கையின் வரலாற்றில் ஒருபுதிய வழிபாட்டு முறைபுகுந்து- பரவத் தொடங்கியது. புதுவட்டி என்றால் ஏழு வட்டித் தண்ணீர் குடிப்பார்கள் என பழமொழி நம்மிடையே வழக்கிலுண்டு. அதுபோல புதிய வழிபாட்டு முறையை அரசர்களும் தழுவ குடிகளும் தழுவினார்கள். இது வரலாற்றில் காலம் காலமாக நடைபெறும் மரபாகும். தமிழரைத் தொடர்ந்து தமிழ் பௌத்தர்கள் என்ற புதிய இனம் புகுந்து, பரவியது. இலங்கையின் அரச பரம்பரை- நாகர் - இயக்கர், பாண்டியர், சோழர், பல்லவர் நாயக்கர், கலிங்கர் போன்றவர்களே அவர்கள் எல்லோரும் திராவிடர். தமிழைத்தாய் மொழியாகக் கொண்டவர்கள். இலங்கையின் அரசர்களாக பௌத்த தமிழர்கள் ஆட்சி செய்திருக்கிறார்களே ஒழிய பௌத்த சிங்களவர்கள் அன்னியர் ஆட்சிக்கு முன் ஆண்ட வரலாறில்லை. தீசன்- பாகு என்னும் எச்சத்தில் முடியும் முடிக்குரிய

இன்னுமொரு சிறப்பான இடத்திலும் தமிழ் மொழி வழங்கியதைக் காணலாம். இலங்கை மன்னர்கள் பலரும் பட்ட மேற்றதும் தங்கள் இயற்கைப் பெயர்களைத்துறந்து அரச பட்டப் பெயர்களையே ஏற்றுக் கொள்ளுகிறார்கள். இது பல நாடுகளில் நடைமுறையில் இருந்து வந்த மரபாகும். அவர்களின் பெரும்பான்மையோர். சேர- சோழ- பாண்டிய- பல்லவ- நாயக்க- கலிங்க பரம்பரையைச் சேர்ந்தவர்களாகும்.

இலங்கை மன்னர்களில் அரசபட்டப் பெயர்களில் ''பாகு" என்று முடிவு பெறும். பாகு என்றால் சத்தும் சுவையுமிக்க உணவு வகைகளைக் குறிக்கும். அவை திரட்சியாகவே இருக்கும். எள்ளுப்பாகு- உழுந்துப்பாகு- சீனிப்பாகு போன்றவை அவைமட்டுமன்றி ''பாகு" என்ற எச்சத்திற்கு- வீரம்- புகழ்- மக்கள் செல்வாக்கென்ற பொருள்களுமுண்டு. விஜயபாகு- வீரபாகு- விக்ரமபாகு- பராக்கிரமபாகு- புவனேகபாகு- என்பன இலங்கை மன்னர்களின் அரசபட்டப் பெயர்களாகும். இப் பெயர்களில் தமிழ் மரபு இருப்பதைக் காணலாம் என பிரித்தானியாவில் வெளிவந்த ''யுகம் மாறும்" என்னும் நூலில் ''இலங்கையின் மூத்த மொழி தமிழா" என்ற கட்டுரையில் ஆ. தேவராசன் கூறியுள்ளார். இலங்கையை ஆண்ட மன்னர்களில் பின்வருவோர் தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட மன்னர்களாகும்.

01. விஜயபாகு- கி.பி. 1070- 1111
02. விக்கிரமபாகு- கி.பி. 1116- 1139
03. மானாபரனன- கி.பி. 1230- 1244
04. 1ம்கஜபாகு- கி.பி. 171- 193
05. 5ம் புவனேகபாகு- கி.பி. 1344- 1354
06. 7ம் புவனேகபாகு- கி.பி. 1521- 1550
07. கீர்த்திஶ்ரீ இராஜசிங்கன்- கி.பி. 1777
08. விக்ரம சிங்கன்- கி.பி. 1815ம்

ஆண்டுவரை என சிங்கள சூளவம்சம் 70ம் பக்கத்திலும் கிரிநமுனே- 110(1778) பக்கத்திலும், கூறப்பட்டுள்ளது. கோட்டை மன்னன் 7ம் புவனேகபாகு தன் அரச ஆவணமனைத்தையும் தமிழிலே பதிவு செய்தான். கண்டி மன்னர்கள் தங்கள் வெளிநாட்டுத் தொடர்புகளை தமிழிலே வைத்திருந்தார்கள். என்பதை 1937ம் ஆண்டு வெளிவந்த (Historical Mahuccripities Commission) மூன்றாம் அறிக்கையில் இப்படிப்பட்ட 66தமிழ் கடிதங்கள் ஆங்கில மொழி பெயர்ப்பில் வெளி வந்துள்ளன.

கீர்த்தி ஶ்ரீ இராஜசிங்கன் கண்டியரசனாக இருக்கும் போது- சைவர்களின் நிருவாகத்திலிருந்த சிவனொளிபாதமலையின் நிருவாகத்தை பௌத்தர்களின் நிருவாகத்துக்குள் மாற்றியவன் என- எஸ்.ஜி.பெரேரா என்னும் கிறிஸ்தவப்போதகர் இலங்கை வரலாற்றில் கூறியுள்ளார். (HISTORY OF CEYLON)பக்கம்.277. இம் மன்னனே 17ம் நூற்றாண்டு வரை சைவப் பெரகராவாக நடைபெற்றுவந்த கண்டிப் பெரகராவை பௌத்தபெரகராவாக்கியவன் என றொபட் நொக்ஸ் இலங்கையின் சமயம் என்ற பெயரில் எழுதிய நூலில் கூறியுள்ளார். இப்படிப்பட்ட பௌத்த வெறியனான இராஜசிங்கன் ஒரு தமிழின்- இவனுக்கும் பிரான்சை ஆண்ட 16ம் லூகிக்குமிடையில் எழுதப்பட்ட நட்பு ஒப்பந்தம் பிரான்ஸ் மொழியிலோ அல்ல சிங்களத்திலோ எழுதப்படவில்லை. தனித் தமிழிலே எழுதப்பட்டிருக்கிறது .இதன் பிரதி இன்றும் பாண்டிச்சேரி நூதனசாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

அது போல் இலங்கையின் கடைசி மன்னனான ஶ்ரீவிக்கிரம சிங்கனுக்கும் பிரித்தானிய ஆட்சியாளருக்குமிடையில் 1815ம் ஆண்டு நடைபெற்ற கண்டி ஒப்பந்தத்தில் இன்றைய ஜனாதிபதியின் முப்பாட்டனான ரத்துவத்தை- தமிழிலே கையெழுத்து வைத்துள்ளார்.இதை தலதாமாளிகையின் நூதனசாலையில் காணலாம். அதுமட்டுமா அன்னியர் இந்த நாட்டில் கால் வைத்த போது இலங்கையில் யாழ்ப்பாணம்- கண்டி- கோட்டை அரசுகள் இருந்தன. இந்த மூன்று அரசர்களும் தமிழர்களேயாகும். அன்னியர் ஆட்சிக்கு முன் சிங்களம் ஆட்சி மொழியாகவோ அல்லது சிங்கள மன்னர்கள் ஆட்சி செய்த வரலாறு கேள்விக்குறியாகவே இருக்கிறது.

தேவநம்பிய தீசன் தொடக்கம் ஶ்ரீவிக்ரமசிங்கன் வரையுள்ள பௌத்த தமிழ் அரசர்களையே அரசுபட்டப் பெயரை மையமாக வைத்து- திரித்து பௌத்த சிங்களவர் எனக்கணித்து எழுதப்பட்ட வரலாற்றைத்தான்- தமிழ் பேராசிரியர்களும் கிளிப்பிள்ளை போல பார்த்தும் கேட்டும் எழுதி- எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான்- படித்தவன் பாட்டைக் கெடுத்தான் என மகாவம்சத்தாரினதும் சூளவம்சத்தாரின் தாளத்துக்கு பக்கவாத்தியம் வாசித்து- அங்கிகரித்து வந்த வினையே நம்மை வேதனைக்குள் மாட்டி விளையாடுகின்றது.



இலங்கையில் தமிழ் மொழி பல நூற்றாண்டுகள் வழக்கிலிருந்து வந்த காரணத்தாலே தமிழ் மொழி அறிவும் சிங்கள மொழி அறிவும் கொண்ட மக்கள் சமுதாயம் ஒன்று பண்டைக்காலத்தில் உருவாகி இருந்தது.

இச் சமுதாயத்திலிருந்த இரு மொழி அறிவு பெற்ற மக்கள் பற்றிக் கூறுவதற்கு ஆதாரம் எதுவுமே இல்லை. ஆயின் தமிழ் மொழிக்கும், சிங்கள மொழிக்கும் ஏற்பட்ட தொடர்பையும் தொடர்பு மூலம் சிங்கள மொழியில் தோன்றியவிளைவுகளை நோக்கும் போது, இருமொழி அறிவு கொண்ட மக்கள் சமுதாயம் ஒன்று இருந்தது என்பதையும், அச் சமுதாயம் மூலம்தமிழ் மொழியின் செல்வாக்கு குறிப்பிடத்தக்க அளவுக்கு சிங்கள மொழியில் பரவியதென்பது புலனாகின்றது.

தமிழ் சொற்கள் பலவற்றைத் தமிழ் மொழி அமைப்புக்களையும், சிங்கள மொழியில் காண்கிறோம்.

தமிழையும் சிங்களமொழியையும் ஒப்பு நோக்கி ஆய்வோர் சிங்கள மொழியையும், வட இந்திய மொழியான இந்தியையும் ஒப்பு நோக்கி ஆராய்ந்தால், தமிழ் மொழித் தொடர்பால் சிங்கள மொழியில் தோன்றியமொழி விளைவுகளை எளிதில் உணர்வார். இத்தனைக்கும் இலங்கைத் தமிழ் மொழியில் சிங்கள மொழியின் செல்வாக்கென்றோ, தொடர்பு என்றோ, எதையும் விதந்து கூறுவதற்கில்லை. முருங்கை என்னும் சொல்லைச் சிங்களச் சொல் என்று காட்டப்பட்டு வந்தது. ஆயின் அதுவும் திராவிட மொழிச் சொல் என்று அண்மையில் சான்றுகளுடன் நிலை நாட்டப்பட்டது என சமகால மொழியியல் அறிஞரான சு.சீந்திரராசா (1999:153-156)ல் தமிழ் சிங்கள மொழி பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

பேராசிரியரின் கூற்றை அடிப்படையாக வைத்து ஆராய்ந்தால் இரண்டு வகையில் பொருள் கொள்ள முடிகிறது. பெரும்பான்மையான தமிழர்கள் பௌத்தத்தை ஆதரித்ததால் தமிழோடு சிங்களத்தையும் ஏற்றுப் பேசினார்கள். - அந்த தமிழ்ப் பரம்பரை மறைய- அவர்களின் பிற்சந்ததியினர்- சிங்களத்தை ஏற்றுக் கொண்டனர். என்பது மற்றது- இலங்கையின் ஆட்சி மொழியாகவும் நீதிமன்ற மொழியாகவும் தமிழிருந்தபடியால் தமிழும் சிங்களமும் தெரிந்திருக்க வேண்டிய அவசியத்தால், இருமொழி தெரிந்த சமுதாயம் ஒன்று அமைந்திருந்தது என்பதாகும்.

எனவே இலங்கையின் மொழி தமிழ்- கடைசிக் கண்டி மன்னனின் காலத்திலும் இலங்கையில் தமிழ் மொழி ஆட்சி மொழியாகும். இலங்கையின் ஆதிமன்னனும் கடைசி மன்னனும் தமிழனாகும்.

இந்தியாவும் ஈழத்தமிழரும்

துரோகங்களின் அத்தியாயங்கள் - 28

புலிகளின் வரலாற்றில் இது இரண்டாவது சாகும் வரையிலான உண்ணா விரதப் போராட்டம் என்று கூறலாம்.

முதலாவது உண்ணாவிரதப் போராட்டம்

# திலீபனின் வரலாற்றுப் பயணம்



விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்களால், 1986 நவம்பர் நடுப்பகுதியில் சென்னையில் மேற்கொள்ளப் பட்டது.

1986ம் ஆண்டு நவம்பர் மாதம் 8ம் திகதி, புலிகளிடம் இருந்து ஆயுதங்கள், தொலைத் தொடர்பு கருவிகளை இந்திய அரசு கைப்பற்றி யிருந்ததைத் தொடர்ந்து, அவற்றை மீள ஒப்படைக்க வேண்டும் என்று கோரி, புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், நீர் கூட அருந்தாமல் சாகும் வரையிலான உண்ணா விரதத்தை மேற்கொண்டார். புலிகளின், குறிப்பாக பிரபாகரன் அவர்களின் தீவிர அனுதாபியாக இருந்த தமிழக முதலமைச்சர் எம்.ஜீ.ஆர். அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையால், இந்திய அரசு புலிகளிடம் இருந்து கைப்பற்றிய பொருட்களை மீள ஒப்படைக்க முன்வந்தது. அதனைத் தொடர்ந்து பிரபாகரன் அவர்களின் உண்ணாவிரதம் முடிவிற்கு வந்திருந்தது.

யாழ்ப்பாணத்தில் திலீபன் மேற்கொண்ட உண்ணாவிரதம், விடுதலைப் புலிகளின் வரலாற்றில் இரண்டாவது உண்ணாவிரதம். திலீபனும் தனது தலைவன் வழியில், நீர் கூட அருந்தாமலேயே உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்தார்.

புலிகளின் வரலாற்றில் இடம்பெற்ற இரண்டு உண்ணா விரதங்களுமே, இந்தியாவிற்கு எதிராக, இந்தியாவின் செயலைக் கண்டித்தே நடைபெற்றிருந்தன.

**- நிராஜ் டேவிட் -**

இந்தியாவைப் பொறுத்தவரையில், உண்ணாவிரதம் என்ற அகிம்சை வழிப் போராட்டம் ஒரு பாரிய உணர்வினை வெளிக்காண்பிக்கும் ஒரு விடயமாகவே இருந்து வந்தது. இந்தியாவின் தேசபிதா மகாத்மா காந்தி முதல், இந்தியாவின் அரசியல் தலைவர்கள் அனைவருமே உண்ணாவிரப் போராட்டங்கள் மூலமே பல விடயங்களைச் சாதித்திருந்த வரலாறு இந்தியாவின் சரித்திரத்தில் நிறையவே காணப்படுகின்றன. சாதாரணமாகவே இது போன்ற உண்ணாவிரதப் போராட்டங்களுக்கு, அது நியாயமாக இருக்கும் பட்சத்தில், செவிசாய்க்கும் வழக்கம் எந்தவொரு இந்திய அரசாங்கத்திற்கும் இருந்து வந்ததும் குறிப்பிடத்தக்கது.

தனது தமிழ் இனத்தின் நியாயமான கோரிக்கைக்கு இந்தியா நிச்சயம் செவிசாய்த்துவிடும் என்ற நம்பிக்கையில்தான் திலீபனும் இந்தியாவின் போக்கிற்கு எதிரான தனது போராட்டத்திற்கு ஆயுதமாக 'உண்ணா விரதத்தை' தேர்ந்தெடுத்திருந்தான்.

### திலீபனின் தியாகப் பயணம்:

15.09.1987 காலை 9.45 மணியளவில் யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள 'கந்தன் கருணை' என்னும் இல்லத்தில் இருந்து 'வோக்கி டோக்கி' சகிதமாக திலீபன் புறப்பட்டார். வேனில் ஏறுவதற்கு முன்னதாக, 'வோக்கி' மூலம் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் சிறிது நேரம் பேசி விட்டே, தனது வரலாற்றுப் பயணத்தை ஆரம்பித்தார். அது வரலாற்றில் என்றுமே மறைந்துவிடாத ஒரு பயணமாக அமையப்போகின்றது என்பதை திலீபன் அப்பொழுது அறிந்திருந்தாரோ தெரியவில்லை.

பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் பெருமளவில் கூடி நின்று திலீபனை வழியனுப்பி வைத்தார்கள்.

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் முன்பாக அமைக்கப்பட்டிருந்த உண்ணா விரத மேடையில், ஏற்கனவே சோகம் குடிகொண்டிருந்தது. தமிழ் மக்களால் அதிகம் நேசிக்கப்பட்ட ஒரு இளைஞன், இந்த மேடையில் தன்னை மாய்த்துக்கொள்ள முன்வரும் செய்தி ஏற்கனவே அங்கு திரண்டிருந்த மக்களின் நெஞ்சங்களைக் கனக்க வைத்திருந்தது.

'வானில்' வந்திறங்கிய திலீபனை, புலிகளின் பிரதித்தலைவர் மாத்தையா கட்டியணைத்து வரவேற்றார்.

கண்ணீருடன் ஒரு தாய் திலீபனின் நெற்றியில் வீரத் திலகமிட்டார்.

காலை 9.55 இற்கு உண்ணாவிரத மேடையில் வந்தமர்ந்த திலீபன், விடுதலைப் புலிகளின் சரித்திரத்தில் என்றுமே மறையாத ஒரு உன்னத பயணத்தை ஆரம்பித்தான்.

திலீபனின் உண்ணாவிரத மேடைக்கு அருகில் மற்றொரு மேடையும் அமைக்கப்பட்டிருந்தது. திலீபனின் உண்ணாவிரதத்திற்கு ஆதரவாக, இரண்டாவது மேடையில் உரைகள் நிகழ்த்தப்பட்டன.

கவிஞர் காசி ஆனந்தன், நடேசன் போன்ற முக்கியஸ்தர்கள், எதற்காக திலீபன் உண்ணா விரதம் இருக்கின்றார் என்றும், புலிகளின் நிலைப்பாடு பற்றியும் விளக்கமளித்தார்கள். திலீபனின் உண்ணா விரதத்திற்குத் துணையாக பலர் அடையாள உண்ணா விரதம் மேற்கொள்ள முன்வந்தார்கள். மாணவர்கள், ஆசிரியர்கள், தாய்மார்கள், பொதுமக்கள் என்று பலர், சுழற்சி முறையில் உண்ணா விரதத்தை மேற்கொண்டார்கள்.

திலீபனின் உண்ணாவிரத மேடையைச் சூழ பெரும் திரளான ஜனக்கூட்டம் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் காணப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு திரண்டிருந்தார்கள். யாழ்ப்பாணத்தின் குக்கிராமங்கள், மூலை முடுக்குகளில் இருந்தெல்லாம், இந்த வீர இளைஞனின் தியாகத்தைத் தரிசிக்க மக்கள் வெள்ளமெனத் திரண்டு வந்தபடி இருந்தார்கள். பாடசாலை மாணவர்கள் அணிஅணியாக அங்கு திரண்டு வந்தார்கள். உணர்ச்சிகரமான ஒரு சூழ்நிலை அங்கு உருவாக ஆரம்பித்திருந்தது.

இந்த இளைஞனின் முடிவிற்கு இந்தியாதான் காரணம் என்ற உண்மை அங்கு திரண்டிருந்த மக்களின் மனங்களில் படிப்படியாக உதிக்க ஆரம்பித்திருந்தது. இந்தியாவிற்கு எதிரான உணர்வலை, அங்கு திரண்டிருந்த ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் உள்ளங்களில் ஏற்பட ஆரம்பித்தது.

அங்கு திரண்டிருந்த தமிழ் மக்களது உணர்வுகளின் வெளிப்பாடுகள், இந்தியாவிற்கு எதிரான முணுமுணுப்புக்களாகவும், பின்னர் இந்தியப்படைகளுக்கு எதிரான கோஷங்களாகவும், மாற்றமடைய ஆரம்பித்தன. இந்தியப் படைகளுக்கு எதிரானதும், இந்தியாவின் போக்கிற்கு எதிரானதுமான ஒரு இறுக்கமான நிலை படிப்படியாக யாழ் மக்களின் மனங்களில் உருவெடுக்க ஆரம்பித்தன.

உண்ணாவிரதம் ஆரம்பமான தினம் இரவு 11 மணியளவில் பிரபாகரன் அவர்கள் திலீபனை பார்வையிட வந்திருந்தார். திலீபனுடன் பல விடயங்கள் பற்றி உரையாடிய பிரபாகரன், திலீபனின் தலையை வருடிவிட்டுச் சென்றார்.

### திலீபனின் உரை:

உண்ணாவிரதம் ஆரம்பமாகி இரண்டாவது நாள், திலீபன் உரை நிகழ்த்தினார்.

ஒரு துளி நீர் கூட அருந்தாமல் அவர் உண்ணாவிரதம் இருந்ததால், சிறுநீர் கழிக்க முடியாமல் அவர் பெரும் சிரமப்பட்டார். அதிக உடல் உபாதை காரணமாக மிகவும் கஷ்டங்களை அனுபவித்த அவரால் நின்று கொண்டு உரை நிகழ்த்த முடியவில்லை. அதனால் இருந்த நிலையிலேயே அவர் உரையாற்றினார்.

''எனது அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய மக்கள் அனைவருக்கும் எனது வணக்கம். நின்றுகொண்டு பேச முடியாத நிலையில் நான் இருப்பதால், இருந்துகொண்டே பேசுகின்றேன். நாளை நான் சுய நினைவுடன் இருப்பேனா என்று எனக்குத் தெரியாது. அதனால் இன்று உங்களுடன் பேசவேண்டும் என்று விரும்புகின்றேன்.

நாம் எமது இலட்சியத்தில் உறுதியாக இருக்கின்றோம். எமது இலட்சியப் போராட்டத்தில் இன்று வரையில் 650 போராளிகளை நாங்கள் இழந்துள்ளோம். மில்லர் இறுதியாகப் போகும் போது அவருடன் நான் கூட இருந்தேன். அவர் என்னிடம் ஒரு வரி கூறினார்: 'நான் எனது தாய் நாட்டிற்காக உயிர் துறப்பதை எண்ணும்போது, மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றேன். எமது மக்கள் விடுதலை அடைவதை எனது கண்களால் காணமுடியாது என்பதே எனது ஒரே ஏக்கம்' என்று கூறிவிட்டு, மில்லர் வெடிமருந்து நிரப்பிய லொறியை எடுத்துச் சென்றிருந்தார்.

எமது விடுதலைப் போரில் மரணித்த 650 போராளிகளும், அனேகமாக எனக்குத் தெரிந்துதான் மரணித்தார்கள். அவர்களை நான் மறக்கமாட்டேன்.


உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்க தலைவரின் அனுமதியைக் கேட்டேன். அப்பொழுது தலைவர் கூறிய வார்த்தைகள் எனது நினைவில் உள்ளன. ''திலீபா, நீ முன்னால் போ. நான் பின்னால் வருகின்றேன்'' என்று அவர் கூறினார்.

இத்தகைய ஒரு தெளிவான தலைவனை, தனது உயிரைச் சிறிது கூட மதிக்காத ஒரு தலைவனை நீங்கள் பெற்றிருக்கின்றீர்கள். அந்த மாபெரும் வீரனின் தலைமையில் ஒரு மக்கள் புரட்சி இங்கு வெடிக்கட்டும். அது நிச்சயமாகத் தமிழர்களின் அடிப்படை உரிமைகளை, தமிழீழத்தைப் பெற்றுத் தரும். அந்த அற்புதக் காட்சியை வானத்தில் இருந்து, அந்த 650 போராளிகளுடன் நானும் பார்த்து மகிழ்வேன்.'' என்று திலீபன் உரையாற்றினார்.

திலீபனின் உரை முடிவடைந்ததும், அங்கு திரண்டிருந்த மக்கள் கண்ணீர் விட்டார்கள். ஓவெனக் கதறி அழுதார்கள்.

**"நான் திலீபனை ஆழமாக நேசித்தேன். உறுதி வாய்ந்த ஒரு இலட்சியப் போராளி என்ற ரீதியில் அவன் மீது அளவு கடந்த பாசம் எனக்கு..."**

*- விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன்*



*துரோகம் தொடரும்....*

# மூவினச் சிறார்களும் சங்கமித்த அசைவும், இசைவும்

சிறுவர்களின் நலனைப் பேணும் வகையிலும், அவர்களின் உரிமையை மதிக்கும் வகையிலும் சர்வதேச சிறுவர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

சிறுவர்கள் என்று கூறும் போது 15 வயதிற்குட்பட்டவர்கள் அனைவரும் சிறுவர்கள்என்ற வரையறைக்குள் அடங்குவார்கள்.

சிறுவர்களின் உரிமை, அவர்களின் நலனை இந் நாட்டில் எடுத்து நோக்குவோமானால் எமது தாயகத்தில் உள்ள சிறுவர்களே அதிகளவில் கடந்த கால போர்ச் சூழல் காரணமாக சிறிலங்கா படைகளின் அடாவடித் தனங்களினால் பாதிப்புக்குள்ளாக் கப்பட்டுள்ளனர்.

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி தமிழர் புனர்



மூன்று மாவட்டங்களிலும் இருந்து தமிழ், முஸ்லிம், சிங்கள சிறுவர்கள் தமது இசைவும், அசைவும் மூலமாகத் தமது வெளிப்பாடுகளை மட்டுநகர் மண்ணில் ஒற்றுமையாக வெளிக்காட்டும் சந்தர்ப்பம் இச்சிறார்களுக்குக் கிடைத்துள்ளமை மீண்டும் ஒரு யுத்தம் இம்மண்ணில் இடம் பெறக் கூடாது என்ற நிலையை வெளிக்காட்டியது.

கடந்தகால சிங்களப் படைகளின் கொடுமைகளினால் தமது தாய் தந்தையர்களை கண் முன்னால் கொலை செய்த காட்சிகளையும், கொடுமை செய்த அவலங்களையும் நேரில் கண்ட ஆயிரக்கணக்கான சிறுவர்கள் இன்று இளைஞர்களாகவுள்ளனர்.

ஏதோ ஒரு வகையில் போர்ச் சூழல் காரணமாக சிங்களப் படைகளினால் நேரடியாகவும் அல்லது மறைமுகமாகவும் தமிழ்ச் சிறுவர்கள்

சுரைக்காய் போன்ற நிலைக்கு மாறி விடும் என்ற எண்ணம் பல பேரின் மத்தியில் இன்று தோன்றியுள்ளது.

இவ்வாறான நிலையில் சர்வதேச சிறுவர் தினமாக இருந்தாலும் வேறு எந்த தினமாக இருந்தாலும் வெறும் காட்சியாகவே அமையும். ஆன்மீகத் திற்காகவும், ஆன்மீகப் போதனைக ளுக்காகவும் மதகுருவாக காவி உடை தரித்த புத்த பிக்குகளின் பெரும் பாலானவர்கள் இன்று சமாதானத்தைக் குழப்புவதற்காக சண்டையை வலிந்து இழுக்கும் நோக்கில் செயற்படுகின்றனர். உண்மையில் இவர்களுக்குச் சிறுவர்களைப் பற்றிய முழுஅக்கறை இருக்க வாய்ப்பு இல்லை. ஏனெனில் இவ்வாறான மதகுருமார் சட்டப்படி திருமணம் முடிக்க முடியாதுதானே அதனால் தான் போலும் சமாதானத்தை குழப்புவதற்கான சூத்திரதாரிகளாகச் செயல்படுகிறார்கள் என எண்ணத் தோன்றுகின்றது.

இவ்வாறான துறவிக ளுக்கு நாட்டின்மீதும், மக்களின் மீதும், நாட்டுச் சிறுவர்கள் மீதும்அக்கறையும் அனுதாபமும் இருக்குமானால் பேரினவாத சிங்களக் கட்சிகளுடன் இணைந்து சமாதானத்தைக் குழப்பும் பேரணியில் பங்கெடுத்திருக்க மாட்டார்கள்.

எமது நாட்டில் இடம் பெற்ற. போரின் நிமிர்த்தம் ஆயிரக் கணக்கான சிறுவர்களுக்குப் பல நிறுவனங்கள் உதவுகின்ற போதும் இவ்வாறானவர்களின் கண்களுக்குப் படாமல் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் தமது குடும்பச் சுமைகளைத் தாங்கிக் கொண்டு எமது தாயகத்தில் விறகு வெட்டி விற்பனை செய்பவர்களாகவும், தெருக்களில் பிச்சை எடுப்பவர்களாகவும், கடலை, பருப்பு போன்ற பொருட்களை விற்பனை செய்பவர்களாகவும்

வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் கடந்த வாரம் மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் இரண்டு நிகழ்வுகள் இடம் பெற்றன. இரண்டு நிகழ்வுகளிலும் சின்னஞ் சிறார்களின் "இசைவும் அசைவும்" நிகழ்வுகள் சிறுவர்களின் ஆக்கத் திறனை வெளிப்படுத்தி யவையாகவே அமைந்தன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம் பெற்ற இந்நிகழ்வானது மூன்று இன சிறார்களையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வரும் நிகழ்வாக அமைந்தமை பலரினதும் கவனத்தை ஈர்ந்தவையாக இருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

இரண்டு சசாப்தகால போர் காரணமாக எமது தாயக மண்ணில் பல வழிகளாலும் பாதிக்கப்பட்டவர்கள் சிறுவர்கள் மட்டுமல்ல பெரியவர்களும்

**சமாதானம் என்பது ஏட்டுச் சுரைக்காய் போன்ற நிலைக்கு மாறி விடும் என்ற எண்ணம் பல பேரின் மத்தியில் இன்று தோன்றியுள்ளது.**

தான். மூன்று இன மக்களும் ஒன்றாக இணைந்து ஒரு நிகழ்வை நடாத்திய வரலாறு மட்டக்களப்பில் இடம் பெறவில்லை. ஆனால் தற்போது இருபது மாதமாக யுத்தம் ஓய்ந்த இவ்வேளை யில் கிழக்கு மாகாணத்தில் திருகோண மலை, மட்டக்களப்பு, அம்பாறை, ஆகிய

பாதிக்கப்பட்டே வந்துள்ளனர். தென்னிலங்கையில் உள்ள சிறுவர்களுக்கு இருக்கும் வாய்ப்பும் வசதிகளும் எமது தாயகத்தில் உள்ள சிறுவர்களுக்குக் கிடைப்பதில்லை.

பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவும் நோக்கில் இன்று பல தரப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களும், தனிப்பட்டசிலரும் உதவுகின்றனர். எவ்வாறான உதவிகளையும் வாய்ப்புக்களையும் வழங்கினாலும் சிறுவர்களாக இருக்கும் போது தமது தாய் , தந்தையர், சுற்றம் சூழல் என்பவற்றில் கடந்த போர் காரணமாக நடந்த அவலங்களை மறக்க முடியாதவர்களாகவே இவர்கள் வாழ்கின்றனர்.

மட்டக்களப்பில் இடம் பெற்ற சிறுவர் தின நிகழ்வில் அனேகமான இசைவும் அசைவும் ஒற்றுமையைப் பற்றியதாக அமைந்திருந்தமையை காணக் கூடியதாக இருந்தது.

சிறுவர்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும், நண்பர்களாக வாழ வேண்டும் என்பதை மட்டும் சித்தரிக்கும் நிகழ்ச்சிகளை மட்டும் காட்டி விட்டால் ஒற்றுமை வந்து விடும் என்று அர்த்தமில்லை.

மீண்டும் எமது மண்ணில் பிறக்கும் சிறார்கள் அவல வாழ்வு வாழாமல் இருக்க வேண்டுமானால் சிங்கள அரசானது உண்மைகளை உணர்ந்து தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைக் கொடுப்பதன் மூலமே இன்னும் ஒரு யுத்தம் இந்த நாட்டில் எழாமல் இருக்கும்.

தற்போது அவ்வாறான ஒரு தீர்வை சிங்கள அரசு வழங்குமா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. கடந்த கால சிங்கள அரசியல் தலைவர்கள் தமிழ் மக்களின் உரிமையைக் கொடுப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பாதயாத்திரைகளை நடாத்திய அதே பாணியில் இன்றும் பல பாத யாத்திரைகள் சமாதானத்தைக் குழப்புவதற்காக இடம் பெற்றுவரும் இவ் வேளையில் சமாதானம் என்பது ஏட்டுச்

ஆலயங்களில் கற்பூரம் விற்பனை செய்பவர்களாகவும் உள்ளனர்.

இவ்வாறான சிறார்களை மட்டுமல்ல இச்சிறார்களின் பெற்றோரையும் முன்னேற்றக் கூடிய திட்டங்களையும் இவ்வாறான சிறுவர் நலன் நிறுவனங்கள் முன்னேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்த முக்கியமான ஒன்று எமது தாயகத்தில் உள்ள தமிழ் சிறார்களின் ஆக்கத் தொழில்பாடுகளைச் சீரழிக்கும் நோக்கில் பல ஊடகங்கள் இன்று செயல்பட்டுக் கொண்டிருப்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். சிலர் இதைத் தெரிந்தும் அலட்டிக் கொள்ளாமலும் இருக்கினறனர்.

குறிப்பாக தொலைக்காட்சிகளில் காலை முதல் இரவு பத்து மணி வரை ஒளிபரப்பப்படும் இந்தியத் தமிழ் நாடகங்களை வீட்டில் இருக்கும் சிறுவர்கள் தொடக்கம் கிழடுகள் வரை

**-பாத்திரன்-**

எல்லா நேரமும் பார்க்கின்றனர்.

இதனால் சிறுவர்களின் சிந்தனை ஆக்கத் தொழில்பாட்டில் இருந்து அழிவுத் தொழிற்பாட்டிற்கு இட்டுச் செல்கின்றது என்பது உண்மை.

பொழுது போக்கிற்காக சிறுவர்கள் வீடு கட்டி, பட்டம் கட்டி, தோட்டம் செய்து விளையாடும் நிலை மாறி இப்போது மௌனமாகத் தமிழ்ச் சினிமாப் படங்களையும் , நாடகங்களையும் பார்த்து அந்த நடிகர்களின் பெயர்களையும், நாடக சம்பவங்களையும் மட்டும் மனதில் பதிக்கும் நிலை மாறியுள்ளது. இது குறிப்பாகத் தமிழ்த் தேசியத்தைக் குழி தோண்டிப் புதைக்கும் செயல் என்பது காலப்போக்கிலாவது பெற்றோர் உணருவார்களா? என்பது கேள்விக்குறிதான் .

எனவே சர்வதேச சிறுவர் தீனத்தில் மட்டும் சிறுவர்களை நினைக்காமால் எல்லா நாளும் அவர்களின் நலனைப் பேண அனைவரும் உழைப்பதே இன்றைய தேவையாகும்.

---

பகிரங்கமடல்

அலைமகன் எழுதும் பகிரங்கமடல்.



## நல்ல மாட்டுக்கு ஒரு குறிபோதும் ஆனால்...

**சிகல உறுமய கட்சியின் தலைவர் திலக் கருணா ரேத்தினாவுக்கு!**

அண்மையில் தான் ஒரு மடல் எழுதியிருந்தேன். நல்ல மாட்டுக்கு ஒரு குறிபோதும் என்பார்கள். அதுபோல நீங்கள் திருந்துவதாக இருந்திருந்தால் இந்த மடல் எழுத வேண்டிய அவசியம் இருந்திருக்காது எனக்கூறி மடலை தொடர விடுகிறேன்.

கடந்த வாரம் ஒருநாள் காலையில் ஊடகங்களில் உங்கள் செய்திக்கு எவ்வளவு முக்கியத்துவம், அதுவும் குரங்குபாஞ்சான் விடுத லைப்புலிகளின் முகாமை பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா ஒரு வாரகா லத்திற்குள் அகற்ற வேண்டும். அகற்றாவிட்டால் தெற்கிலிருந்து சிங்கள மக்களைப் படைதிரட்டி முகாமை அழித்து விடுவோம். இந்தச் செய்தி காதில் விழுந்ததும் சிரிப்பதா? அழுவதா? என்பது எனக்குப் புரியவில்லை.

வன்னிப் பெருநிலப்பரப்பை மீட்பேன் எனத் தன்னை சிங்கள தேசத்தின் மீட்சியாளனாகக் காட்டிப் படையணி நடத்திய ரத்வத்தை கனவு பலித்ததா? ஆயிரக்கணக்கான சிங்களச் சிப்பாய்களைப் பலி கொடுத்ததுதான் மிச்சம்.

இது போல இன்னும் எத்தனையோ சிறிலங்காப் படைத் தளபதிகள், அமைச்சர்கள் சூழுரை எல்லாம் பொய்யாகிப் போனவை கடந்த போராட்ட வரலாற்றில் நாம் கண்ட உண்மை.

இப்போது இந்தத் திலக் கருணாரெத்தின மட்டும் தமிழினத்தின் விடுதலைப் படைமீது உதைப்பது சுலபமான காரியமா? இப்படித்தான் எண்ணத் தோன்றுகிறது எனக்கு.

போர் ஒய்வு நிலையில் ஓர் புரிந்துணர்வு உடன்படிக்கை. புரிந்துனர்வு உடன்படிக்கையை அமுல் படுத்த முடியாதவாறு சிங்கள இனவாதிகளின் எதிர்ப்பலைகள் அவர்களில் ஒருவராக அவர்களை உற்சாகமூட்டும் வகையில் நீங்கள் உறுமி நிற்பது தமிழினத்திற்கு விரோதமான செயல்.

குரங்குபாஞ்சானில் புலிகள் முகாம் அமைத்திருப்பதால் உங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு என்ன? முகாமை அகற்றுவதால் ஏற்படப் போகும் இலாபம் என்ன?

தமிழினத்தின் தாயக நிலப்பரப்பைச் சிங்களப் படைகள் ஆக்கிர மித்திருக்கிறது. உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் தமிழ் நிலம் சிங்கள தேசப் படைகளால் ஆக்கிரமிக்கப் பட்டிருப்பதைப் பார்த்து தமிழினம்தான் பொங்கி எழுந்து படைமுகாமை முற்றுகையிட்டு "எங்கள் நிலத்தில் உங்களுக்கு என்ன வேலை என்று" கேட்க வேண்டும்.

தொடர்ந்து நில ஆக்கிரமிப்பில் சிங்களப் படைகள் இருந்தால் எங்கள் நிலத்தை நாங்கள் மீட்டெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை இதில் தப்போ தவறோ இருக்க மாட்டாது.

இப்போது நீங்கள் குரங்கு பாஞ்சானுக்குப் போய் புலிகளை எதிர்க்க வேண்டாம். முடிந்தால் ஒரு கணம் வன்னிக்கு உங்கள் சிங்கள மக்களைப் படை நடத்திச் சென்று பாருங்கள் எல்லாம் புரியும்.

குருடன் கொப்புத் தேனுக்கு ஆசைப்படுவது போல அரசியல் இருப்பைப் பலப்படுத்துவதற்காக இனவாதத்தை மட்டும் சிங்கள தேசத்தில் விதைக்காது தமிழினத்தின் உரிமைகள், அபிலாசைகள் என்ன என்பதை யதார்த்தமாக உணர்ந்து கொண்டாலே போதும்.

இவ்வண்ணம்

*அலைமகன்*

# வம்பில் மாட்டிக்கொண்ட வடிவேலு



கல்யாணமே ஆகாமல் பெண்ணைத் தேடி அலைந்து கொண்டு இருக்கும் கல்யாண சுந்தரம். ஒருநாள் கல்யாண சுந்தரம் ஒரு டீ கடையில் நின்று டீ சாப்பிட்டுக் கொண்டு இருந்தார். எதிரில் பருமனான ஒரு ஆள் நின்று கொண்டிருந்தார். அந்த வழியாக சென்ற சரவணன் இருவரையும் அழைத்து, இது ஒரு கோடி ரூபாய் பரிசு விழுகிற லாட்டரி டிக்கெட் உங்களுக்கு ஆளுக்கு ஒன்று தருகிறேன் போய் பிழைச்சுக்கிங்க என்று ஆளுக்கு ஒரு லாட்டரி டிக்கெட்டை கொடுத்தான். இருவரும் சந்தோஷமாக வாங்கிக் கொண்டு ரொம்ப நன்றி அண்ணே என்று மனதார வாழ்த்தினார்கள்.

அதுசரி ஒரு கோடி ரூபாய் பரிசு விழுந்தால் நீ என்ன பண்ணீவே என்று கல்யாண சுந்தரத்திடம் கேட்க, நான் ஒரு ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் வாங்குவேன் என்றான். பருமனான ஆளோ நான் இரண்டாயிரம் மாடுகளை வாங்கி மாட்டுப் பண்ணை வைப்பேன் என்றான். உடனே சரவணன் மாடுகளை எங்கே மேய விடுவே என்று கேட்க, அதுதான் இவன் ஆயிரம் ஏக்கர் நிலம் வாங்கிறான் இல்லே அங்கே மேய விடுவேன் என்றான். உடனே கல்யாண சுந்தரம், அது எப்படி என் இடத்துல உன் மாட்டை மேய விடுவே என்று கேட்க. அப்படித் தான் விடுவேனன் நீ என் னடா பண்ணீவ என்று ஒருத்தருக்கு ஒருத்தர் அடித்துக் கொண்டு தகராறு செய்ய ஆரம்பித்தார்கள். நீண்ட நேரம் இருவரும் அடித்துக் கொள்வதை ரசித்துக் கொண்டிருந்த சரவணன் டேய் முட்டாளுங்களா தமிழ்நாடு அரசு லாட்டரி டிக்கெட்டை தடை செஞ்சி ரொம்ப நாள் ஆகுது. இது தெரியாம இப்படி அடிச்சுக்கிறிங்களே நியாயமா என்று விலக்கி விட்டு ஸ்டைலாக சென்றான். அதற்குப் பிறகு தான் இருவருமதாங்கள் எப்படி ஏமாற்றப்பட்டோம் என்று யோசித்துக் கொண்டிருந்தார்கள்.

இப்படி ஒரு காட்சி வெரைட்டி பிரேம்ஸ் காதல் கிறுக்கன் படத்துக்காக படமாக்கப்பட்டது.

## திரை பிம்பங்கள்

# பிள்ளையாரின் நண்பன் தனுஷ்



ரோஜா கம்பைன்ஸ் சார்பாக எம்,காஜாமைதீன் மிகபிரமாண்டமாக தயாரிக்கும் படம் தேவதையை கண்டேன்.

இப்படத்தில் தனுஷ் வித்தியாசமான வேடமிட்டு நடிக்கிறார். அதாவது துள்ளுவதோ இளமையில் விடலைப் பையன், காதல் கொண்டேனில் காதலுக்காக ஏங்கும் வாலிபன், திருடா திருடி படத்தில் பொறுப்பில்லாமல் திரியும் வாலிபன் என்று நடித்த தனுஷ், இந்த படத்தில் டீ விற்கும் வாலிபனாக நடிக்கிறார். தனுஷ்க்கு ஒரே ஒரு நண்பன். அது யார் என்றால், தெரு ஓரத்தில் இருக்கும் பிள்ளையார் கோயில் பிள்ளையார்தான். தனுஷ்க்கு ஏதாவது கஷ்டம் என்று வந்தால் பிள்ளையாரிடம் போய் உரிமையுடன் சண்டையும் போடுவான், நல்லது நடந்தால் தோழமையுடன் நன்றியும் சொல்வான் என்பது மாதிரியான கதாபாத்திரம் தனுஷ்க்கு. இப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் பெசன்ட் நகரில் உள்ள அறுபடை வீடு முருகன் கோயிலில் நடைபெற்றது.

# ஜெயசூரியா

*அர்ஜுன் நடிக்கும் ஜெயசூர்யா என்ற புதிய படத்தை குரு பிலிம்ஸ் சார்பில் தயாராகும் ஐந்தாவது படமாகும். குருபார்வை வானவில்லா, ராஜ்ஜியமா ஐ லவ் யூடா படத்தை தொடர்ந்து தயாராகும் படம் ஜெயசூர்யா இதில் அர்ஜுன் ஜோடியாக இரண்டு மும்பை நடிகைகள் நடிக்கிறார்கள் மற்றும் பிரகாஷ்ராஜ், வடிவேலு, சூரியபிரகாஷ், வினோத், ஸ்ரீவித்யா மற்றும் பலர் நடிக்கின்றனர்.*



வின்னர் படத்தில் பிரசாந்த், கிரண்

# பறக்கும் கண் ஆஸ்பத்திரி

உலகத்திலேயே முதற் தடவையாக பறக்கும் கண் ஆஸ்பத்திரி ஒன்று இயங்கி வருகிறது. விமானத்தில் இயங்கி வருவதால் இது பறக்கும் ஆஸ்பத்திரி (Flying Hospital) என பெயர் பெற்றுள்ளது.பீ.ஸி.ரக விமானத்தில் இயங்கும் இந்த பறக்கும் ஆஸ்பத்திரி விமானம் அண்மையில் சென்னை விமான நிலையம் வந்தது. இத்துடன் 14 தடவைகள் இந்த ஆஸ்பத்திரி சென்னைக்கு வந்துள்ளது.'ஏர்பீஸ்' எனும் பெயர் சூட்டப்பட்டுள்ள இந்த ஆஸ்பத்திரி உலகில் உள்ள எந்தவொரு விமான நிலையத்திறகும் சொந்தமானதல்ல.

உலகப்புகழ் பெற்ற 23 கண் வைத்திய நிபுணர்கள் இந்த விமானத்தில் சேவையாற்றுகின்றனர். வருடத்தில் மூன்று நாடுகளுக்குச் செல்லும் இந்த ஆஸ்பத்திரி டாக்டர்கள் அந்நாட்டில் சேவையாற்றுவதுடன், மருத்துவ ஆலோசனைகளையும் அங்குள்ள டாக்டர்களுக்கு வழங்குகின்றனர். 'ஏர்பீஸ்' என்பது அடிமரிக்காவில் உள்ள ஒரு தர்ம ஸ்தாபனத்தின் பெயராகும். இதன் அடிப்படையிலேயே அமெரிக்க விமான சேவை டி.8 ரக விமானத்தை இந்த ஆஸ்பத்திரிக்காக அன்பளிப்புச் செய்தது. இந்த விமானத்திற்கும் நவீன தொழில்நுட்பமுறையிலான சகல மருத்துவ வசதிகளும் உண்டு.'எர்பீஸ்' ஆஸ்பத்திரியின் நிர்வாகச் சேவைகளுக்காக வருடாந்தம் 2 கோடியே 50 இலட்சம் அமெரிக்க டொலர் தேவைப்படுகிறது.

இந்த ஆஸ்பத்திரி 80க்கும் மேற்பட்ட நாடுகளில் இதுவரை தனது சேவையை விரிவுபடுத்தியுள்ளது. 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட டாக்டர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது. 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட நோயாளர்களுக்கு சத்திர சிகிச்சை அளித்துள்ளது. இதில் உள்ள ஆபரேஷன் தியேட்டரில் கண் சம்பந்தமான சகல விதமான ஆபரேசன்களும் செய்யக்கூடிய விதத்தில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

# உலகில் வயது குறைந்த குட்டி தாய்

ஐந்து வயதில் தாயான பெண் உலகிலேயே குட்டி தாய் லீனா 63 வருடங்களுக்கு முன் பெரு நாட்டின் அந்திஸ் மலைப்பிரதேசத்தில் பின்தங்கிய கிராமத்தில் பிறந்தார்.பிறக்கும் போதே லீனா வாட்டசாட்டமான குழந்தையாக இருந்தார். ஐந்து வயதில் லீனா மதீனாவுக்கு கடுமையான வயிற்றுவலி ஏற்பட்டது. வயிற்றில் கட்டி ஒன்று இருக்கலாம் என்றே ஆரம்பத்தில் நம்பப்பட்டது.இவரது பெற்றோர் உடனடியாக ஆஸ்பத்திரியில் கொண்டு போய் சேர்த்தனர். பரிசோதித்துப் பார்த்த டாக்டர்களுக்கோ அதிர்ச்சி ஒரு மாதகாலத்தின் பின்னர் லீனா அழகான ஆண்குழந்தை ஒன்றை பெற்றெடுத்தாள்.இதன் மூலம் அவளது பெயர் உலகப் பிரசித்திபெற்றது. உலகிலேயே வயது குறைந்த தாய் என்ற பட்டத்தைபெற்றாள் லீனா.மக்கள் திரண்டனர் அவளை பார்ப்பதற்காக வெளிநாடுகளிலும் இருந்தும் மக்கள் திரண்டுவந்தனர்.ஐந்து வயதில் தாயான லீனாவுக்கு மன ஆறுதல் வழங்கிய பெரு அரசு. குழந்தையை வளர்த்து ஆளாக்குவதற்கான சகல செலவினங்களையும்செய்வதாக உறுதி அளித்தது.

1939 ஆம் ஆண்டு உறுதி அளிக்கப்பட்டது.எனினும் அரசு அந்தஉறுதியை காப்பாற்றத்தவறிவிட்டது. 63 வருடங்களுக்கு பின் அதாவது இன்று தனது கணவருடன் பெருநாட்டின் லீமா நகரில் மிக வறிய நிலையில் வாழ்ந்து வருகிறார் லீனா. இவரது மகள் தனது 40 வயதில் அதாவது 1979ஆம் ஆண்டு நோய்வாயப்பட்டு மரணமானார். மதீனா மிகவும் வறிய நிலையில் வாழ்வதால் பெருநாட்டின் புறக்கணிப்பு தற்போது பூதாகரமான பிரச்சினையாக உருவாகியுள்ளது.லீனா மதீனா ஐந்து வயதில் தாயானது எப்படி? இவரது கர்ப்பத்திற்கு யார் காரணம் எல்லாமே மர்மமாகவே இருந்தது.பிறப்பிலேயே ஏற்பட்ட ஒன்றா என்று கூடசந்தேகம் வந்தது.

ஆனால் இவை எவையும் உறுதிப்படுத்தப்படவில்லை. ஐந்து வயதிலும் அவள் தாய்மையடையக்கூடிய சகல உடல் வளர்ச்சியையும் பெற்றிருந்தது டாக்டர்களுக்கே பெரும் ஆச்சரியத்தை அளித்துள்ளது.லீனாவின் கர்ப்பத்திற்கு அவளது தந்தையே காரணம் என முன்னர் கருதப்பட்டது. இதனால் அவளது தந்தை கைது செய்யப்பட்டு விளக்க மறியலிலும் வைக்கப்பட்டார். இருந்தாலும் உரிய சாட்சிகள் இல்லாததால் இவர் விடுதலை செய்யப்பட்டார். சிசேரியன் சத்திர சிகிச்சை மூலம் இவருக்கு குழந்தை பிறந்தது.

# வாசகர் இதயம்

என் சுவாசமான தமிழே — *த*
என் வாசமான அலையே
நீ அள்ளித் தரும் — *மி*
தெள்ளு தமிழ் தலைப்புக்களோ
இனிமை, அதைச் சொல்லித் தரும் — *ழ்*
உறவுகளோ, புதுமை!
நானும் உன்னிடம் ஒன்று
கேட்கிறேன்.
நான் தமிழின் வாசகி — *அ*
தமிழ் அலைகளின் நேசகி
சுகமான தமிழின் சுவாசகி — *லை*
கன்னிச் சுடரான அலைச்சுடர்
பிரகாசித்து எரிய உன் நிழல் வாழி! — *யே!*
நீ வாழி! உன் நியம் பெருகி நீ
நீடூழி வாழி!

தமிழ் வாசகி, மண்டூர் -03

**உன் இதயத்தில் இடம் பிடித்த**
எனது அபிமான நண்பி தமிழ் அலையே உன்னை நான் வாரா வாரம் சந்திப்பதன் மூலம் அளவிலா மகிழ்ச்சி அடைகின்றேன். தனிமைக்குத் துணையாக கவலைக்கு மருந்தாக சிந்தனைக்கு விருந்தாக நீ வெளியிடும் அத்தனை அம்சங்களும் அருமை மென் மேலும் உன் சேவை இன்னும்
புதிய புதிய அம்சங்களை தொடர வாழ்த்தி விடை பெறும் நான்.

ஆ. தயாழினி, கடுக்காமுனை

**எங்கள் இதயத்தில் இடம் பிடித்த அலையே!**

இமை கொட்டாமல் பார்க்கத் தூண்டும் அலையே் நீ தூவும் மலர்களாகிய பக்கங்கள் நீளுமா? உன் முன்னழகு தெள்ளமுது அலையே உன் 25வது இதழ் கண்டு அளவில்லா ஆனந்தமடைந்தேன். நீ 25வது வாரத்தில் தவழ்ந்து 50வது வாரத்தில் அன்ன நடை பயின்று எம் கரம் வருவாய். அலையே உன் 26வது இதழில் நீ சுமந்து வந்த அரிவையர் அலை, சிறுவர் சிகரம் பக்கங்கள், கண்ணைப் பறித்தது. அலையே. உன் உடலை வண்ணப் படங்கள் கொண்டு அலங்கரிப் பவருக்கு எனது அன்பின் பணிவு. அலையே நீ நாளிதளாக வெளிவருவதையிட்டு மகிழ்ச்சி யடைகிறேன். அலையே. மேலும் நீ அழகுற்று கடலலையாய் தவழ்ந்து வர வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

இ.ரேக்கா,செங்கலடி

**என் இனிய தமிழ் அலையே!**
போடியார் பொறி வெடி வைத்தால் - நான் சொன்னாலும் குற்றமாகி விடும். அரிவையர் அலையை பார்த்தவுடன் பகிரங்க மடல் எழுதுகின்றேன்.

அலையின் தேடலில்
திரைபிம்பங்கள் மட்டுமல்ல
சிறுவர் சிகரமும் - என்
மனதைத் தொட்டு விட்டன.

அழியாச் செல்வம் மூலம்
கணனி கற்போம் என்றேன் - அது
நகைச்சுவை முற்றத்தில்
சிறுகதையை எழுத விட்டு விட்டது.

கவிதைக் களம் மூலம்
தமிழ் அலை பரிசுக் குவியல் பெற
குறுக்கெழுத்துப் போட்டிக்கு
சென்றேன் - அருமையாக கிடைத்தது.

தமிழ் ஈழத்தை தெரிந்து கொள்ள
காத்திரனிடம் பதில் கேட்டேன்.
தேடலும் பகிர்வும் என பதிலளித்தார்.

அலையின் பார்வையில் இருந்து
கந்தப் போடியும் கலந்தர் லெவ்வையும்
தப்பவே முடியாது.

அலை அலையாக தினம்
வருகை தர - என்
மனம் கனிந்த வாழ்த்துக்கள்.

*செல்வி. கயல்விழி - புண்ணியமூர்த்தி*
*இசை நடனக் கல்லூரி வீதி*
*நொச்சிமுனை, மட்டக்களப்பு*

*வாரம் ஒரு முறை முத்தமிட்டுப் போகும் அன்பான தமிழ் அலையே! காலத்துக் கேற்ற கருத்துக்களைத் தாங்கி, பல புதிய அம்சங்களையும் தருகின்றாய்.உன் ஆக்கங்கள் அனைத்தும் அருமை குறிப்பாக முன் பக்க அட்டைப் படம், சிறுகதை, தொடர் நாவல்,நகைச்சுவை, கவிதைக் களம், என்பன என்னைக் கவர்ந்தவை. அலையே் உன் சேவை தமிழரின் இறுதி மூச்சு உள்ளவரை தொடர எனது வாழ்த்துக்கள்.*

*சஜீவன், சோலையூர்*

# பெண்கள்

## வாய் விட்டு சிரிக்க வழி இல்லையா?

அன்று தொட்டு இன்று வரை சில இடங்களில் பழமொழி சொல்லிச் சொல்லியே... பெண்களின்



முன்னேற்றத்துக்குத் தடை விதிக்கும் முதியோர் சமூதாயம். சிரித்தால் நடந்தால், அழுதால், ராத்திரியில் தலை சீவினால் சாஸ்திரம் சொல்லி சோஸ்திரம் செய்யும் உலகம். பெண் வாய் விட்டுச் சிரிக்க வழியில்லை. அலங்காரம் பண்ணிக் கொள்ள வாய்ப்பில்லை. செவ்வாய் புதன் குளிக்கக் கூடாது. இப்படியெல்லாம் சொல்லிச் சொல்லியே பெண்ணின் கண்களில் கண்ணீரை வரவைக்கும் முதியோர் வீதியில் செல்லும் போது தனிமையில் செல்லக் கூடாது, வீட்டை விட்டு வேலைக்கு செல்லுவது தவறு என்பது சிறு வயதிலேயே விருப்பமற்ற திருமணம் செய்து கொடுப்பது ஊர் பெயர் நல்லவனா கெட்டவனா என அறியாமல் குடிகாரனை மணமுடித்துக் கொடுப்பதும், கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்று புல்லை வணங்கச் சொல்வதும் வழக்கமாகி உள்ளது. முதியோர்களே சற்றுச் சிந்தித்ததுண்டா?

நீங்கள் வாழ்ந்த காலம் வேறு. இப்போது இருக்கும் காலம் வேறு. நீங்கள் வாழ்ந்த காலத்தில் கணவனை கண் கண்ட தெய்வமாக மதித்த காலம். ''வீட்டைத் தவிர நீங்கள் எந்தச் சொர்க்கத்தையும் பார்த்திருக்க முடியாது. ஆறு வயதில் நீங்கள் அணிந்த ஆடையை இப்போது உங்களால் அணிந்து கொள்ள முடியுமா என்ன? அன்றைய காலத்தில் பெண்கள் வீதியில் தனிமையில் நடக்க முடியாது ஆனால் இப்போது அப்படியல்ல பெண் கூண்டுக் கிளி போல் வாழ்ந்த வாழ்க்கையெல்லாம் காற்றடித்துக் கலைந்து விட்டது. இப்போது தனிமையில் வீதியில் புதுமைப் பெண்ணாகப் புரட்சிப் பெண்ணாக எந்த ஆடவர்கள் கிட்ட நெருங்க வந்தாலும் காலில் உள்ள செருப்புத்தான் ஆணுக்கு பதில் சொல்லும் நிலையாக மாறி வருகிறது. முதியோரே பழமொழி சொல்லி உங்கள் பிள்ளைகளை வீட்டிற்குள் வைத்திருந்தீர்கள். அவர்கள் முன்னேறுவதற்கு எந்த உரிமையும் கொடுக்கவில்லை. பிறந்தோம் வாழ்ந்தோம் இறந்தோம் என்றிருந்தார்கள். இன்றைய பெண்கள் பிறந்தோம். சாதனை படைத்தோம், இறந்தாலும் கவலையில்லை எனச் சொல்கின்றனர்.

இறைவன் நம்மைப் படைத்தது சாப்பிடுவதற்கும் தூங்குவதற்கும் வேலை செய்வதற்கும் திருமணம் செய்வதற்கும் தான் என்று நினைப்பது தவறு.

முதியோரே உங்கள் பேரபிள்ளைகளை யாவது மற்றவர்கள் புகழும் படியாக மற்றவர்களுக்காக எதையும் சாதிக்கவைக்க வேண்டும். பிறந்துள்ளோம் சாதனை படைக்க வேண்டும். சகுனம், பழமொழி, சாஸ்திரம் எல்லாவற்றையும் விட்டு இன்றையப் பெண்களை அர்த்தம் உள்ள வாழ்க்கைக்குள் வாழ வைக்க வேண்டும். அப்போதுதான் வாழ்க்கையில் பெண்ணினமும் பெண் சமுதாயமும் முன்னேற முடியும். பாட்டிமார்களே பேரப் பிள்ளைகளை சகல துறைகளிலும் ஈடுபாடு உள்ள பெண்ணாகக் கட்டியெழுப்புவீர்கள். என்ற

சிவலிங்கம் - சுமதி
ஏறாவூர்-04


**பெண்களே!**

உங்கள் ஆக்கங்களை இப்பகுதியில் பிரசுரிக்க தமிழ்அலை களம் அமைத்து காத்திருக்கின்றது. தரமான ஆக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

அரிவையர் அலை
தமிழ்அலை
பிரதான வீதி
கொக்கட்டிச்சோலை.


## மருத்துவக் குறிப்புகள்

### தும்மல் குணமாக....

சளி பிடித்துக் கொண்டு தும்மல் தும்மலாக வருகிறதா? எந்த வேலையையும் செய்ய விடாது சிரமப்படுத்தும். தும்மலில் இருந்து விடுதலை பெற கொஞ்சம் மிளகை எடுத்துப் பொடி செய்து மெல்லிய துணியினால் முடிச்சாகக் கட்டிக் கொண்டு அதிகாலையில் குளித்தவுடன் தலை உச்சியில் ஐந்தாறு நிமிடங்கள் அதை தேய்த்து வாருங்கள் குணமாகி விடும்.


### வயிற்றுப் புண் குணமாக...

வயிற்றில் புண் ஏற்பட்டால் வலிக்கும், எரியும் இதனால் பெரும் சிரமமாக இருக்கும். வயிற்றில் புண் ஏற்பட்டவர்களுக்கு வாயில் கூட புண் ஏற்படும். இவர்கள் காரமான உணவு உட்கொள்ளாது குளிர்மையான உணவுகளையே உட் கொள்ள வேண்டும். மாம்பருப்பை எடுத்து தக்காளிச் சாறு விட்டு அரைத்து சிறு மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி எடுத்து காலை,மாலை இரண்டு மாத்திரைகள் வீதம் ஆறு வாரங்கள் சாப்பிட்டு வர வயிற்றுப் புண் குணமடையும்.

### மூட்டு வீக்கம் குணமடைய...

மூட்டுக்களில் வரும் வீக்கம், (முழங்கால்) வலி இவைகள் குணமாக வேலிப்பருத்தி இலைச் சாறு எடுத்து (அரை லீற்றர்) அதில் ஒரு ரூபாய் எடை புதுச் சுண்ணாம்பு நீறு போட்டு நன்றாகக் கரைத்து ஒரு மணி நேரம் வைத்து எடுத்து வீக்கம், வலி உள்ள மூட்டுக்களில் தடவி நன்றாக தேய்க்க வேண்டும். ஒரு மணி நேரத்தில் குணமாகும்.

## தொழிலில் பெண்களா?



தொழில் என்பது வாழ்க்கையில் மிக அத்தியாவசியமானது.அதிலும் பெண்கள் சிறப்பிடம் பெறுகிறார்கள். தொழில் புரியும் பெண்கள தமக்கென்று ஒரு சில கொள்கைகளை வகுத்துக் கொண்டால் தான் தங்கள் பாதையைத் தீர்மானிப்பது இலகுவாக இருக்கும்.

முதலில் உங்கள் அலுவலகத்தைப் பற்றிய அனைத்து விடயங்களையும் தெரிந்திருங்கள். பிரச்சினைக்குரிய ஆளாக இருக்காமல் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடியவராக இருங்கள். வேலையைத் திட்டமிட்டுக் குறித்த நேரத்திற்குள் செய்து முடியுங்கள்.




உங்களை விட உயர் பதவிகளில் இருப்பவர்களுக்கு மரியாதை கொடுங்கள். ஆனால் உங்களின் தரத்திலிருந்து வேலை செய்பவர் உயரதிகாரியின் தோரணையில் இருந்தால் மரியாதை கொடுக்காதீர்கள்.அவரைத் திருத்தப் பாருங்கள். அது நீடிக்குமாயின் நீங்கள் மட்டம் தட்டப்படுவீர்கள்.


வேலைக்குச் சேர்ந்த முதல் நாள் இருந்த சுறு சுறுப்பும், ஈடுபாடும், எதிர் பார்ப்புக்களும் ஒவ்வொரு நாளும் தொடர வேண்டும். எந்தத் துறையில் உங்களுக்கு ஆர்வம் உள்ளதோ அத் துறையில் ஈடுபட மேலதிகாரியிடம் அனுமதி பெற்றுக் கொள்ளுங்கள்.

வீட்டுப் பிரச்சினையோ, தனிப் பிரச்சினையோ எக் காரணம் கொண்டும் அலுவலகத்தில் வெளிப்படுத்தாதீர்கள். உங்கள் திறமை, புத்திசாதுரியத்தை முடிந்த வரை நிருபித்து காட்டுங்கள். ஆனால் உங்களை நீங்களே பாராட்டிக் கொள்ளாதீர்கள். பாராட்டுக் கிடைத்தால் பெரு மதிப்புக் கொள்ளாதீர்கள். ஏச்சுக் கிடைத்தாலும் கவலைப்படாதீர்கள்.

நல்ல வாய்ப்பைத் தேடிச் செல்வது வாழ்க்கையின் இயல்பு. அப்படிச் சென்றால் முன்பு வேலை செய்த அலுவலகத்தை, இடத்தைக் குறை கூற வேண்டாம்.

- கவிதா -

## உருளைக் கிழங்கு அல்வா



*தேவையான பொருட்கள் :-*

உருளைக்கிழங்கு-1/2கி.கி
சீனி -1/2கி.கி
மாஜெரின் - 100கி
ஏலம்,கறுவா,வெனிலா சிறிதளவு

*செய்முறை* -

உருளைக்கிழங்கை அவித்து தோல் நீக்கி நன்றாக நசிக்கவும். பின் சீனியை இட்டுக் கிளறவும். சட்டியில் ஒட்டாதவாறு வந்ததும் $^{3}/_{4}$பங்கு மாஜெரின் விட்டு கிளறவும். பின் ஏலம் கறுவா, வெனிலா விட்டுக் கிளறி இறக்கவும். இறக்கியவுடன் மாஜெரின் பூசிய தட்டில் ஊற்றி சமப்படுத்தி துண்டு துண்டாக வெட்டிப் பரிமாறலாம்.

*கவிதா, மூர்த்தி, நாவற்குடா*

## பல் சொத்தைக்கு உமிழ் நீரும் ஒரு காரணம்

**நாம் சாப்பிடும் உணவை நனைத்துக் குழையச் செய்ய உதவுவது உமிழ் நீர தான். இந்த உமிழ் நீர சிலருக்குக் கேடு விளைவித்து விடும். சிலருடைய உமிழ் நீரில் அமிலத் தன்மை அதிகமிருக்கும். இதிலுள்ள பற்பல ஊக்கு நீரகளும் இவற்றோடு சேர்ந்து பற்சொத்தையை உண்டாக்கும் சாத்தியங்கள் உள்ளன. உமிழ் நீர சுரக்கும் அளவு குறைந்தாலோ அல்லது மாறுபட்டாலோ சொத்தை உண்டாகும். லாக்டோ பேசிலஸ் பக்டீயாவின் வளர்ச்சியைத் தடை செய்யும் ஆற்றல் உமிழ் நீரில் இருக்கிறது. இத்திறன் குறைந்தால் கிருமிகள் தாக்க ஆரம்பித்து விடும். இதைத் தவிர பாரம் பரியமாகவும் சொத்தை ஏற்பட வாய்ப்பிருக்கிறது.**

*சிவப்பிரகாசம் - அருந்தா. காந்திபுரம். பழுகாமம்*

## புன்னகை மருந்து.....



ஆத்ம புனிதத்தை
பூக்கள் கொண்டு
பூஜிக்கும் அறிவிலியே!
சிற்றின்பங்களில் சிக்கி
வாழ்வைத் தேடி
வளமான வாழ்வை
சீரழிக்க நீ மாமியாரை
சிரம் தாழ்த்துகிறாயே நியாயமா!
மாமனார் மாமியாரை
மாதா பிதாவாக
மதித்து நடந்திடு
வாழ்த்திடுவார் உன்னை
புகுந்த வீட்டை
புன்னகையால் அலங்கரி
அதன் பின் அங்கு நீ தான் அரசி
நீ வைத்தது தான் சட்டம்.

## கனவுகளே, கனவுகளே நிஜம்தானா?

கனவுகளைப் பற்றிப் பல வித்தியாசமான விளக்கங்கள் கொடுக்கப்பட்டாலும் இற்றை வரை யாராலும் எந்த விளக்கமும் நிரூபிக்கப்படவில்லை. கனவுகள் பல காரணங்களுக்காக முக்கியத்துவப்படுத்தப்படுகின்றன. கனவுகள் நமது அன்றாட வாழ்க்கையைச் சுலபமாகக் கையாளுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவை நமது மனதைத் தெளிவு படச் செய்கின்றன.

நீங்கள் காணும் கனவுகள் எவற்றைப் பிரதி பலிக்கின்றன எனப் பார்ப்போமா?

* ஏமாற்றப்படல்

நீங்கள் உங்கள் கனவில் யாராலும் ஏமாற்றப்பட்டதாகக் கனவு கண்டால் நீங்கள் காதலில் வெற்றி அடைவீர்கள்.நீங்கள் யாரையும் ஏமாற்றியதாகக் கனவு கண்டால் உங்களுக்குப் பிரச்சினைகள் தோன்றும் என்று அர்த்தம். பிறர் யாரையும் ஏமாற்றுவதாகக் கனவு கண்டால் நீங்கள் முக்கியமான செய்தி ஒன்றை எதிர் பார்க்கலாம் என்று அர்த்தம்.

* கடத்தப்படல்

நீங்கள் யாராலும் கடத்தப்பட்டால் உங்கள் பிரச்சினைகளிலிருந்து மீட்கப்படுகிறீர்கள் என அர்த்தம். யாரும் கடத்தப்படுவதைக் கனவில் கண்டால் எதிர் பாராத முக்கிய செய்தி உங்களுக்குக் கிடைக்கும் என்று அர்த்தம்.

(அடுத்த இதழில் தொடரும்)

# சிறுவர் சிகரம்

## அறிவாளியும் படகோட்டியும்

ஓர் ஊரில் ஒரு கல்வி கற்றவன் வாழ்ந்து வந்தான். இவன் தனது கல்வியைப் பற்றி அகந்தை கொண்டிருந்தான்.

இவனுக்கு ஒரு நாள் ஓர் ஆற்றைக் கடக்க வேண்டியிருந்தது. எனவே, படகு இறங்குதுறையிலிருந்த படகோட்டியின் உதவியை நாடினான்.

படகோட்டியும் அறிஞனை அக்கரைக்கு படகில் கூட்டிச் செல்வதற்கு இசைந்தான். அறிவாளி படகில் ஏறிக் கொண்டான்.

படகோட்டியும் தனது பலங்கொண்ட கரங்களால் துடுப்பை வலித்தான். படகு நீரைக் கிழித்துக் கொண்டு முன்னேறியது.

அறிஞன் படகோட்டியைப் பார்த்துக் கேட்டான் ''நீ படித்திருக்கிறாயா''. படகோட்டி கூறினான் ''நான் மழைக்குக் கூட பாடசாலை பக்கம் ஒதுங்கியதில்லை. ஐயா! நான் அறிந்ததெல்லாம் இந்தப் படகு இறங்குத் துறையையும் படகையும் தான்''.

அறிஞன் கூறினான், அப்படியானால் உன் வாழ்க்கை வீணே கழிந்துள்ளது. நீ எதற்கும் தகுதியில்லாதவன்''. படகோட்டிக்கு அவமானமாக இருந்தது. அப்போது பெரும் மழை பெய்யத் தொடங்கியது. ஆறு பெருக்கெடுக்கத் தொடங்கியது. ஆற்றின் வேகத்தையும் தாங்க முடியாத படகு புரண்டது. இருவரும் ஆற்றில் விழுந்தனர்.



அறிஞனுக்கோ, கொஞ்சமும் நீந்தத் தெரியாது. அவன் பரிதாபமாக மூழ்கிக் கொண்டிருந்தான். படகோட்டி, நீந்தி அவனிடம் வந்து, அவன் தலை முடியைப் பிடித்து மேலே இழுத்து வந்து அவனிடம் கேட்டான், ஐயா நான் ஒன்றுக்கும் தகுதியில்லாதவனா?''. அறிவாளி கூறினான், ''இல்லை, இல்லை, வாழ்க்கைப் போக்கிற்கான தொழிற்பாடுகளை பயின்றிருத்தலும் தகமையே என்பதை நான் இப்பொழுது உணர்கிறேன்''.

த.ஜிவசங்கரி

தரம் 2^V, மட்/ விவேகானந்தா மகளிர் ம.வி.

## சிந்தனைத் துளிகள்

01. தீய நண்பர்களுடன் நட்பு வைக்காதே! தக்க தருணத்தில் உன்னைக் கைவிட்டு விடுவார்கள்.

02. அதிகமான நண்பர்கள் இருக்க வேண்டும் என்று எண்ணாதே; ஒரு நல்ல நண்பன் "ஆயிரம் நண்பர்களை விட சிறந்தவன்.

03. தன்னிடம் கேட்டு வருபவர்களுக்கு இல்லையென்று சொல்லாதே; ஒரு நாள் நீயும் கேட்டுச் செல்ல வேண்டி ஏற்படலாம்.

04. தாய்,தந்தையரின் பேச்சைக் கேட்டு நட; வளமான எதிர் காலம் உன்னைத் தேடி வரும்.

05. எவர் வீடாயினும் அடிக்கடி செல்லாதே; அது உன் கௌரவத்தையே குறைத்து விடும்.

06. தேவையில்லாதவர்களிடம். அதிகமாக தொடர்பு வைக்காதே; அது உன்னைச் சிக்கலில் மாட்டி விடும்.

07. வயது மூத்தவர்களுடன் மிகவும் அன்னியோன்யமாகப் பழகாதே; அது உன்னையே சங்கடமான நிலைக்கு ஆளாக்கிவிடும்.

08. எல்லையில்லாத நட்பில் தான் உண்மையான அன்பு நிறைந்துள்ளது.

பொ. சசிதரன், தரம்- 12

மட்/ மண்டூர் ம.வி

## பாலர் பாடல்



காசி கொடுத்து பாப்பா ஒன்று
கடையில் வாங்கி வந்தோமே.
பொட்டு வைத்துப் பார்ப்பேன்
பூ வைத்துப் பார்ப்பேன்.
பேசச் சொன்னால் பேசாது
பாடச் சொன்னால் பாடாது.
பேச்சி மூச்சி இல்லை
மருந்து கொண்டு வாருங்கோ.

நதீஸ்வரன். வக்சலன்
பாலர்பாடசாலை
கொக்கட்டிச்சோலை


## நாடுகளும் அதன் தேசிய பறவைகளும்

01. இலங்கை- காட்டுக்கோழி
02. இந்தியா- ஆண்மயில்
03. மலேசியா- மாயா
04. ஜப்பான்- பச்சைக் கொண்டை காட்டுக் கோழி
05. இங்கிலாந்து- ரொபின்
06. டென் மார்க்- வானம் பாடி
07. ஜேர்மனி- வெள்ளைக் கொக்கு
08. கொலம்பியா- பருந்து
09. ஐக்கியஅமெரிக்கா- வழுக்கைத் தலைக் கழுகு

கோ. கோகிலா, தரம்- 07

மட்/ தாளங்குடா ஸ்ரீ விநாயகர் வித்தியாலயம்.

## எரி நட்சத்திரம் (METEOR)



வானவீதியில் சிலசமயம் இயற்கையின் அழகிய வாணவேடிக்கைகளைக் கண்டிருப்பீர்கள். வானத்தின் ஒரு பக்கம் இருந்து மறுபக்கம் ஒரு பிரகாசமான ஜோதி வேகமாகச் சென்று மறையும். செல்லும் போது பலபல நிறங்களோடு செல்வதும் உண்டு. இவற்றை எரி நட்சத்திரம் என்பர். வானவெளியில் இருந்து வந்த துகள்கள் காற்று மண்டலத்தில் உராய்வதால் எரிந்து விழுகின்றன. அவை நொடிக்குச் சுமார் 30மைல் வேகத்தில் செல்லும் பொழுது காற்றோடு உராய்வதால் உண்டாகும் மிகுந்த வெப்பத்தால் காற்றில் உள்ள பிராண வாயுவோடு சேர்ந்து எரிந்து ஆவியாகி விடுகின்றன. எரியும் போது இவ்ஆவியில் உள்ள பல மூலகங்கள் காரணமாக வண்ண ஒளி உண்டாகின்றது.

வானவீதியில் கடும் வேகத்தில் சுழன்று செல்லும் கோள்களின் ஒரு பகுதி ஏதோ காரணத்தால் சிதைவுற்று வானவெளியில் வேகமாக விழுகின்றது. பூமியின் அருகே அவை வந்தவுடன் புவியீர்ப்புக்கு உள்ளாகி பூமியை நோக்கி மிக வேகத்தில் காற்று மண்டலத்தில் நுழையும் போது உராய்ந்து தீப்பிடித்து எரிகின்றது. அவ்வாறு வெளியில் இருந்து வரும் துகள்கள் முழுவதும் எரிந்து விடுவதில்லை. சில சமயங்களில் எரிந்து போக எஞ்சிய கற்கள் பூமியின் மேல் விழுவதுண்டு. அவற்றை ''விண்சுடர் கற்கள்'' என்பர். இவற்றில் இரும்பு, நிக்கல் முதலிய உலோகப் பொருட்கள் காணப்படுகின்றன. இவ்வாறான கற்களைப் பெரிய கண்காட்சி சாலைகளில் காணலாம்.

க.தர்ணிகா தரம் 9S

மட்/விஸ்ணு மகாவித்தியாலயம்

வந்தாறுமூலை.

## நாடுகளும் அதன் தலைநகரங்களும்

01. இலங்கை- சிறிஜயவர்த்தனபுர.
02. இந்தியா- புதுடெல்லி.
03. அமெரிக்கா- வொஷிங்டன்.
04. ஆப்கானிஸ்தான்- காபூல்.
05. இங்கிலாந்து- இலண்டன்.
06. பிரான்ஸ்- பாரிஸ்.
07. நேபாளம்- காத்மண்டு.
08. பாகிஸ்தான்- இஸ்லாமாபாத்.
09. மலேசியா- கோலாலம்பூர்.
10. ஜப்பான்- டோக்கியோ.
11. சீனா- பீஜிங்.
12. தாய்லாந்து- பாங்கொக்.
13. ஜெர்மனி- பெர்லின்.
14. சவூதிஅரேபியா- றியாத்.
15. பிரேசில்- பிரேசிலியா.
16. ஈரான்- தக்ரான்.
17. ஈராக்- பக்தாத்.
18. நோர்வே- ஒஸ்லோ.
19. கனடா- ஒட்டாவா.
20. ரஷ்யா- மொஸ்கோ.

யோ.ஜீவகன்.
மட்/ கல்லடி முகத்துவாரம் விபுலானந்தா வித்தியாலயம்.

## சில குறிப்புக்கள் ''மனிதவாழ்வில்.....''

01. வருவதும் போவதும்:- இன்பம், துன்பம்.
02. வந்தால் போகாதது:-புகழ், பழி
03. போனால் வராதது:- மானம், உயிர்,
04. தானாக வருவது:- இளமை, முதுமை
05. நம்முடன் வருவது:- பாவம், புண்ணியம்
06. அடக்க முடியாதது:- ஆசை, துக்கம்.
07. தவிர்க்க முடியாதது:- பசி, தாகம்.
08. பிரிக்க முடியாதது:- பந்தம், பாசம்.
09. அழிவைத் தருவது:- பொறாமை, கோபம்.
10. எல்லோருக்கும் சமமானது:- பிறப்பு, இறப்பு.



இ. கோமதி,
திலகவதியார் மகளிர் இல்லம்,
திருப்பழுகாமம்.

## விஞ்ஞான விளக்கம்

*** தக்காளி விற்பனை செய்யும் வியாபாரிகள் பெரும்பாலும் தக்காளிக் குவியலுக்கு மேலாக சிவப்பு நிறப் பொலித்தீனால் கூரை அமைப்பதுண்டு.**

சூரிய ஒளி பல நிறங்களைக் கொண்டது. சிவப்பு பொலித்தீனின் ஊடாக சூரியஒளியில் உள்ள சிவப்பு ஒளி மட்டுமே ஊடுருவிச்செல்லும். எனவே சிவப்புப் பொலித்தீனின் கீழ் உள்ள பகுதி சிவப்பு நிறமாகத் தென்படும். இவ்வாறாக ஊடுருவும் செந்நிறம் காரணமாக தக்காளிப் பழங்கள் மேலும் செந்நிறமாகக் காட்சியளிக்கும்.

*** இறைச்சி சமைக்கும் போதுஇறைச்சியை மென்மையாக்குவதற்காக அதனுடன் பப்பாசிக்காய்த் துண்டுகள் சேர்க்கப்படுவதுண்டு.**

இறைச்சியில் புரதம் அடங்கியுள்ளது. இறைச்சிமென்மை அடைவதற்கு புரதம் சமிபாடு அடைவதற்குபுரதச் சமிபாட்டு நொதியம் (பப்பேன்) தேவை. பாப்பாசிப் பாலில் புரதச் சமிபாட்டு நொதியம் அடங்கியுள்ளது.

*** சுடப்பட்ட சுண்ணாம்பில் நீர் இடும் போது வெப்பம் உண்டாகும். ஆனால் யூரியாவில் நீர் இடும் போது குளிர்ச்சி உண்டாகும்.**

சுட்ட சுண்ணாம்பின் மீது நீர் இட்டதும் புற வெப்பத்தாக்கம் நிகழும். யூரியாவுடன் நீர் சேர்க்கப்பட்டதும் அக வெப்பத்தாக்கம் நிகழும் புற வெப்பத்தாக்கத்தின் போது குழல் சூடாகும். அகவெப்பத் தாக்கத்தின் போது குழல் குளிர்ச்சியடையும்.

*** சயன அறைகளில் அலங்காரத்திற்காக வைக்கப்பட்டுள்ள பச்சை நிறத் தாவரங்கள் இரவில் அகற்றப்படுகின்றன.**

பச்சைத் தாவரங்கள் இரவு நேரங்களில் ஒளித்தொகுப்பு நிகழ்வதில்லை. சுவாசம் மட்டும் நடைபெறுகின்றது.இதன் போது சயன அறையில் உள்ள ஒட்சிசனின் அளவு குறைகிறது. காபனீரொட்சைட்டின் அளவு அதிகரிக்கின்றது.

*** விறகுக் குற்றியாக எரிவதிலும் பார்க்க அக்குற்றி துண்டுகளாக வெட்டப்பட்டிருக்கும் போது எளிதாக எரியும்.**

விறகுக் குற்றியை விட விறகுத் துண்டுகளின் மேற்பரப்பளவு அதிகம். அப்போது $O_2$ (தகனத்துணையிவளி ) உடன் மோதும் மேற்பரப்பு அதிக மாகின்றாது சிறிய விறகுத்துண்டுகள் எரிபற்று நிலை அடைதல் விரைவாக நிகழ்கின்றது. இதனால் விறகுத்துண்டுகள் விரைவாக எரிகின்றது.

நா.மதிவதனி, தரம்.11^K மட்/ கன்னன்குடா. ம.வி.

## விடுகதைகளும் விடைகளும்

**01. எங்கள் வீட்டிற்கும் அடுத்த வீட்டிற்கும் டப்பா டப்பா. அது என்ன?**
**02. நீரிலே பிறந்தவன் நீரிலே அழிவான். அவன் யார்?**
**03. தள்ளாடித் தள்ளாடி வந்தாலும் தவறாமல் கரை சேர்ப்பான். அவன் யார்?**
**04. வாழ்நாள் முழுக்க வாயை மூடாதவன். அவன் யார்?**
**05. கொக்கு நிற்க குளம் வற்றுகின்றது. அது என்ன?**
**06. ஒரு குப்பிக்குள் இரண்டு எண்ணெய். அது என்ன?**
**07. ஓர் அகப்பை பாலெடுத்து ஊரெல்லாம் கலியாணம். அது என்ன?**
**08. உயிரில்லாத நீதிபதி ஒழுங்காகத் தீர்ப்பு வழங்குவார். அவர் யார்?**
**09. ஒற்றுமையின் பண்பை உண்பதில் வெளிக்காட்டுவான். அவன் யார்?**
**10. பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்து. அது என்ன?**

விடைகள்

01. சுளகு
02. உப்பு
03. படகு
04. தபால்பெட்டி
05. விளக்கும் எண்ணெயும்
06. முட்டை
07. நிலா
08. தராசு
09. காகம்
10. வெண்டிக்காய்

ஜீ. நிலக்ஷன்
தரம்- 05
மட்/ ஆரைப்பற்றை
சுப்பிரமணியம் வித்தியாலயம்
ஆரையம்பதி- 01




# 5ம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான வினாக்களும் விடைகளும்

## புலமை துரித மீட்டல் -2003
## வினாத் தாள் -03
## பகுதி -1

*பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக?

**புழுதி துடைத்து நீரும் ஆட்டி**
**பொட்டும் வைக்கும் அம்மா**
**அழுதிடாமல் பள்ளிக்கூடம்**
**அடையச் செய்யும் அம்மா**
**பள்ளிக்கூடம் விட்ட நேரம்**
**பாதி வழிக்கு வந்து**
**துள்ளிக் குதித்து என்னைத்தூக்கி**
**தோளில் போடும் அம்மா**

1) இப் பாடலில் பாடலாசிரியர் யாரைப்பற்றிக் கூறுகின்றார்?
2) பள்ளிக்கூடம் செல்வதற்கு முன் சிறுமிக்கு அவர் அம்மா செய்யும் இரு செயல்கள் எவை?
3) பள்ளிக்கூடம் விட்ட பின்அம்மா என்ன செய்கிறாள்?

*** ஒத்த கருத்துச் சொல் தருக?**
4) அழுதல் -
5) புழுதி -

*** எதிர் கருத்துச் சொல் தருக?**
6) அழுதல் -
7) வருதல் -

*** தொடர்பு படுத்துக?**

| | |
|---|---|
| 8) வட கிழக்கு | *யுத்தம் பணம் கொடுக்கல் வாங்கல்* |
| 9) வங்கிகளின் உபயோகம் | *வனவிலங்குகளால் ஆபத்து* |
| 10) அதிக மழை வீழ்ச்சி | *அகதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு* |
| 11) காடழிப்பு | *வெள்ளப் பெருக்கு அபாயம* |

* கீழே கலை அம்சங்களுடன் சம்பந்தப்பட்ட சொற்கள் தரப்படுகின்றன. அவற்றிற்கு உரித்தான இலக்கங்களைப் பொருத்தமான வினாவிற்கு நேரே எழுதுக?

1) உடுக்கு 2)சிகிரியா 3)தாள வகைகளில் ஒன்று
4) பூபாளம் 5) எலக்ரோனிக் ஓகன் 6) செம்பு நடனம்

### இலங்கையில் சித்திர வேலைப்பாடுகள் அமைந்த


12) குகை.......................................................... இதுவாகும்.
13) கிராமிய நடனங்களுள் ................................ ஒன்று.
14) தோல் வாத்தியங்களுள் ............................. ஒன்று.
15) ஏக தாளம் ..........................................................
16) காலையில் பாடும் ராகம் ......................................
17) சகல வாத்தியங்களின் ஓசையெழுப்பும் நவீன கருவி ஒன்று ..........................................................

*** தொடர்பு படுத்துக.**

| | |
|---|---|
| 18) மலைகளின் கூட்டம் | குவியல் |
| 19) திறப்புக்களின் கூட்டம் | கொத்து |
| 20) கற்களின் கூட்டம் | குலை |
| 21) பூக்களின் கூட்டம் | மந்தை |
| 22) ஆடுகளின் கூட்டம் | சனம் |
| 23) மனிதர்களின் கூட்டம் | தொடர் |
| 24) பழங்களின் கூட்டம் | கோர்வை |


### கீழே தரப்படுவனவற்றினை அவதானித்து அதன் கீழ் தரப்படும் படிவத்தினை நிரப்புக?

மட்டக்களப்பு, மக்கள் வங்கி வீதி, இல.-116 என்னும் முகவரியில் வதியும் கனகசபை - காந்தன் என்பவர் பியகம ஆடைத்தொழிற்சாலையில் வேலை செய்யும் தனது நண்பனான மாமாங்கம் - மயூரனுக்கு ரூபா 200ஐ அனுப்பி வைத்தான். அவன் 29-09-2003ல் கையொப்பமிட்டு அனுப்பியிருந்தான்.


APPLICATION FOR INLAND ORDINARY MONEY ORDER

25. AMOUNT Rs. ........ No. ........
26. Rupees (in Words) ........
27. Payable at ........
28. Name of Receipient (with initials) ........
29. Name of Remitter (with initials) ........
30. Address of Remitter ........
31 Date ........ Signature


32) இவ் உருவில் உள்ள இலக்கங்கள் எவை?



33) பின்வரும் எண்களை ஏறுவரிசைப் படுத்துக?
9.19, 9.98, 9.91, 9.89, 9.09

34) கீழே தரப்படும் எண் கோலத்தைப் பூர்த்தி செய்க?
10, 6, 9, 7, 8, 8---, ----

* தமிழ் ஆங்கில எழுத்துக்களால் காட்டப்படும் பாகங்கள் சிங்களத்திலும் காட்டப்படுகிறது. தமிழ், ஆங்கில சிங்களப் பதங்கள் சரி என்றால் (*) அடையாளத்தினையும் தமிழ் ஆங்கிலப் பதம் சரியாயின் (☑) எனவும், மூன்றும் பிழையாயின் (☒) என்றும் எதிரே அடையாளமிடுக.




## விடைகள்

1) அம்மாவைப்பற்றி
2) நீராட்டுதல், பொட்டு வைத்தல்
3) பாதி வழிக்கு வந்து, துள்ளிக் குதித்து தோளில் போடுவார்
4) புலம்புதல்
5) தூசி
6) சிரித்தல்
7) போதல்
8) அகதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு
9) பணம் கொடுக்கல் வாங்கல்
10) வெள்ளப்பெருக்கு அபாயம்
11) வனவிலங்குகளால் ஆபத்து
12) (2)
13) (6)
14) (1)
15) (3)
16) (4)
17) (5)
18) தொடர்
19) கோர்வை
20) குவியல்
21) கொத்து
22) மந்தை
23) சனம்
24) குலை
25) ரூபா 200
26) இருநூறு ரூபா
27) பியகம ஆடைத் தொழிற்சாலை
28) மாமாங்கம்-மயூரன்
29) கனகசபை-காந்தன்
30) க.காந்தன்
மக்கள் வங்கி வீதி,
இல.116
மட்டக்களப்பு.
31) 29-09-2003, க.காந்தன்
32) 1,2,3,4,5,6
33) 9.09, 9.19, 9.89, 9.91, 9.98
34) [7], [9]
35) - ☑
36) - ☒
37) - *
38) - *
39) - *
40) - *


**ச.ஜெயாகரன்,**
*திரு/விபுலானந்தா வித்தியாலயம்.*

## குப்பைத் தொட்டி




அலுவலகத்தில் இருக்கிறவனுக்கு
இது -
குப்பைத் தொட்டி
குப்பை பொறுக்கி வாழ்கிறவனுக்கு
இது -
அலுவலகம்.

## விந்தை தரும் உண்மைகள்



லண்டனிலுள்ள சொதெபி ஏலவிற்பனை நிலைய ஊழியர் ஒருவர் ஒக்டோபர் மாதம் 7ந் திகதி உலகிலேயே அதிபெரிய வைரக்கல்லைத் தூக்குகிறார். இக்கல் நவம்பர் மாதம் 20ந் திகதி ஜெனிவாவில் ஏலத்தில் விடப்படவிருக்கின்றது. சுமார் 10 மில்லியன் அமெரிக்க டொலர்கட்கு இது ஏலம் போகுமென எதிர்பார்க்கப்படுகிறது.



தாய்லாந்தின் தென் பகுதி நகரமொன்றில் மரக்கறி ஆகாரம் உண்பவர்களின் வருடாந்த விழாவில் தாய்லாந்தைச் சேர்ந்த பக்தர் ஒருவர் தனது உதட்டில் அலகுகள் குத்தி ஊர்வலம் போகின்றார்.



புனானி என்னும் ஆபிரிக்க நீர் யானை, சந்தியாகோ மிருகக் காட்சி சாலையில் 150,000 கலன் கொள்ளளவு நீர் கொண்ட தடாகத்தில் தனது மூன்றாவது பெண்குட்டியை ஈன்றுள்ளது. தற்போது இதற்கு வயது 3மாதம் எடை 260இறாத்தல் ஆகும். இதற்கு ஜசி எனப் பெயரிட்டுள்ளனர்.

## வவுனியா போங்கு தமிழில்...............

எஸ். செக்சன்
மாணவர் ஒன்றியத் தலைவர்
வவுனியா வளாகம்.

* அடங்கிக் கிடந்த தமிழினம் பொங்கி விட்டது. என்று சொல்வதில் போராடிய தமிழினத்தின் உணர்வு.....மக்கள் போராட்டமாக வளர்ச்சி கொண்டுள்ளது. இதனைத் தவறாக எண்ணுவதில் தவறாமல் ஒவ்வொரு தமிழனும் கலந்து கொள்ள வேண்டும் என்பதைத் தான் சொல்ல வேண்டும். பொறுத்தவர் போராடினார் பொங்கினார் இது காலத்தின் தேவை.

ஆ. சுபாஸ்கரன்,ஆசிரியர்

* மக்கள் இன்று பொங்கியெழுகின்றனர். இதனைப் பொய்யான பிரசாரங்கள் செய்து எவருமே தடுத்து விட முடியாது. மக்கள் தங்களுடைய கடமையைச் செய்கின்றனர். சமாதானம் அமைதி நிலைக்க வேண்டுமென்றால் நிரந்தரமான தீர்வொன்று வேண்டும். அந்தத் தீர்வு தமிழரிற்கு சுய நிர்ணய உரிமையினை வழங்குவதன் மூலமே சாத்தியமாகும். தமிழர் போரை விரும்பவில்லை போரைத் தமிழரிற்குள் திணித்தார்கள். இன்றும் தமிழர் போரை விரும்பவில்லை மீண்டும் போர் திணிக்கப்படக் கூடாதென்பதற்காகவே ''பொங்கு தமிழ்''

என்.ஞானப்பிரகாசம்- ஐயா
வவுனியாவைச் சேர்ந்த முதியவர் *

எந்தச் சூழ் நிலையிலும் நாம் எமது உரிமைக்காகப் போராட வேண்டுமென்றே பொங்கு தமிழ் என்ற கலாசார நிகழ்வொன்றின் மூலமாகப் போராடுவதற்கு வந்துள்ளனர்.

தம்பிராசா இராணுவ வீரா
சிங்கள சோதரி பெற்றவா.....

என்ற உருக்கமான பாடல் எங்களின் நிலத்தில் இருப்பவனே எங்களின் உணர்வைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகப் பாடப்பட்டது.

உபதலைவர் பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழு.

* பொங்கு தமிழ் பற்றிப் பல்வேறு தரப்பினரின் கருத்துக்கள் அவை. அவை ஒருமித்து பொங்கி வழிய ஒன்றுபட்டுச் செயற்படுவது அவசியம். இந்தச் செயற்பாடு தொடர வேண்டும்.

''பொங்கு 'தமிழ்'' தமிழனின் அபிலாசையை உலகிற்குச் சொல்லும் அரிய அற்புதமான நிகழ்வு. இதனைப் புறக்கணிப்பது தாய் பிள்ளையைப் புறக்கணிப்பது போலாகும். எமக்கு என்ன வேண்டுமெனக் கேட்பது எமது உரிமை. உரிமையுடனான உரிமை கேட்கும் போராட்டமே ''பொங்கு தமிழ்''

சிறுகதை

# நம்பிக்கையோடு...

**வி**ட்டிட்டுப் போனவை எல்லாம் திரும்பி வரப் போகினமா. சொந்தக் காரர் வந்து கேட்டால் விடத்தானே வேணும். ஆற்றையாலும் காணிக்குள்ள அடாத்தாய் இருக்கலாமே! சீ... அது என்ன நியாயம்...?

என்ன இருந்தாலும் அவையில பிழையில்லை. எல்லோரும் வாழத்தானே நினைப்பினம் அது அவையின்ர உரிமை.

இஞ்சை அதுகள வாழவே விட்டவங்கள். எப்பபாத்தாலும் குண்டு வீச்சும் செல் அடியும் தானே மண் மழை மாதிரியெல்லே பொழிஞ்சு தள்ளினவங்கள்.

பிள்ளை அதுகள் இதுக்கை இருக்குங்களே!

சொத்துகளையும் விட்டிட்டு ஓடிப்போய் தங்கட குடும்பங்களைக் காப்பாத்திப் போட்டுதுகள். சுவர் இருந்தால் தானே சித்திரம் கீறலாம். அதுகள்ளை நிலைக்கு அது பெரிய விசயமில்லை.

எங்களை விட வேண்டியதினால் நாங்கள் அண்டக் காய்ச்சியால். இருந்தாலென்ன ஆ... அறுந்து போவாங்கள். எத்தனை பேரை அழித்தாங்கள், எத்தனை சொத்துக்களை அழித்தாங்கள், ஆர் உழைத்த சொத்துக்கள் இவங்கள் நல்லா இருக்க மாட்டாங்கள்.

நாகம்மா தன்க்கு வார்த்தைகளை உதிர விட்டாள். எப்போதும் ஊர் போய் சேருவம் என்ற எண்ண உந்தலில் தள்ளப்பட்டாள்.

அவளது வீட்டிற்கு அருகில் இருந்த பலர் சொந்த ஊருக்குத் திரும்பிவிட்டனர்.சிலர் ''பார்த்துப் போவோம்'' என்று இருந்தனர். இவர்களில் ஒருத்தியாக நாகம்மாவும் சில மாதங்களை நிம்மதியாகத்தான் கழித்துவிட்டாள்.

''இனி என்ன சமாதானம் வரப்போகுது இனிப் பயமில்லை ஊருக்கும் போவம்"..... !

எதுவும் இல்லாமல் எதைக் கொடுத்து மாப்பிள்ளை தேடுவது?

ஊரில எண்டா சொந்தத்துக்க ஏனும் பார்த்துக் கொள்ளலாம். அவள் எண்ணங்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. இனி ஊருக்குப் போய்ப் புதிய வாழ்க்கை தொடங்க வேணும். கையில மடியில ஒன்றும் இல்லை. இருந்தாலும் ஒரு மாதிரி சமாளிக்கலாம். அங்கையும் நிவாரணம் குடுக்கிறாங்க தானே. மீளக் குடியமர்ந்தவர்களுக்கும் காசும் கொடுபடுகிறதாம்.

ம்.....அவள் மூச்சு நீண்டு நெஞ்சுக்குள் இருந்து வெளியே பாய்ந்தது.

இப்ப அவர்கள் குடுக்கிற உதவியை பெறாட்டில் வேற



கொள்ளத்தான் முடியுமோ.

ஏதோ ஊரில அவளுக்கென்று உரிமை கொண்டாட ஒரு பிடி மண் எண்டாலும் இருக்கு. அதையும் ஆரார் அடம்பண்ணி கள்ள உறுதி முடிச்சுவச்சு இருக்கிறானோ தெரியாது.

ஓடுறவன் ஓடிப்போக இருந்தவர்கள் தானே சொந்தக்காரனாகி வசதியைத் தேடிக்கொண்டு வாழுகினம் என்று ஊர் திரும்பியவை சொல்லிக் கொள்ளுகினமாம்.

இது அவளின் காதுகளிலும் பட்டது. ஒட்டாண்டி எல்லாம் ஓட்டுவீட்டிலே இருக்கினமாம்.

இது ''அறுந்தசாதி அடுத்தவன்ர சொத்துக்கு ஆசைப்பட்டு மானம் மரியாதை இல்லாமல்......, "சீ"! அவள் காறித்துப்பினாள்."

வந்தான் வரத்தான், ஊர்பேர் தெரியாதவன் எல்லாம் ஊருக்குள்ள இருக்கிறாங்களாம். நல்ல வீடுகள் உள்ள இடங்களில் எல்லாம் அவங்கள் பாதுகாப்பாய் இருக்கிறாங்களாம்.

நாகம்மா அதுக்குக் கவலைப்படவில்லை. ஏனெனில் அவளுடைய வீட்டை யாரும் கவனிக்க மாட்டார்கள். அது ஓலைக் குடிசை. ஆனால் அதுவும் இருந்த இடத்தில இருக்குமோ தெரியாது. அதுதான் அவளுக்கு ஏக்கம்.

''இருக்கிற காப்பரப்பில ஆவது ஒரு வீடு கட்டித் தருவாங்கள் தானே"

பெட்டைக்குக் குடுக்கிறதுக்கு ஒரு வீடு கிடைக்கப் போகிறது என்பதில் அவளுக்கு ஆனந்தம் அதிகமாக இருந்தது.

அப்ப என்னதான் செய்யிறது வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி வங்கியில சேமிச்ச ஆயிரம் ரூபாவையும் எடுக்க வேண்டியதுதான்......

பெடிச்சியின்ற சைக்கிளையும் வித்தால் கொஞ்சக் காசு தேறும். அதுவும் தவிச்ச முயல் அடிக்கிற மாதிரி ஆரும் விலை குறைச்சுத்தான் கேட்பினம். பாப்பம்...

முடிச்சோட வந்த நாங்கள் முடிச்சோட போவம். அங்க போனமெண்டால் தாற நிவாரணத்தையும், காசையும் வைச்சுக் கொண்டு சீவிக்கலாம். வாற காசிலஅவளுக்கு ஒரு சயிக்கிலை வாங்கிக் கொடுப்பம்.

விதானையாரிட்டச் சொல்லி உணவுப் பங்கீட்டு அட்டைகளை மாற்றி துண்டு எடுக்க வேணுமாம். பிறகு எச்.சி.ஏ கந்தோருக்குப் போய் கையெழுத்து வாங்க வேணுமாம் இப்பதான் அங்க போய் பதிஞ்சு ஏதும் நிவாரணம் எடுக்கலாமாம்.

ஓ....! அதுக்கு அலையுறதான் பெரிய வேலை. வாக்கு மூக்கு தெரியாத பிள்ளையை வைச்சுக் கொண்டு......,

நான்தான் எல்லாத்துக்கும் அலைய வேண்டிக் கிடக்கு சரி...சரி என்ன செய்யிறது ம்..., கடந்த கால்சீதேவி... அவள் புறப்பட்டாள்.

எப்படியோ அவள் மகளுக்குத் தொல்லை பொறுக்காமால் எல்லா அலுவலகங்களையும் தானே

**- முருகு பாரிமகன் -**

அவளுக்கும் கடைசிக் காலத்தில, தன்ர ஊரில, தான் ஆடிஓடித் திரிந்த மண்ணில கண்ணை மூடி விடவேண்டும் என்ற ஆவல் தலைதூக்க, காணிக்குச் சொந்தக்காரர் கொழும்பிலிருந்து வருவதான செய்தியும் கிடைத்தது.

எல்லாரும் இடம் பெயர்ந்து பெயர்ந்து, தமக்குப் பிடித்தமான இடங்களுக்குத் தான் போனார்கள், கொஞ்சம் வசதியானவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று விட்டார்கள்.அவர்களின் வாழ்க்கை ஓரளவு வசதியாகத்தான் அமைந்துவிட்டது.ஆனால் இவர்களில் சிலர் வெளியில போய் முகாம்களிலே சீரழிந்த வாழ்க்கைதான் வாழுகினம்.

நாகம்மா தனது இரண்டு பிள்ளைகளையும் இழுத்துக் கொண்டு ஒரு உரப்பையில் கட்டப்பட்ட துணிமணிகளுடன் வன்னிக்கு வந்தாள்.

வாழ்வின் துன்பங்களையெல்லாம்சுமந்து கொண்டு பல வருடங்களைக் கழித்து விட்டாள்

குண்டு வீச்சால் இழந்து போன தன் கணவனையும் எண்ணிக்கொண்டு குழந்தைகளுக்காக வாழ்ந்து எதிர் நீச்சல் அடித்தாள்.

பல பிரயத்தனங்களின் பின் ஆளில்லாத இந்தக் காணிக்கு வந்து குடியேறினாள். ஏதோ அவளது கடும் உழைப்பால் உயிர் பிடித்து வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

மகன் வருவானெனக் காத்திருந்தாள். அவன் தன் பணியை நிறைவேற்றி விதையாகிப் போனான். அவள் இங்கு யாருக்காக இருக்க வேண்டும். சிறுமியாக வந்த மகள் மதனி பருவ மங்கையாக வளர்ந்து விட்டாள். வறுமையின் கோடுகள் அவள் மீது படிந்திருந்ததாலும் அவள் எழிலாகத்தான் இருந்தாள்.

அவள் அவளை ஒருவன் கையிலே ஒப்படைத்து விட்டால் அவளின் கவலை தீர்ந்து போகும். நிம்மதியாகக் கண்களை மூடிக் கொள்ளலாம். ''அதற்கும் வாய்ப்புக்கள் வேணுமே..... நிலம், வீடு காசு இவை எப்ப பெறுகிறது. இஞ்ச காணி இல்லாட்டி வாற உதவியும்கிடையாதாம். அப்படித்தான் கதை பிறக்குது. என்னடா கரச்சல். இவ்வளவு நிலமும் இருக்குது ஆராரோ நிலங்களை விட்டிட்டு உயிர் தப்பிப் போட்டாங்கள். விட்ட நிலத்தில் கூட சொந்தம் கொண்டாட முடியாமல் இருக்குது. குடியிருக்கிறத்துக்கேனும் ஒரு துண்டு நிலம் இல்லாமல் அலைகிற சனங்களுக்கு எப்ப ஒரு நிலம் கிடைக்கப் போகுது. எல்லா நிலங்களும் எல்லாருக்கும் சொந்தமாகிப் போனால்...!

இந்த நிலத்தை மனிதன் தானே பயன்படுதுகிறான். அவன்தான் உரிமை கொள்கிறான், அவன் தானே நிலம் இல்லாமல் அலைகிறான்......,

தனக்குத் தனக்கு என்று விசையம் தெரிஞ்சவன் எல்லாம் நிலத்தைச் சொந்தமாக்கிப் போட்டாங்கள். காற்றும் நிலமும், நீரும், எல்லாருக்கும் சொந்தம் என்று சொன்னவனுக்குக் கூட ஒருகுழி நிலம் கூட சொந்தமில்லாமல் போச்சுதாம்.

பலமாய் இருந்தால் அவன் பலத்தால எல்லாத்தையும் தனதாக்கிப் போடுவான். பலமில்லாதவன் வாழ்க்கை அவலம் தான். இல்லாதவன், இருக்கிறவன் என்ற நிலமை இருக்கிற வரை இது தீராத தலைவலிதான். அதனால் இல்லாதவன்ர வாழ்க்கை போராட்டம் தான்.

இப்பிடித்தான் அண்டைக்கு சங்க வெட்டையில நடந்த கூட்டத்தில பேசின தம்பி ஒருத்தன் சொன்னது நாகம்மாவுக்கு நினைவுக்கு வந்தது.

எட....எல்லாத்தையும் இழந்து, உயிரைப் பிடிச்சு இஞ்சவந்து, நகநட்டையும் வித்து முடிச்சாச்சு. இப்ப அந்தப் பொடிச்சி ஏதோ கெட்டிக்காரி தையல்பழகினதால வயிற்றுக்குக் கஞ்சி ஊற்றுறாள். இனி தலையும் வெளுத்து கண்ணும் புகைஞ்சு தடிமாதிரி ஆடிக் கொண்டிருக்கும் நாகம்மாவால் உழைச்சுக்

''எப்படியாவது வீட்டுக்காரர் வந்து போகுதுகள். அதுக்கிடையில நாங்கள் சச்சரவில்லாமல் வெளியேறிவிட வேணும்."

பக்கத்து வீட்டு குமுதினியும் ஊருக்குப் போறாளாம். அவையளக்

**நாகம்மா தனது இரண்டு பிள்ளைகளையும் இழுத்துக் கொண்டு ஒரு உரப்பையில் கட்டப்பட்ட துணிமணிகளுடன் வன்னிக்கு வந்தாள்.**

கேட்டு முடிவெடுத்து விட்டாள்.

தையல் மெசினை ஏத்திப் போட்டால் போதும் அதைவிட வேறு சொத்துக்கள் ஏதும் இல்லை. இந்த வீட்டையும் களட்டி ஏற்றிப்போட்டால் போன உடன கொட்டிலைப் போட்டு இருக்கலாம்.

அதுக்கும் ஏத்துக் கூலிக்கும் காசு வேணும். முடிச்சோட வந்த இத்தனை காலத்திலையும் அந்தப் பொடிச்சி ஆராரையோ கெஞ்சிக் கூத்தாடி வாங்கின தையல் மெசினை விற்றால் கொஞ்சக் காசு மிஞ்சும் தான். ஆனால் அதுக்கு அவள் தயாரில்லை அதுதானே அவர்களின் வயிற்றுக்குக் கஞ்சி ஊற்றுகிறது.

முடித்துவந்து கால்களை நீட்டி அமர்ந்தாள். நெற்றியில் அரும்பி உருண்ட வியர்வைத் துளிகளை முந்தானையால் துடைத்து முகத்திற்கு ஒத்தடம் கொடுத்தாள்.

''எடி பிள்ள"

மகள் தேனீருடன் வந்து தாயின் மடியில் கையூன்றி அருகில் அமர்ந்தாள்.

''ஆ.....! என்ரகால்... உனக்கென்னும் வயது காணாதோ. நான் வந்த களையெல்லோ நீ... செல்லமாகக் கடிந்து கொண்டு தேனீரை வாங்கி ஊதி ஊதி உறுஞ்சினாள்".

''அம்மா எப்பவாம் போறது"

அவள் தாயின் நாடியில் கையை வைத்து தன் முகத்திற்கு நேரேதாயின் முகத்தைத் திருப்பினாள்.

''நாளையண்டைக்கு... நீ சட்டையளை குடுக்கிற ஆக்களுக்குக் குடுத்துப் போட்டு சொல்லுறவைக்கும் சொல்லிப் போட்டு வா...என்ன..."

''பிறந்த மண்ணைப் பார்ப்பதில் உள்ள பூரிப்பு வாழ்ந்த மண்ணைவிட்டுப் பிரிவதில் உள்ள துயரம் இரண்டுக்கும் நடுவே அவள்.

ஊர் மாற்றம் தனக்கு ஒத்துவருமா என்ற ஏக்கம்.

''அம்மா'' அவள் ஏதோ சொல்ல நினைத்தாள். ஆனாலும் மௌனமாகப் போய்விட்டாள்.

பிரயாணத்திற்கான ஆயத்தங்கள் ஆரம்பமாகி விட்டன. இன்னும் இரண்டு நாட்களில் ஆதரித்த மண்ணைவிட்டுப் பிறந்த மண்ணை நோக்கி அவர்களின் பயணம் தொடங்கப் போகிறது.

பாவம் அவர்கள் பிறந்த மண்ணில், அவர்களின் வீடிருந்த இடத்தில் பாதுகாப்பு வலையம் பலமான இராணுவமுகாம்...., அவர்களுக்குத் தெரியாது. ஆனாலும் தங்கள் இலங்கை நோக்கி அவர்கள் நம்பிக்கையோடு புறப்படுகிறார்கள்.

## விறுவிறுப்பான தொடர் நாவல்

# என் கணவன் எனக்கு மட்டும் தான் 17

"சுகுமார் இதென்னடாப்பா சா வீட்டில சுவரில இருக்கிற படங்களையெல்லாம் கவுட்டு வெச்ச மாதிரி பெரியதொரு படத்த மாத்திரம் க்வுட்டு வச்சிருக்கிறா?" "அது எங்கட கலியாணப் போட்டோ மாணிக்கண்ண" "அதேன்புன்ன கவுட்டு வெச்சனி!" "அவள் வீட்ட விட்டுப் போன அண்டைக்கே ஆத்திரத்தில கவுட்டு வெச்சனான். வந்த புறகுதான் நிமித்துவன்" "சேச்சேச்சே இதெல்லாம் சரியில்ல. படத்த நிமித்திவை. இண்டைக்கே நான் உன்ர மூத்த பொடியனிட்டப் போய் உன்ர பொஞ்சாதிய இஞ்ச கூட்டித்து வராட்டி என்ன உஞ்சு எண்டு கூப்பிடு".

"நானும் இதப்பத்தி உங்களிட்டக் கதைக்க வேணுமெண்டுதான் உங்கள நினச்சனான். இனி என்னால தாங்கேலாது அவளில்லாம என்னால சீவிக்கேலா. அவள் வராட்டி சுவரில இருக்கிற எல்லாப் படங்களையும் திருப்பி வைக்கிற நிலமதான் வரும்."

"என்ன சுகுமார் சொல்லுறா !" "உண்மதான் மாணிக்கண்ண நான் உயிரோட இருக்க மாட்டன் செத்துப் போவன்" "சும்மா விசர்க் கத கதையாத கண்டயோ! சாகிறதும், பிழைக்கிறதும் நம்மட கையில இல்ல ராவெல்லாம் எனக்கு உங்கட குடும்பத்தப்பத்திய நினைப்புத்தான் வாழ்க்கையில ஒரு புடிப்பு வெச்சி வாழ வேணும். சும்மா நீட்டுக்கும் சண்டையும் சச்சரவுமெண்டா இதென்ன வாழ்க்க!" மாணிக்கம் அவனுக்குத் தெரிந்த மாதிரி ஏதோ பெரிய தத்துவங்களையெல்லாம் சொன்னான். அதைக் கேட்டுக் கொண்டிருந்த சுகுமார் கொடுப்பிற்குள் சிரித்துக் கொண்டே கேட்டான்.

"என்ன மாணிக்கண்ண சாமத்திய ஊட்டிலவச்சி குடிச்ச சாராய வெறி இன்னும் உங்களுக்கு முறியல்லப் போல!"

"என்ட ஜென்மத்துக்கும் இதுக்கு முன்னால இப்பிடி நான் குடிக்கல சுகுமார். குடத்திலிருந்து தண்ணிய வாத்துக் குடிச்ச மாதிரி உன்ன சைக்கிள்ள ஏத்திக் கொண்டு வந்து இஞ்ச உட்டுப் போட்டு எதால போனன் எப்படிப் போனன் எங்க போனனென்டு என்க்கே தெரியல்ல. நடுச்சாமம் போல இருக்கும். முழிச்சிப் பாத்தன் , முத்தத்தில படுக்கிறன். என்ர பெண்சாதியும்பிள்ளயளும் என்னைத் தூக்கிக் கொண்டு போய் ஊட்டுக்க வளத்தாட்ட எவ்வளவோ முயற்சி செய்திருக்குதுகள். அதுக்கு நான் விட்டாத்தானே ஏதோ சலாவரிசை எடுத்தனானாம். அதனால அப்படியே முத்தத்தில உட்டுப் போட்டு அதுகள் போய்ப்படுத்துத்துகளாம். விடிஞ்ச புறகு தான் சொல்லிச்சிதுகள். இனி நமக்கும் வேணாண்டாப்பா இந்த நரகல் குடி!"

மாணிக்கம் சொன்னதைக் கேட்டு சுகுமார் மாத்திரமல்ல இந்திராவும் சேர்ந்து சிரித்தாள். "தகப்பனும் புள்ளயும் இப்ப சிரிக்கிற மாதிரி உன்ர பெண்சாதியும் சேர்ந்து நீங்க எல்லா நாளும் சிரிக்க வேணும். எங்க உன்ர பொடியனக் காணல்ல?" "அவன் இப்ப ரெண்டு மூணுநாளா சேல்ஸ் றெப்போட வேலைக்குப் போறான். சும்மா வீட்டில கிடந்து தான் என்ன செய்யிற! படிப்பும் அரகுற"

"அது சரிதான் இப்படிப் போறதால தொழிலோட சேத்து நல்ல புதிய அனுபவங்களும் பொடியனுக்கு வரும். எங்க தூரம் துலைவுக்குப் போறவங்களா?"

"இல்ல மாணிக்கண்ண இங்கால கல்முனை வரைக்கும் அங்கால வாழைச்சேனை மட்டும்."

"ஊரோட தானே காரியமில்ல!"

"மாணிக்கண்ண, நீங்க எப்பிடியெண்டாலும் இண்டைக்கே போய் ஒன்றும் விடாம எல்லாத்தையும் சொல்லுங்க. முக்கியமாக சாராயக்கார பரிமளத்தப் பத்திச் சொல்ல வேணும். பூங்கோதைக்கு என்மேல இருக்கிற ஆத்திரத்துக்கும், கோபத்துக்கும் அது தான் காரணம்!"


"அவள் மட்டுமில்ல சுகுமார் எல்லாப் பெண்களுமே இப்படித்தான். தன் புருசன் இன்னொருத்தியோட பேசிறதக் கூட விரும்பமாட்டார்கள்! அப்படி நிலம இருக்கக்க....."

"உண்மதான் மாணிக்கண்ண ஏதோ நடந்தது நடந்து பொயித்து. இனி என்ர ஜென்மத்துக்கும் இது வேணாம். நீங்க அங்க மூத்தவனிடம் போய் எது சொல்லுவீங்களோ ஏது சொல்லுவிங்களோ ஆனாலும் உங்க மேல எனக்கு நம்பிக்க இருக்கு!"

"அது அப்படியே இருக்கட்டும் நம்பிக்கதானே சுகுமார் வாழ்க்க. என்னால முடிஞ்சளவுக்குப் பாக்கிறன். நல்லபடியாக் கதச்சி ஆள வழிக்குக் கொண்டு வாறத்துக்கு கொஞ்சம் போல பாவிச்சாத்தான் நல்லம். அது தான் யோசிக்கிறன் கையில இருந்த காசும் முடிஞ்சு பொயித்து."

"என்ன மாணிக்கண்ண உங்கடகத இனி இந்த நரகல் குடியே வேணாமெண்டு சொன்னீங்க இப்ப என்னடாண்டா...."

"சொல்லுறதான் இதப் போல ஆயிரம் தடவ சொல்லிப் போட்டன் ஈமான் கேக்குதில்லையே



சுகுமார். இந்தப் பழக்கத்த எப்பவோ உட்டிருக்க வேணும். இப்ப உட்டுத்தான் என்ன பிரயோசனம். உனக்குச் சின்ன வயசு நீஉட்டுத்தா அது நல்லம். நானென்ன உன்னப் போல பெலன்சவியோட இருக்கிறனா? காடு வாவா எண்டுது ஊடு போ போ எண்டுது. இந்தச் சாராயத் தண்ணியாலதான்டா சுகுமார் இப்பவும் நான் உசும்பித் திரியிறன்."

மாணிக்கத்தின் கதையைக் கேட்டுச் சிரித்துக் கொண்டே கதிரையை விட்டெழுந்து சுகுமார் வீட்டுக்குப் போய் நூறு ரூபாய் பணத்தை எடுத்துக் கொண்டு வந்து மாணிக்கத் தின்கையில் கொடுத்தான்.

"சரி சுகுமார் நீ ஒண்டுக்கும் கவலப்படாத நான் நாளைக்கு வெற்றியோட திரும்பி வருவன்!" என்றபடி மாணிக்கம் உசாராக வெளியேறிச் சென்றான்.

சுகுமார் மாணிக்கத்தையே கண்ணிமை வெட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றான். அவனை அறியாமல் பெருமூச்சுப் பறந்தது. அந்தளவில் வந்து சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டான்.பூங்கோதை திரும்பி வருவாள் என்ற நம்பிக்கை அவன் நெஞ்சில் லேசாகத் துளிர் விட்டது.

எவ்வளவு தான் கவலை கஸ்ரம் என்றாலும் சுகுமார் காரியாலயத்திற்கு போகாமல் நின்றதில்லை.

வீட்டில் நின்றால் மனைவி பூங்கோதையைப் பற்றிய எண்ணங்கள் வரும். தேவை இல்லாத சிந்தனைகள் தோன்றி வாழ்க்கையை மேலும் துயரப்படுத்தும். காரியாலயம் போனால் பகல் பொழுது காரியாலய வேலை நண்பர்கள் என்று எந்தக் கவலையும் தெரியாமல் ஓடிவிடும்.காலையில் நேரத்துக்கு எழுந்து பக்கத்திலுள்ள சந்தைக்குப் போனான். அங்கே சனக் கூட்டம் நிரம்பி வழிந்தது. அன்றைக்கென்று நிறையச் சூரன் மீன்களைக் கொண்டு பரப்பி இருந்தார்கள்.

எதை வாங்குவது எதை விடுவது ஒரே ஸைசில் ஏராளம் மீன்கள். சுகுமாருக்கு எப்போதுமே சூரன் மீனில் அலாதி, பிரியம். அவனைப் போலவே மீன் வாங்க வந்தவர்கள் நான் முந்தி நீ முந்தி என்று அடிபிடிப் பட்டு மீன்களை எடுத்துக் கொண்டு இருந்தார்கள்.

"எதை எடுத்தாலும் முப்பது ரூபா. சோடியா எடுத்தால் ஐம்பது ரூபா!" என்று மீனின் சொந்தக்காரர் சத்தம் போட்டுச் சொன்னார். இரண்டு மீன்களை வாங்கி ஐம்பது ரூபாவைக் கொடுத்து விட்டு வீட்டுக்கு விரைவாகத் திரும்பினான்.

சூரன் மீன்களைக் கண்டதும் இந்திராவும், சுதனும் வாய் பிழந்த படி நின்றார்கள்.

"இரண்டு மீனுக்கும் எவ்வளவப்பா குடுத்தீங்க?" என்று கேட்டான் சுதன்.

"ஜோடி ஐம்பது ரூபா!"

"சரியான நயம்!" என்றாள் இந்திரா.

"இந்திரா இதைக் கொண்டு போய் வெட்டி இப்ப காலம் புறைக்கு முதல்ல ஒரு சொதி வை. மிச்சத்த மத்தியானத்திற்கு வடிவா ஒரு குழம்புவை!" காலம் புறைக்கு என்ன புட்டுத் தானே". "ஓமப்பா!"

"புட்டுக்குத்தான் சூரன் மீன் கலாதியாய் இருக்கும். சரி சரி சுறுக்குப் பண்ணு!"

"அப்பா இவளுக்கு கறியாக்கத் தெரியா சும்மா போட்டு அவிச்சு வைப்பாள்!" என்றான் சுதன்.

"அது தானே நீ கறியெல்லாத்தையும் தூக்கி எறிஞ்சி போட்டு வெறும் சோத்தத் தின்னுறா!"

"என்ன செய்யிற எல்லாம் விதி! அம்மாவப் போல இவளுக்கு கறியாக்கத் தெரியாதப்பா!"

"சரி சரி அண்ணனும் தங்கச்சியும் ஏன் மீன் கறிக்காக சண்டை பிடிக்கிறயள் நாளைக்கு கொம்மா வருவாவு தானே!" என்று இருவரது வாய்த் தர்க்கத்தையும் நிறுத்தினான் சுகுமார். அப்போது சுதன் சுகுமாரைப் பார்த்து "நாளைக்கு அம்மா வருவாவா ஆரப்பா உங்களுக்குச் சொன்னவங்க ?"என்று கேட்டான்.

"ராவு கனவு கண்ட நான்!"

"கனவுதானா!அதெல்லாம் பொய்யப்பா!"

"இல்ல சுதன் விடியச்சாமம் கண்ட கனவு பலிக்கும்."

"அம்மா வாற மாதிரியா கனவு கண்டனீங்க?"

"ஏன் அப்படிக் கேக்கிறா? "

"அப்பா, எப்பவும் எதிர்மாறாத்தான் கனவுட பலன் இருக்கும். வாறதா கனவு கண்டா வர மாட்டாவு!"

"நான் அப்படிக் காணல்ல . அம்மா கோவிச்சுத்துபோற மாதிரித்தான் கண்டனான்!"

"இது உங்கட நினைப்பு!"

"உன்னோட கதைக்கேலா! நீயென்ன இண்டைக்கு வேலைக்குப் போறல்லப் போல கிடக்கு!"

"போகோணும்"

"இண்டைக்கு எங்காலப் பக்கம் போவீங்க!"

"கல்முனைப் பக்கப் தான் போறதாச் சொன்னாங்க"

"இந்திரா தேத்தண்ணி வச்சனீயா?"

"ஓமப்பா மேசையில பிளாஸ்க்கில இருக்கு!" என்று சொல்லியபடியே சூரன்மீனொன்றை எடுத்து வெட்டி எடுத்துக் கொண்டாள் இந்திரா.

"கெதிபண்ணன் ஒரு மீன வெட்டுறத்துக்கு இவ்வளவு நேரமா?" என்றான் சுதன்.

"இவருக்கு வாய் மட்டுந்தான். ஒரு வேல வட்டியும் செய்ய மாட்டார்.

போய் அடுப்பில கிடக்கிற புட்டுப் பானையை பார்த்து இறக்கி விடு!"

"என்னால ஏலாது!" என்று ஒரேயடியாச் சொல்லி விட்டு தெருக்கதவைத் திறந்து கொண்டு சுதன் வெளியே போனான். எதுவும் பேசாமல் சுகுமார் கிணற்றடியில் போய் வாயை அலம்பி விட்டு வந்து பிளாஸ்கில் இருந்து தேனீரை ஊற்றிக் குடித்தான்.அப்போது அவன் மனம் பூங்கோதையை எண்ணிப் பார்த்தது.

ஒரு வீட்டில அந்த வீட்டுக்குரியவள் இல்லாவிட்டால் எவ்வளவு தொல்லைகள் ஏற்படுகின்றன. அவள் சமைத்துப் போட அதைப் பிள்ளைகளும் கணவனும் பக்கம் பக்கமாக இருந்து சுவைத்துச். சுவைத்துச் சாப்பிட அதை அவள் பார்த்துப் பார்த்துப் பூரிக்க ...... இப்படித்தானே இங்கேயும் நடந்தது.அற்புதமான அந்த உறவை-வாழ்க்கையை வீணாக் கெடுத்துக் கொண்டேனே.

அம்மாவின் கறி சுவையாக இருக்கும். அவபோல இந்திராவால் கறி சமைக்க முடியாது என்று சுதன் சொன்னது மாத்திரமல்ல நாளைக்கு அம்மா வருவா என்று நான் சொன்னதும் மெய்தானா அப்பா என்று எவ்வளவு ஆர்வத்தோடு கேட்டான். இந்திராவுக்கும் அம்மாவின் நினைப்பு இல்லாமல் இருக்காது. சுதனைப் போல அவளால் வெளியே சொல்ல முடியாது போனாலும், மனசுக்குள்ளே அவள் நினைத்து வேதனைப்படாமல் இருந்திருக்க மாட்டாள். இவர்கள் மட்டுமா என்னால் கூட பூங்கோதையை மறக்க முடியவில்லையே! ஆண்டவனே இண்டைக்கு எப்படியும் அவள் வீட்டுக்கு வந்து சேந்திர வேணும்."

சிந்தனையோடு சிந்தனையாக சுகுமார் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வேலைக்குப் போகப் புறப்பட்டுக் கொண்டிருந்தான்.

(தொடரும்)

### வாசகர்களின் கவனத்திற்கு!

*"என் கணவன் எனக்கு மட்டும்தான்" தொடர்நாவலை எழுதும் ஈழத்தின் பிரபல நாவல் ஆசிரியர் யார்?*

*அவர் பெயரை தமிழ்அலையில் வெளியாகும் கூப்பனில் எழுதி அஞ்சலட்டையில் ஒட்டி அதை எமக்கு அனுப்பிவைக்கவும்.*

*நாவல் முடிவில் மூன்று வாசகர்களுக்கு அந்நாவலாசிரியரின் புதிய மூன்று நாவல்கள் பரிசாக அனுப்பிவைக்கப்படும்.*

**கூப்பன்**

நாவலாசிரியர்
பெயர்.................................................
அனுப்புவரின் பெயர்.................................................
விலாசம்.................................................
கையொப்பம்.................................................

# சிங்கள ஆட்சியாளர்களும் தேசிய வாதமும்

(சென்றவாரத் தொடர்ச்சி....)

ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பதும் அடங்கும். தேசிய இனத்திலுள்ள ஒரு சமூக ஜனநாயக ஆட்சியேனும் உளவரலாற்றுக் கடமை என லெனின் வாதிட்டார். லெனினின் கருத்துப்படி தேசிய சுய நிர்ணய உரிமைக்கு திட்டவட்டமான கெட்டியான அர்த்தம் இருக்கிறது. இது அடக்கி எடுக்கப்படும் தேசிய இனம் பிரிந்து செல்லும் உரிமையினை முக்கியத்துவப் படுத்துகின்றது. ஆகவே சுய நிர்ணய உரிமையினையும் பிரிந்து செல்வதும் சமத்துவப்படுகிறது. பிரிந்து செல்வதற்கான உரிமை பிரிவதற்கான அவசியம் அல்லது விருப்பம் என்பதற்குச் சமமாக்கப்பட வில்லை. சுயநிர்ணய உரிமையினை அங்கிகரிக்க ஒரு ஜனநாயக சோசலிச கோரிக்கை என்பதனால் ஒரு சமூக ஜனநாயக ஆட்சியினரும் இது ஆதரிக்கப்பட வேண்டும் என்று லெனின் வற்புத்தினார். மேலும் லெனின் சுயநிர்ணய தத்துவத் தினைப் பரந்ததாக்கி தங்கி இருக்கும் நாடுகளிலும் கலனிகளிலு முள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் முழுமையாகப் பிரிவதற்கான உரிமையாகவும் அவை அரசுகளாக சுதந்திரமாக செயற்படுவதற்கு முன்னர் உரிமையெனவும் விளக்கமளித்தார். மேலும் பிரிந்து செல்வதற்கான உரிமையினை அவர் எல்லா விடுதலை இயக்கத்தை, எந்த வர்க்கமும் வழிநடத்தி செல்கிறது. அவ் வியக்கத்தின் தன்மை என்பவற்றை அடிப்படையாக் வைத்தே அவ்வுரிமை வழங்கப்பட வேண்டும் என்றார். ஒரு விடுதலை இயக்கத்தை ஒரு பிற்போக்கு பூர்யுவா வர்க்கம் தலைமை தாங்கி நடத்தினர். அதனை ஆதரிக்க கூடாதென்றும் மாறாக ஒரு முற் போக்குப் புரட்சிகரத் தொழிலாளர் வர்க்கம் தலைமைதாங்கினால் அதனை அழிக்க வேண்டும் என லெனின் குறிப்பிட்டார்.

மாக்ஸ், லெனின் போன்றோரைப் பின்பற்றி ஜே.வி. ஸ்ராளின் ''சுய நிர்ணய'' உரிமை என்பதுஒரு தேசம் தனது சொந்த விருப்பத்தின் படி தனது வாழ்க்கையினை ஒழுங்கு படுத்திக் கொள்வதனையே குறிக்கும் என்று விளக்கினார். தேசம் ஒன்றுக்கு மற்றைய தேசங்களோடு சமஸ்ரி உரிமைப்பாடொன்றின் உரிமை உண்டு. தேசங்கள் இறைமை படைத்தவை எல்லாத் தேசங்களிலும் சமமானவை என்றும் அவர் வாதிட்டார். ஒரு குறிப்பிட்ட தேசம் எவ்வாறு தனது வாழ்க்கையை ஒழுங்கு படுத்திக் கொள்ள வேண்டும். எத்தகைய முறைகளை அது எதிர் காலத்தில் எடுக்க வேண்டும் என்பது அக்குறிப்பிட்ட தேசத்தில் பொருளாதார அரசியல் கலாசார சூழ்நிலைகளைத் தீர்மானிக்க முடியும். என்பதையும் ஸ்ரனின் வற்புறுத்தினார்.

தொகுத்து நோக்கும் போது இனப்பிரச்சினைகள் ஒரு கடந்து செல்லும் கட்டத்தைப் போன்றது. ஒரு சோசலிச சமூதாயத்தின் இயல்பான வற்கப் போராட்டங்கள் மேற்சொன்ன இனப்பிரச்சினையினை மறைத்து விடும் என்றே மார்ச்சிய அணுகு முறை கொள்கிறது. இதனால்தான் தேசிய ஒடுக்குதல்களிற்கும் சமத்துவம் இன்மைக்கும் எதிரான போராட்டம் தனியார் சொத்துச் சுரண்டல்என்பவற்றை ஒழிப்பதற்கு எதிரான பொதுப் போராட்டத்தின் ஒரு பகுதியாக இருத்தல் வேண்டும் என்ற முடிவிற்கு மாக்ஸ், ஏங்கல்ஸ், லெனின் என்றோர் வந்தனர்.

சிங்களத் தேசிய வாதத்திற் கெதிராகத் தமிழ் தேசிய வாதம் தோன்றுவதற்கான சூழ்நிலைகள் தோன்றின. 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழ்த் தேசிய மலர்ச்சி ஏற்பட பல இலக்கியங்கள், நூல்கள், சஞ்சிகைகள் செல்வாக்கு மிக்க பிரமுகர்கள் உதவினர்.

**இலங்கையர் தேசிய வாதம்:-**

இலங்கைத் தேசிய காங்கிரஸ்சை உருவாக்கிய உயர்ந்தோர் குழுத்தலைவர்கள் தீவிலுள்ள பல்வேறு சமூதா யங்களும் விஷேடமாக சிங்களத் தமிழ் சமூதாயங்கள் இலங்கைக்குப் பொறுப்பாட்சி அதிகாரத்தைப் பெறுதல் என்ற பொது இலக்கினை அடையப் பயன்படும் ஒரு உண்மையான தேசிய இயக்கமாக காங்கிரஸ் அமையுமெனஎதிர் பார்த்தனர். ஆனால் இன வேறுபாடுகள் தனிப்பட்டவர்களிற் கிடையிலான முரண்பாடுகள் என்பவை காரணமாக இந்த இலக்கு ஒரு போதும் நிறைவேறவில்லை. தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டு 2 வருடங்கள் பிரதேசவாரிப் பிரதி நிதித்துவம் மேல் மாகாணத்தில் தமிழற்கென விசேடமான ஒரு தொகுதி என்ற இரு பிரச்சினைகளில் சிங்களத் தலைவர்களுக்கும், இலங்கைத் தமிழ்த் தலை வர்களிற்கும் முரண்பாடுகள் ஏற்பட்டன. இப் பிரச்சினையால் அருணாசலம் உட்பட உயர் மத்திய வர்க்க தமிழ்த் தலைவர்கள் 1922 இலங்கைத் தேசிய காங்கிரஸிடம் இருந்து தமிழர் சீர் திருத்தக் கழகம் என்ற அமைப்பை உருவாக்கினர். இருந்தும் இக் குழுக்களிற்கிடையே ஏற்பட்ட பிரச்சினைகளிற்கு உயர்ந்தோர் குலம் தீர்வுகளைக் காணவும் முயற்சிக்கப்பட்டது.

**சிங்கள தேசிய வாதத்தின் எழுச்சி:-**

இலங்கையர் தேசிய வாதம் அல்லது. தாராண்மைத் தேசிய வாதத்திற்கு எதிராக 20ம் நூற்றாண்டில் வேறொரு தேசிய வாதமும் எழுச்சி அடைந்தது. இது 19ம் நூற்றாண்டின் 2ம் அரைப் பகுதியில் எழுந்த பௌத்த புனருத்தாரண இயக்கத்தோடு தொடர்புபட்டதாகும். இவ்வியக்கம் கிறிஸ்தவ மதம் கிறிஸ்தவ மிஷனறி இயக்க நடவடிக்கைகளை ஆதரித்த

**க.லோகப்பிரகாசம் (ரவி)**
**செட்டிபாளையம்**

பிரித்தானியர் ஆட்சியாளர் என்பவற்றுக்கு எதிரானதாக எழுந்ததாகும். அரசின் உதவியையும் பர்துகாப்பையும் இழந்தமையால் பௌத்த மதம் அடைந்த தாழ்வு நிலையிலிருந்து அதனைக் காப்பாற்றுவதற்கும் சிங்கள பௌத்த கலாசாரம் பெறுமதிகளையும் மலர்ச்சி அடையச் செய்வதற்கு என கிளர்ச்சியாகவே இது தோற்றம் பெற்றது. இப் புனருத்தாரண இயக்கம் ஆரம்பத்தில் பிகேந்து வத்த குணநந்ததேரே மிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரே என்போரால் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் கொலேனியல் ஒல்கொற்கொலனா பலவற்ஸ்கி என்போரின் வருகையால் வளர்ச்சியடைந்து பின்னர் குறிப்பிட்ட இருவரும் இலங்கையில் பௌத்தமத சங்கத்தை அமைத்தனர். ஆனால் இவ்வியக்கத்தின் உந்து சக்தியாகத் திகழ்ந்தவர் அநாகரிகதர்ம பால ஆவார். இவர் சிங்கள மக்களின் இனமேன்மை பௌத்த மதத்தினைக் காப்பதில் சிங்கள மக்களின் விசேட கடமைப்பங்கினைப் பற்றியும் பிரசாரம் செய்தார். இவ்வாறு தாராண்மை மதசார்பற்ற தேசிய வாதத்திற்கு எதிராக இம் மதரீதியான தேசிய வாதம் மரபு ரீதியான கடந்த காலத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இப் புதிய தேசிய வாதம் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருக்கும்.

மரபு ரீதியான மதம், கலாசாரம் என்பவற்றின் மறுமலர்ச்சியும் தமது பண்பாட்டு பழமையிட்டு பெருமை கொள்ளுதல்.

*மரபுகளை அடிப்படையாகக் கொண்ட இத்தேசிய வாதம் குத்து வெட்டான (இனரீதியான) ஒருமைப்பாட்டிற்கு உதவி செய்தது.

*. ஆங்கில அறிவில்லாத மக்களையும் கிராமப் புறத்தார்களையும் தேசிய இன உணர்வினுள் அழைத்துச் சென்றது.

* மத, அடையாளங்களும் வணக்க முறைகளும் பிரதான அம்சங்க ளாயின.

* கடந்த காலத்தையிட்டு பெருமை யடைதலும் அதனோடு அடையா ளம் காண்பதும் இப் புதிய தேசிய வாதத்தின் வழியாயிருந்தது.

வாக்காளர்களை ஒழுங்கு படுத்தி 1956ம் ஆண்டுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடித்தது. இவ்வாறு சுதந்திரத்திற்கு முன்னரும் சுதந்திரத்திற்குப் பின்னரும் சிறிது காலத்திற்கு நடைமுறையிலிருந்த ஆங்கிலம் கற்ற உயர் மத்திய வர்க்கத்தினரால் முன்வைக்கப்பட்ட மதசார்பற்ற பல் இன தேசம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட இலங்கையர் தேசிய வாதம் என்பது 1950ளில் சிங்கள தேசிய வாதக் கோட்பாட்டின் முன் ஈடுகொடுக்க முடியாது தோல்வி கண்டது.

பௌத்தமதம் சிங்கள மொழி என்பவற்றிற்கு தொடர்புபட்ட மரபுரீதியான கலாசார மத சார்பினை சிங்களத் தேசிய வாதம் வற்புறுத்தியது அது இதனை இலங்கையர் தேசிய வாதம் என்பதோடு சமப்படுத்த முயற்சித்தது. ஆனால் சிறுபான்மையினர் குறிப்பாக இலங்கைத் தமிழர் சிங்கள தேசியவாதம் தான் இலங்கையர் தேசிய வாதம் என்பதை நிராகரித்தனர். அவர்கள் இதற்கெதிராக தமிழ் தேசிய வாதம் என்பதை வளர்க்க முற்பட்டார்.


(தொடரும்...............)

போட்டியில் பங்குபெற விரும்புவோர் விடைகளை இடமிருந்து வலம், மேலிருந்து கீழ் என வகைப்படுத்தி ஒரு தபாலட்டையில் எழுதிக் கீழே காணப்படும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை அனுப்பும் வாசகர்களில் அதிஸ்டசாலிக்கு 100 ரூபா பணப்பரிசும், பாராட்டுப்பெறும் மேலும் 10 பேரின் பெயர் விபரங்கள் அலையிலும் வெளியாகும். விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி 18-10-2003 ஆகும். எங்கே முயற்சி செய்யுங்கள் பார்ப்போம்.

*முகவரி*

**குறுக்கெழுத்துப்போட்டி-15**
**தமிழ்அலை**
**பிரதானவீதி, கொக்கட்டிச்சோலை**

## குறுக்கெழுத்துப் போட்டி 15




### இடமிருந்து வலம்

01) 87 இல் திருமலைக் கடலில் வைத்து ''சயனட்'' அருந்தி தற் கொலை செய்து கொண்ட 12 மாவீரர்களில் தளபதியான ஒருவர்.
05) யாதாயினும் ஒன்றின் நகர்வைத் தடுப்பது.
06) கையை இப்படியும் அழைக்கலாம்.
07) பெண்களை இப்படியும் அழைப்பர். தமிழ் அலையில் இச் சொல்லை வாரந்தோறும் காணலாம். (திரும்பியுள்ளது)
08) தலையைக் குறிக்கும் வேறு ஒரு பெயர் (குழம்பியுள்ளது)
11) ஒவ்வொரு நாளும் எனப் பொருள் படும். (திரும்பியுள்ளது.)
13) பொட்டு
15) பௌத்தர்களின் வழிபாட்டுத் தலம்

### மேலிருந்து கீழ்

01) தர்க்கம் என்பதன் எதிர்ப்பதம்
02) முட்டாள்.
03) இதுவும் ஒரு மருந்து என்று பெரியோர் சொல்வார்கள்.இதனை தொடர்பு படுத்தி ஒரு பழமொழி கூட உண்டு. (குழம்பியுள்ளது. )
04) ஆபத்து. (குழம்பியுள்ளது.)
09) குருதியை சிலர் இவ்வாறும் எழுதுவர்.
10) இதனைச் சேகரிப்பதும் சிறுவர்களின் பொழுது போக்குகளில் ஒன்றாகும்.
12) பூமி இறுதி எழுத்தை இழந்து நிற்கின்றது.
14) அம்பு

## குறுக்கெழுத்துப் போட்டி 13ற்கான விடைகள்

*இடமிருந்து வலம்*

01) தற்கொடை
05) புரட்டு
06) மங்கல்
08) கோணம்
09) ரவை
10) நுதல்
12) மந்(தி)
13) களை
15) செம்படவர்
16) குவிவு

*மேலிருந்து கீழ்*

01) தருமம்
02) கொடுங்கோல்
03) கட்டை
04) தபுதாரன்
07) செந்தணல்
11) நுகர்வு
12) மடல்
14) குவளை

## பரிசு பெறும் அதிஸ்டசாலி

**திருமதி. லலிதா தங்கராஜா(ஆசிரியை)**
மட்/மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம்
கொக்கட்டிச்சோலை.

## பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்

எம்.ஜீவமலர்
தேசிய கல்விக் கல்லூரி
தாளங்குடா.

மா. மணிவண்ணன்
சமூர்த்தி வங்கி
வலயம் -01
பட்டிப்பளை
கொக்கட்டிச்சோலை.

சதீஸ் அஸ்விதன்
1ம் பிரிவு
மண்டூர்.

ஆ.லூர்த்தம்மா
இல.05,வீட்டுத்திட்டம்,
சாந்தசோலை
வவுனியா.

க. தவேதன்
மே/பா.V.செல்வநாயகம்,
இலுப்படிச்சேனை,
செங்கலடி,
மட்டக்களப்பு.

எஸ்.எம். அமிர்தலிங்கம்
மட;/குருமண்வெளி சி.ச.ம.வி
களுவாஞ்சிகுடி

திருமதி.ர. பாரதிதாசன்
நாவலர்வீதி
குருக்கள்மடம்.

செல்வன் இ.அன்ரனிதாஸ்,
பிரதேச செயலகம்
வாகரை.

சி. தருமரெத்தினம்
அரசினர் ஆசிரிய
கலாசாலை
மட்டக்களப்பு.

திருமதி-சாந்தி
ஜீவன்
சர்வோதய வீதி
பாண்டிருப்பு-1
கல்முனை.

# தமிழக மீனவர்கள் போராட்டம்


# எங்கள் மீனவர்களை கைது செய்வதை இலங்கை அரசு நிறுத்த வேண்டும்

சிறிலங்கா அரச படைகளால் தமிழக மீனவர்கள் 38பேர் தடுத்து வைக்கப்பட்டிருப்பதையடுத்து தமிழக மீனவர்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

தமிழக மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த மீனவ சங்கங்களைச் சேர்ந்த கூட்டமைப்பு தலைவர்கள் புதன்கிழமை புதுடில்லியில் போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் ஜனாதிபதி, மற்றும் மத்திய அமைச் சர்களையும் சந்தித்து கைது செய்யப் பட்டு தடுத்து வைக்கப் பட்டுள்ள மீனவர்களை விடுவிக்குமாறு கோரிக்கையும் விடுத்தும், இந்தப் போராட்டத்தினை தலமைதாங்கி நடத்திய மீனவர் சங்கத்தலைவர் எம்.எம்.வாஸ் கருத்து தெரிவிக்கையில் எமது மீனவர்கள் கைது செய்யப்பட்டமை தொடர்பாக இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் அறிவித்தும் எதுவித நடவடிக்கைகளும் நடைபெறவில்லை. எங்கள் மீனவர்களை விடுதலை செய்வதுடன் எங்கள் மீன் பிடிப்படகுகளையும் மீட்டுத் தர வேண்டும் அதேசமயம் தொடர்ந்தும் நாங்கள் மீன்பிடிப்பதற்கான அனுமதியும் வழங்கப்பட வேண்டும் என்றார். அவரிடம் தொடுக்கப்பட்ட கேள்விகளும் அவர் அளித்த பதில்களும் வருமாறு.

***. நீங்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் போகாதிருந்தால் இந்தப் பிரச்சனை எழாதல்லவா? நீங்கள் ஏன் போனீர்கள்?**

அதாவது அந்தப் பகுதியில் சென்று தொழில் செய்வதை விட வேறு வழியே இல்லாத சூழலில் நம்மருடைய இந்த கிழக்குக் கடற்கரைப் பகுதி யிலுள்ள துறைமுக மீனவர் பூரா இருக்கின்றனர். அந்தப் பகுதியில் நாம் பாரம் பரியமாக மீன் பிடித்திட்டிருந்தோம். நாங்கள் பிடிக்கக் கூடிய பிரான்ஸ் ஏற்றுமதி செய்யக் கூடிய விரால் மீன் அந்தக் கடல் சேற்றுப் பகுதியில் தான் இருக்கு. ஆனால் அவ ர்கள் கில் றெட் என்னும் மீனுக்குண்டான வலையை வைத்துத்தான் தொழில் செய்கின்றனர். அதனால் இரண்டு பேருக்கும். பிரச்சினை இல்லாமல் இருந்தது. இப்ப அவர்களும் அவர்கள் தொழில் வளங்களை மேம்படுத்திக் கொள்ள நினைக்கும் போது அவர்கள் ஒரு நாள், நாங்கள் ஒரு நாள் தொழில் செய்யுமாறு ஏதாவது ஏற்பாடு செய்தால்தான் பிழைக்க முடியுமென இராமேஸ் வரத்திலிருந்து நாகபட்டினம் வரை இருக்கக்



கூடிய 10,000 விசைப்படகுகளும் அந்த 10,000 படகை நம்பியிருக்கும் 106லட்சத்துக்கும் மேற்பட்ட விசைப்படகுத் தொழிலாளருக்கும் மேற்பட்ட விசைப்படகுத் தொழிலாளரும், சார்புத் தொழிலாளரும் வேறு வழியில்லாமல் சாக வேண்டியது தான்.

***. நீண்ட நாட்களாக நீங்கள் கேட்டுவரும் கச்சதீவை இலங்கை இந்தியாவிற்கு வழங்கினால் இந்தப் பிரச்சனை தீரும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?**

நிச்சயமாகத் தீராது. ஏனெனில் கச்சதீவைப் பொறுத்தமட்டில் கச்சதீவில் அதிகமாக மீன்வளம் கிடையாது. கச்சதீவில் தமது ஆபத்தான நேரங்களில் ஒரு புயல், வெள்ளம், மழை காலத்தில் வேண்டுமானால் அங்கு போய் நம்மைக் காப்பாற்றிக் கொள்ள இறங்கிக் கொள்ளலாம். அல்லது மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது ஏதாவது ரெஸ்ட் எடுக்க வேண்டுமாயின் அந்த இடத்தில் போய் இறங்கிக் கொள்ளலாமே தவிர வேறு கச்ச தீவு ஒரு முக்கியப்பிரச்சனையல்ல

***. அவர்களுடைய வாழ்வியலோ அந்தக் கடற்பகுதியைச் சார்ந்தது தான் இலங்கை மீனவர் மீன் பிடித்து வாழ வேண்டும்.என்ற நிர்ப்பந்தம் வந்துவிட்ட பிறகு அவர்களுடைய கடல்ப்பகுதியை நீங்கள் உரிமை கூறுவது ஒரு விதத்தில் சட்ட விரோதமான காரியமல்லவா?**

சட்டவிரோதமான காரியம் தான் நாம் செய்யுந் தொழிலுக்கும், அவர்கள் செய்யும் தொழிலுக்கும் வித்தியாசம் கருதப்படவில்லை. அவர்கள் நாம் பிடிக்கும் இராலைப் பிடிக்கிறார்கள். என்று கூறினோம்.

அதே மாதிரி அவர்கள் மீனைப் பிடிக்கிறார்கள் அவர்களும் எங்கள் பகுதியில் முன்னொரு காலத்தில் வந்து மீன் பிடித்தார்கள். தூரத்துக்கு பக்கம் வரைக்கும் இங்கு இராமேஸ்வரம் வரைக்கும் வந்து வலை விட்டிருந்தார்கள். அதே மாதிரி அவர்கள் எங்கள் பகுதியிலும், அரசியல் பேச்சுவார்த்தை நடத்தினால் தவிர வேறு வழியில்லை.

# இலங்கை வரலாறும் பூர்வீக மட்டக்களப்பும்



### கதிர்காம சத்திரியவம்சம் (1வது வம்சம்)

ரஜஅபயன்,
காமினிதிச
தமரஜன்
ரஜ உதியன்
மகாதிச
அயன் திஸ்ஸஅபய
அபிசெவர
அனுரத

*கி.மு 247 தேவந காயினி திசம்பிய தீசன் மர நாட்டு விழாவிற்கு 10 சகோதரர்கள் சென்றிருந்ததாக மகாவம்சம் கூறும்*

*(கி.மு. 3ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி.3ம் நூற்றாண்டு வரை)*

**ஆட்சி நகரம**

கதிர்காமம், சந்தணகமம், சங்கமன் கண்டி

**2வது வம்சம்** வட்டகாசி அபயன் காலம் கி.மு. 103ல் பஞ்சதிராவிடர் ஆட்சி

புலளுத்த
பாகியன்
பணயமாறன்
பிழையாமாறன்
தாகிதன்

*கி.பி.103- கி.பி.29வரை*

**3வது வம்சம** மகாவம்சம் குறிப்பிடும் பாண்டிய அரசியல

| | | |
|---|---|---|
| பாண்டு | - | கி.பி.2429-434 |
| பாயிந்தன | - | கி.பி.434-437 |
| குட்ட பாலிந்தன | - | கி.பி 437.452 |
| திலிதரன் | - | கி.பி 452-452 |
| தாதிகன். | - | கி.பி 452-455 |
| வீதியன் | - | கி.பி 455-473 |

கி.மு. 200முதல் கி.பி 1200வரை மட்டக்களப்பு, மண்முனை,திருக்கோவில் பிரதேசங்களில் ஆட்சி புரிந்த மன்னர்கள் பற்றிய விபரம் மட்டக்களப்பு மான்மியம் என்னும் நுலில் தரப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மான்மியம் மகாவம்சம் போன்று கற்பனை கலந்து எழுதப்பட்டிருந்தாலும் பல விடயங்களில் இவ்விரு நூல்களும் ஒத்துப் போகின்றன. ஆனால் கலி ஆண்டில் குறிப்பிட்டுள்ள இக்காலமானது கிறிஸ்து ஆண்டுடன் ஒப்பிடும் போது ஒத்துப்போகவில்லை கலி ஆண்டு கி.மு. 3102ல் ஆரம்பமாகின்றது.

எவ்வாறாயினும் வேறு ஆதாரங்கள் கிடைக்காத நிலையில் மட்டக்களப்பு மன்னர் விபரமானது மட்/ மான்மியம் பெயர்களைக் கொண்டே மகாவம்சம் போன்ற எனைய ஆவணங்களுடன் ஒப்பிட்டு கணிக்க வேண்டியுள்ளது. அவ் விபரம் வருமாறு.

**மன்னர்பெயர், வம்சம், தலைநகர், கலிஆண்டு, கி.ஆண்டு**

01.மித்தசேனன்- கலிங்கன்- மட்டக்களப்பு- 2,790 கி.மு.312
02.கூத்திகன்- கலிங்கன்- மட்டக்களப்பு-2306-கி.மு.296
03 சேனன்-கலிங்கன்- மட்டக்களப்பு-2868- கி.மு. 034
04.ரஞ்சலன்-கலிங்கன்-மட்டக்களப்பு-3020- கி.மு 082
05.ஸ்ரீகுலன்-கலிங்கன்-மட்டக்களப்பு-3020-கி.மு.82
06.வாகூரன்-கலிங்கன்-மட்டக்களப்பு- 3020-கி.மு.82
07.பிரசன்னா சித்து-கலிங்கன்- மட்டக்களப்பு-3110-கி.பி.08
08.தாசகன-கலிங்கன்-மட்டக்களப்பு-3150-கி.பி.48
09.தனசேனன்-கலிங்கன்-மட்டக்களப்பு- 3340-கி.பி.238

**மன்னர், பெயர், வம்சம், தலைநகர், கலிகணக்கு, கி ஆண்டு**

01.தினகரசேனன்-கலிங்கன்-மட்டக்களப்பு-3370 கி.பி.268
02.பிரசேது-கலிங்கன்-மட்டக்களப்பு-3420-கி.பி.318
03.அரசசேனன்-கலிங்கன்-மட்டக்களப்ப-3466-கி.பி.364
04.குணசிங்கன்-கலிங்கன்-மட்டக்களப்பு-3500-கி.பி.398
05.மதிசுதன்-கலிங்கன்-மட்டக்களப்பு-3530-கி.பி.428
06.வங்காலடன்-கலிங்கன்-மட்டக்களப்பு-3735-கி.பி.633
07.தகதிரன்-கலிங்கன்-மட்டக்களப்பு-4250-கி.பி.1148
08.தமாரசிங்கன்-கலிங்கன்-மட்டக்களப்பு-4080-கி.பி.978
09.கதிர்சுதன்-கலிங்கன்-மட்டக்களப்பு-4115 கி.பி.1013
10.மதிசுதன்-கலிங்கன்-மட்டக்களப்பு-4150 கி.பி.1048
11.நாதன் கலிங்கன்-மட்டக்களப்பு-4100-கி.பி.1078
12.தினசிங்கன்-கலிங்கன்-மட்டக்களப்பு-4220-கி.பி.1178

கிழக்கிலங்கையின் ஏனைய தமிழ் மன்னர்கள். கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு தவிர்ந்த உன்னரபாகிர் நாகமுனை தொப்பனை போன்ற நகரங்களை ஆண்ட மன்னர்களின் விபரம் பின் வருமாறு:

**மன்னர்பெயர், வம்சம், தலைநகர், கலிஆண்டு, கி.ஆண்டு**

01.மண்டுநாகன்-நாகர்-நாகர்முனை-2709-கி.மு.393நாகர்முனை -209-கி.மு.393
02.கொட்டாயன்-நாகர்-திருகோணமலை-3110-கி.பி.08
03.கொட்டியன்-நாகர்-கொட்டியாபுரம்-3340கி.பி.238
04.புவனேகபாகு-கலிங்கன்-உன்னரசுகிரி-3110-கி.பி.28
05.மனுநேகயவாகு-கலிங்கன்-உன்னரசுகிரி-3150-கி.பி.68
06.ஆடகசௌந்தரி-கலிங்கன்-உன்னரசுகிரி-3180-கி.பி.79
07.சிங்ககுமாரன்-கலிங்கன்-உன்னரசுகிரி-3370-கி.பி.268
08.ஸ்ரீசிங்கன்-கலிங்கன்-உன்னரசுகிரி-3420கி.பி.318
09.பானுசிங்கன்-கலிங்கன்-உன்னரசுகிரி-3470-கி.பி.350
10.மாகோன்-கலிங்கன்-தொப்பவ-4250-கி.பி1251
11.வாலசிங்கன்-கலிங்கன்-மட்டக்களப்பு-4240-கி.பி.1188
12.மாநதசேனன்-கலிங்கன்-மட்டக்களப்பு-4640-கி.பி.1538
13.எதிர்மன்னசிங்கன்-கலிங்கன்-மட்டக்களப்பு-4840-கி.பி.1538

இவர்களுக்குக் பின்வேறு பல மன்னர்கள்

க.தங்கேஸ்வரி

மாகோனுக்குப்பின் மட்டக்களப்பு தோப்பாவை உன்னரசுகிரி முதலிய இடங்களில் இருந்து ஆட்சி செய்துள்ளனர். சிலரது பெயர்கள் வருமாறு:

தறமசிங்கன்,தினசிங்கன்,குமாரசிங்கன், நாதன், அணிகங்கன் இவர்களைத் தொடர்ந்து பல சிற்றரசர்கள் வன்னியர்கள் ஆங்காங்கே ஆட்சி செய்துள்ளனர். ஆனால் ஒழுங்கான சான்றுகள் கிடைக்காதபடியினால் வேறு சான்றுகளை நாட வேண்டியுள்ளது.

(தொடரும்...............)

# கவிதைக் களம்

## ஈழத்தாய் சபதம்

### சிங்களவர் சூது

எண்ணிலுயர்ந்த இனத்தினால் - தமிழ்
மண்ணைப் பறிக்கும் மனத்தினால்
கண்ணியவானெனத் தோன்றினார் - பலர்
கர்மத்திலே கருத் தூன்றினார்
உண்ணும் உணவும் தமிழரின் -பேர்
உழைப்பினில் வந்த துணர்ந்திடாது
பண்ணிடும் பாவம் அறிந்துமே -தமிழ்ப்
பஞ்சையர் மீது பொரிந்துமே

மத்திய மாமலைக் குன்றுகள்-தனில்
மார்பினை முட்டிப் பொடி செய்தே
சத்தையிழந்திட்ட போதினும் -வளஞ்
சார உழைத்த தமிழர் தம்
சொத்தெனப் போற்றிய வாக்கினை -அவர்
சொந்தமிலாதது ஆக்கினார்
வித்து விழுந்தது ஆங்ஙனே -இன
வேற்றுமை நாற்றுக்கள் ஓங்கவே

வாக்குப் பறித்த கையோடுடன் -அந்த
வஞ்சகர் கொஞ்சமும் நின்றிடா (து)
நாக்கில் இன விசம் கக்கினார்- எம்மை
நாடற்ற பேர்களாய் ஆக்கினார்.
சாக்குப் பல சொல்லி எங்களின் -பல
தலைவர்களும் ஒத்து ஊதினார்
நாய்க்குக் கிடைத்த தெலும்பு தான் -
சிலர்
நக்கப் பதவியில் தக்கினார்

தொடரும்.....

எஸ். கருணானந்தராஜா (யுகசாரதி)

## நினைவுகள்

உன் நினைவுகளை
வந்த சுவடு தெரியாமல்
என் மனத் தீயில்
எரித்தேன்.....!
காவேரி நீராக வந்து

என் மனத் தீயை
அணைத்து
வெள்ளப்பெருக்காக
ஓடிக் கொண்டிருக்கிறது
உன் நினைவுகள்.

க. கமலதாசன், வந்தாறுமூலை.

## விடிவுக்காக.......

கானகத்திலே
காளை அவன்
வெஞ்சமர் ஆடினான் – எதற்கு.....?
விடிவுக்காக......

உண்ண உணவின்றி
உயிர் ஊசலாடும் வரை
போராடினான் – எதற்கு....?
விடிவுக்காக.......

தன்னை விட – தமிழ்
மண்ணைக் காப்பதற்கு
வெகுண்டெழுந்தான்
வீரவேங்கையானவன் – எதற்கு.....?
விடிவுக்காக.....

பாசமான நேசங்களை அறுத்து விட்டு
பகைவரை அழிக்கப் புறப்பட்டான் – எதற்கு
விடிவுக்காக.......

விடிவை நோக்கி காத்திருந்தான்
அப்பேதையானவன்
கைக்கு எட்டி விட்டதே – ஆனால்
வாய்க்கு எட்ட மறுக்கிறதே
இதற்குக் காரணம்
கையிலிருக்கும் பொருளா....?
இல்லை கையே தானா....?
புரியாத புதிர்.

பு.கயல்விழி, நொச்சிமுனை,மட்டு.

## கண்ணீர் மழை

அன்று பூமியில் இரு மழை
விண்ணில் இருந்து ஒரு மழை
தமிழன் கண்ணில் இருந்து மறுமழை
இன்று இவற்றிற்கு விடிவு காலமே
சமாதானம்.

வி. செந்தூரன், மண்டூர்

## பொற்காலம்

அமைதிப் புறாவின்
நிம்மதி இறக்கைகள்
பேரின வாத வலைக்குள்
சிக்கித் தவிக்கையில்
எப்படிப் பறக்கும்?
விடுதலை எப்போது
கிடைக்கும்!
புதிய மாற்றத்தில்
அது நிகழ்ந்தால், அது ஒரு
பொற் காலம்
இல்லாமை, பொல்லாப்பு
இன்றி நல்வழி கண்டால்
அது ஒரு பொற் காலம்.

வ.இளநிதி,கல்லடி,
மட்டக்களப்பு

## பாதுகாப்பாம்........!

இரவுகளில் வீட்டு நாய்கள்
சேர்ந்து குரைக்கும்
பார்த்தால் தெரு நாய்கள்
சேர்ந்து நடக்கும்
பின்னால் இராணுவம்......இம்......
பாதுகாப்பாம்
தேவை தான் எச்சில் இலை
நக்கிகள் வீட்டிற்குள்
இவர்கள் வாசலில் சென்றி.........
வெட்கமில்லை....
தமிழனைக் கொன்று குவிப்பவன்
இன்னொரு புறம்
காவல் காக்கிறான்....பாவம்

கொடுக்கிற கூலிக்கு
வேலை தேவைதானே.......!

அலைப்பிரியன்,புதூர்.

## எதிர் பார்ப்பு

பெற்றோரின் எதிர்பார்ப்பு
பிள்ளைகளின்
முன்னேற்றம்
பிள்ளைகளின் எதிர்பார்ப்பு
பரீட்சைகளின்
நற்பெறுபேறு
காதலரின் எதிர் பார்ப்பு
கல்யாணத் திருநாள்
பெண்மையின் எதிர் பார்ப்பு
பெருமையான தாய்மைப்
பேறு
நம் எல்லோரின் எதிர் பார்ப்பு
நம் நாட்டின் சமாதானம்.

T.மகேசன், பண்டாரியாவெளி

## தருவாயா!



நிலவே இடம் தருவாயா
நின் இதயத்தில் என்
உணர்வுகளை
கவிதையாக்க வேண்டும்.

கார்மேகக் கூட்டங்களே
கறுப்புமை தருவாயா?
என் கதைகளை எழுதி
விடவேண்டும்.

வானவில்லை நீ எனக்கு
வண்ணமாய்த் தருவாயா?
இதய உணர்வுகளை உருவாக்கி
உலகிற்களிக்க வேண்டும்.

கே. வேணி, தாழங்குடா- 02

# தேடலும் பகிர்வும் 10

* பொங்கு தமிழ்: மக்கள் போராட்ட எழுச்சி வடிவம்

"எங்கள் நிலம் எமக்கு வேண்டும்'' என்ற உரிமைக் குரலுடன் 24.09.2003 புதன் கிழமை மாலை வவுனியாவில் "பொங்கு தமிழ் எழுச்சி'' நடைபெற்றது அறிந்ததே. அரங்கச் செயற்பாட்டுக் குழுவினரின் மாபெரும் உணர்வு வெளிப்பாடுகளைத் தொடர்ந்து சில உரைகள் இடம் பெற்று இருந்தன.தென் தமிழீழத்திலிருந்து கிழக்குப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய உறுப்பினர்கள் இரண்டு பேருந்துகளில் சென்று பொங்கு தமிழில் பங்கு பற்றி இருந்தனர். மாணவர் அணிக்குத் தலைமையேற்றுச் சென்ற கலைபண்பாட்டுப் பீடத்தின் மாணவர் அவைத் தலைவர் சிறி அவர்கள் இதில் சுருக்கமான உரை ஒன்றை ஆற்றியிருந்தார். கருத்துச் செறிவான அவ் உரையை முழுமையாகத் தருகின்றோம்.

''இனியும் எம்மால் இழுபட முடியாது. எங்கள் வீடுகளுக்கு நாங்கள் போக வேண்டும். இராணுவத்தினரே உங்கள் வீடுகளுக்கு நீங்கள் செல்லுங்கள்." என்று ஒருமித்த குரலில் ஓங்கி ஒலிக்கின்ற எமது உறவுகளே, உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

தேசந் தழுவிய பொங்கு தமிழ் எழுச்சியை மீளவும் இங்கு பொங்கிப் பிரவாகித்திருக்கின்ற உங்களுடன் தென்தமிழீழத்தின் உயர் கல்வி நிறுவனமான கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து நாமும் உணர்வு சேர கலந்து கொண்டிருப்பதை இட்டு புளகாங்கிதம் அடைகின்றோம். தென் தமிழீழத்தின் உணர்வுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம். இவ்விடத்தில் மிக முக்கிய சில விடயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றோம்.

தற்போது நிலவுவது ஒரு போர் ஓய்வுக் காலம் மட்டுமே. மாறாக, இது சமாதானக் காலம் அல்ல என்பதைத் தெளிவு கொள்ளுங்கள். சமாதானக் காலத்தைக் கொண்டு வருவதற்காகவே தமிழர் தரப்பு அயராது பாடுபட்டு வருகின்றது. "போராட்ட வடிவங்கள் மாறலாம். போராட்டம் ஓயாது" என்ற தமிழீழத் தேசியத் தலைவரது வார்த்தையைத் தெளிவுற நினைவுபடுத்திக் கொள்ள வேண்டிய தருணம் இது. ''சிரம் தாழ்த்தா வாழ்வே எமக்கான சிம்மாசனம்'' என்று "உலைக்களம்'' உவந்தளித்த வியாசனின் வைர வரிகளை வளமுடையதாக்குவோம்.

பொங்கு தமிழ் எழுச்சியின் தோற்றமே தார்மீக ரீதியான, சனநாயகத்தின் பாற்பட்டது என்பதை நினைவூட்ட விரும்புகின்றோம். சிங்களப் படையினரின் அநீதியான ஒடுக்கு முறைகளுக்கும், அடிமைப் படுத்தலுக்கும் உட்பட்டு உயிர்களையும் உடமைகளையும் இழந்ததோடு மட்டுமன்றி, எங்கள் உணர்வுகளும் புதைக்கப்பட்டுக் கிடந்த வேளையிலேயே, ஈழத் தமிழர்களின் அடிப்படை அபிலாஷைகளை ஒரே குரலில் வெளிப்படுத்தும் ஒரு "ஆற்றுப் படுத்துகை''யாகவே பொங்கு தமிழ் மக்கள் போராட்ட எழுச்சி வடிவம் பெற்றது.

* ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை
* வடக்கு- கிழக்குஇணைந்த தமிழர் மரபு வழித் தாயகம்
* தமிழ்த் தேசிய இனம்

என்ற முப்பெரும் வரலாற்று ரீதியான அபிலாஷைகளை ஓரினத் தன்மையுடையதான எழுச்சிக் குரலாக வெளிப்படுத்தும் ஈழத் தமிழர்களின் மக்கள் போராட்ட வடிவமே ''பொங்கு தமிழ்'' எழுச்சி என்பதை முதலில் நாமும், எமது சகோதர இனத்தவர்களும், சர்வதேச சமூகமும் புரிந்து கொள்ளுமாறு பணிவன்புடனும், உரிமையுடனும் வேண்டுகின்றோம். இம் மக்கள் போராட்டம் எவருக்குமே எதிரானதல்ல என்பதை வலியுறுத்துகின்ற அதே வேளையில், ஈழத் தமிழர்களுடைய அடிப்படை அபிலாஷைகளை உளசுத்தியோடு அங்கீகரித்து எங்களது இயல்பு வாழ்க்கையை உறுதிப் படுத்துமாறு உரத்துக் கேட்கின்றோம். உயரிய அதிகாரங்களுடன் கூடிய இடைக்கால நிர்வாக சபை விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதே எமது தற்போதைய நிலைப்பாடாகும்.

தமிழர்களின் மிதவாதத் தலைமைகள் முன்னம் முன் வைத்த அமைதி வழியிலான தீர்வு முயற்சிகள், காலத்துக்குக் காலம் சிங்கள தேசத்தில் ஆட்சிப்பீடம் ஏறியவர்களின் அடாத்தான இனவாத ஆயுத வன்முறைகளால் துவம்சம் செய்யப்பட்ட தொடர் விளைவுகளால் தான், மாற்று வழி ஏதுமின்றி, எமது இனத்தின் தற்பாதுகாப்புக்காக "முள்ளை முள்ளால் எடுக்க" தமிழர்களுக்கு

**- த.வசந் -**

என்று இருக்கின்ற ஒரே போராட்ட சக்தியான "தமிழ் ஈழ விடுதலைப் புலிகள்'' செயற்பட்டனர். ஈழத் தமிழர்களின் அடிப்படை அபிலாஷைகளை முன்னெடுப்பவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் என்பதாலும், தமிழ் மக்களின் காப்பரணாக அவாகளே இருப்பதனாலும் ''தமிழ் மக்கள் வேறு விடுதலைப் புலிகள் வேறு அல்ல'' என்ற தெளிவான செய்தியை ''பொங்கு தமிழ்" மீள மீள எழுச்சி கொள்வது துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றது.

பேச்சுக்குப் போகின்ற எம்மவர்கள் எடுத்து வருகின்ற முடிவைச் செயற்படுத்த அனைவரும் ஒன்று பட்டு பணியாற்றுவோம். பொங்கி நிற்கும் தமிழினாலே புத்துணர்ச்சி கொள்கின்ற நாம், "தமிழரின்தாகம் தமிழீழத் தாயகம்" என்று உணர்வு சேர உரத்துக் கூறுவோம்.

# நாளைய உதயத்திற்காக அஸ்தமனமானவன்

# 2ம் லெப்ரினன் காவற்சோழன்

சிங்களப் பேரினவாதிகளின் ஆரம்ப கால தமிழ்க் கிராமங்கள் மீதான ஆக்கிரமிப்புக் குடியேற்றம் தமிழ்ப் பிரதேசமெங்கும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்த போது வட தமிழீழத்தையும், தென் தமிழீழத்தையும் இணைக்கும் பிரதேசங்களில் ஒன்றான மணலாறும் அதை அண்டிய பகுதிகள் சிலவற்றிலும் ஆக்கிரமிப்பு நடைபெற்றது. அங்கிருந்த தமிழ் மக்கள் விரட்டியடிக்கப்பட்டு பாரம் பரிய தமிழ்க் கிராமங்கள் சிங்களக்கிராமங்களாகப் பெயர் மாற்றப்பட்டு, அந்தப் பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. அக்கிராமத்து தமிழ் மக்களோ அகதிகளாக வன்னி மண்ணிலும் திருகோணமலையிலும் தங்கி வாழ்ந்தனர்.

சிலோனிதியட்டர், கஜபாபுர என்ற கிராமங்களும் இவ்வாறு சிங்கள மயமாக்கப்பட்டது தான். என்றாலும், இப்போது அங்கு சிங்கள மக்கள் இல்லை. எமது புலிப் போராளிகள் தான் காவல் செய்கின்றனர்.

1999ம் ஆண்டு ஆரம்பித்து அள்ளிச் சென்ற ஓயாத அலைகளில் இக்கிராமத்தை ஆக்கிரமித்து நின்றவர்களும் அடிபட்டுக் காணாமல் போனார்கள் இருந்த போதிலும் அடிக்கடி சிங்களப் படைகள் இக் கிராமங்களை மீளக் கைப்பற்றி தமது இனத்தின் இருப்பிடமாக்க முனைந்து கொண்டிருந்தனர். இதனால் இந்த இடங்களில் தமிழர் படைப் பலத்தைக் கூட்ட வேண்டிய தேவை ஏற்பட்டதால், அங்கு மேலதிக புலியணிகள் வேறொரு களத்தில் இருந்து சென்றடைந்தனர். அந்த அணியில் ஒருவனாய் காவற் சோழனும் ஒரு காவலரணியில் நிறுத் தப்பட்டான்.




மீன் பிடிக் கிராமமான களுவன் கேணியில் பாக்கியராசா -லெட்சுமி தம்பதியினருக்கு 1983ம் ஆண்டு மகனாகப் பிறந்தவந்தான் விஜி. இவன் குழந்தையாக இருக்கும் போதே இவனது தந்தையை 1985ம் ஆண்டு அப்போது இருந்த S. T. F இனர் வீட்டிலிருந்து முகாமிற்கு அழைத்துச் சென்றனர். அழைத்துச் சென்றனர் என்று கூற முடியாது. 7-8 பைசிக்கிள்களில் S.T.F னர் வருவார்கள். கைது செய்து கையைக் கயிற்றால் கட்டி கயிற்றின் மறு முனையை பைசிக்கிள்களில் கட்டி விடுவார்கள்S.T.F னர் பைசிக்கிள்களில் செல்ல கைது செய்யப்பட்டவர்கள் முகாம் வரைக்கும் தொங் கோட்டத்தில் நாயைப் போன்று ஓடிச் செல்ல வேண்டும். இப்படித்தான் விஜியின் தந்தையையும் முகாமிற்கு இழுத்துச் சென்றனர்.தேடிச் சென்ற போது கொண்டு வரலில்லை என்று கையை விரித்து விட்டனர். இப்போது அவர் காணாமல் போன பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளார்.தனது சிறு வயதிலேயே தந்தையை இழந்தவன் என்றாலும் அருகில் இருக்கும் பாடசாலையில் எழுத வாசிக்கத் தெரியுமளவிற்குப் படித்து விட்டு தன்னால் இயன்ற வரை உழைப்பதற்குத் தொடங்கினான். உழைப்பதில் தாயாருக்கும் கொடுத்து மீதியை அவனது செலவுக்கும் எடுப்பான். இவ்வாறு காலங்கள் உருண்டோடிக் கொண்டிருந்தது.

**- கா.சோதி -**

உள்ளூரில் போராளிகளின் வரவும் நடவடிக்கையும் மறைமுகமாகவும் தீவிரமாகவும் நடைபெற்றுக் கொண்டிருந்த போது விஜியும் ஒரு சில அரசியல் போராளிகளுக்குப்பல வழிகளிலும் ஆதரவாளனாகச் செயற்பட்டான். படையினரின் பதுங்குத் தாக்குதலில் இருந்து பல போராளிகளைத் தனது கிராமத்தில் வைத்துக் காப்பாற்றியிருக்கிறான். இவ்வாறு உதவி செய்து கொண்டிருந்தவன், திடீரென மனமாற்றம் அடைந்தவனாய் முழுநேரப் போராளியாக மாறுவதற்கு மட்/ அம்பாறை 36ம் பயிற்சி பாசறையில் அடிப்படைப் பயிற்சி பெறத் தொடங்கினான். பயிற்சிகள் முடிவடைந்ததும் போராளி காவற் சோழனாக வன்னி மண் மீட்க 1998ம் ஆண்டு ஒரு பெரும் அணியுடன் வன்னி மண் சென்றடைந்தான்.

வன்னியில் பல சண்டைகள் செய்து விழுப் புண்களைத் தாங்கியவனாக பின்னனி முகாமிற்குச் சென்றவன் அங்கும் உணவுக் களஞ்சியத்திற்குப் பொறுப்பாக விடப்பட்டான். களஞ்சியச் சாலையில் பல உணவுப் பொருட்களும் இருக்கும். சக்கரை என்றால் எல்லாப் போராளிகளும் இடைக்கிடை இவனிடம் சென்று கேட்பார்கள். அவனும் இல்லை என்று சொல்லாமல் கேட்பவர்களுக்குக் கொடுத்து விடுவான்.

இவ்வாறு ஒரு நாள் பட்டியலிடப்பட்டு சரி பார்க்கப்பட்டபோது சக்கரை மட்டும் கூடுதலாகக் குறைந்திருந்ததினால் பொறுப்பாளரிடம் வசமாக மாட்டுப்பட்டான். இவ்வாறு பிறரின் நலனுக்காக எதையும் செய்யத் துணிந்தவன்.

இவன், பங்கு பிரிப்பதில் அளப்பதில், நிறுப்பதில் வல்லவன். எப்படியான பொருளையும் துல்லியமாகச் சரிசமமாக பிரித்து விடுவான். எந்தச் சவாலையும் ஏற்று சாதனை படைக்கும் எண்ணம் கொண்டவன். எப்படிப்பட்ட பிரச்சினைகளையும் நேர்மையான முறையில் அணுகி தீர்த்து வைக்கக் கூடியவன். சுவாரசியமாகப் பேசி துன்பத்திலும் சிறு இன்பம் காண விளைபவன். உருவத்திலும் வயதிலும் சிறியவனாகிலும் அவன் கூறும் கருத்துக்கள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இவனது திறமைகளை நன்கு அறிந்து வைத்திருந்த பொறுப்பாளர், செக்சன் இரண்டாவது லீடராக நியமித்து சிலோன் தியட்டர் லைனுக்குச் சென்ற அணியுடன் அனுப்பி வைக்கப்பட்டான். அங்கு சென்றவனுக்குப் பாரிய ஒரு வேலை கொடுக்கப்பட்டது.தாக்குதல் நடவடிக்கைக்காக முன் கூட்டியே வேவு பார்த்து தரவுகள் பெற்றுக் கொடுக்கும் பணி வழங்கப்பட்டது.

கொடுக்கப்பட்ட பணியைச் செவ்வனே செய்து முடிக்க வேண்டும் என்ற அவாக் கொண்டவனாகச் செயற்படத் தொடங்கினான்.

இவ்வாறு அவன் அந்த வேவுப் பணியில் தரவுகள் பெற்று பின் இறுதியாக, எடுத்த தரவுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அன்றும் ஓர் இரவு மூவருடன் ஒருவராக அவனும் அந்த நகர்வை மேற்கொள்கின்றான். வழமையான நகர்வை மேற்கொண்டு எதிரியின் காவலரனுக்கு அருகாமையில் போடப்பட்டிருந்த கம்பி றோளைத் தாண்டுவதற்கு முயன்று கொண்டிருந்த வேளை எதிரி உசாரடைந்து தாக்குதலை மேற்கொள்ள , இவனும் இவனுடன் கூடச் சென்ற இரு போராளிகளும் திருப்பித் தாக்காமல் திரும்பி, வேறு திசையால் நுளைவதற்கு நகர்ந்து கொண்டிருந்த போது மீண்டும் பதுங்கித் தாக்குதல் இராணுவத்தினரால் தாக்கப்படுகின்றனர். உடனடியாகவே மூவரும் எதிரி மீது தாக்குதலைத் தொடுக்க 5 நிமிடங்கள் வரை சண்டை தொடர்கிறது. எதிரியின் சூடுகளும் எறிகணை வீச்சுக்களும் அதிகரிக்கத் தொடங்கின. காவற்ச் சோழனை அழைத்தான் மறு போராளி , சத்தத்தை காணவில்லை. இரவு 11.30 தாண்டிக் கொண்டிருந்த நேரம், அமாவாசை இருள் ஒன்றுமே தெரியாது. இன்னொரு போராளி வலி தாங்க முடியாமல் முணுகியபடி கிடந்தான்.காலிலும் கையிலும் காயப்பட்டவனாய் இந்தப் போராளி கிடந்தான். காவற்ச் சோழனைப் பார்த்தான். உயிர் அற்ற உடலாகக் கிடந்தான். தனது கையில் இருந்த கைக்குண்டொன்னை எதிரி மீது வீசி விட்டுக் காயப்பட்டபோராளியை தூக்கியவாறு மற்றய போராளி ஓடிச் செல்ல மூன்று சிங்களப் படைகள் அந்த இடத்திலேயே கொல்லப்பட 2ம் லெப்ரினனாக காவற் சோழனும் தமிழீழத்தின் சிலோன் தியட்டர் எனும் பகுதியில் 18-12- 2000 அன்று நாளைய உதயத்திற்கான அஸ்மனமானான்.


இரவுகள் தொடர்ந்து இருப்பதில்லை
இரவிகள் அதற்கு விடுவதில்லை.
அந்தியில் இதுவும் மறைவதனால் -அதன்
இருப்பை நிரப்ப மடிந்தானோ?

## காலத்தால் அழியாத மாவீரர் வரலாறு

கார்த்திகை மாதம் பிறக்கப் போகின்றது. எங்கள் வீரர்களின் புனித நாளும் நெருங்கி விட்டது.
கார்த்திகைப் பூக்கள் எல்லாம் பூத்துக் குலுங்கப் போகும் காலமிது.
அந்தப் புனிதர்களுக்காக அது கார்த்திகை இருபத்தேழு.
கார்த்திகை பிறந்தாலே எல்லோருக்கும் ஒரே சுறு சுறுப்பு.
மனங்களில் பலவித நினைவுகள். எங்கள் கண்மணிகளின் உறுதி நெஞ்சில் ஊற்றெடுக்கின்றது. வீரம் விடுக்கெடுக்கின்றது.
பூத்துச் சிரிக்கும் மலர்கள் எல்லாம் அவர்கட்குப் பூச்சொரியத் தயாரா கின்றது.
அந்த நாள் எமக்குப் புனித நாள்.
கல்லறைகள் தான் எம் கோயில்கள்.
காவியச் செல்வங்கள் தான் எம் தெய்வங்கள். மாவீரர்கள் அவர்கள் தேச விடுதலைக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர்கள்.
எதிரியின் பாசறையை வெடி குண்டு கொண்டு தகர்த்தும் சத்திய வேள்வியின் நித்தமும் வேகி கொடியது.
பறந்திட உயிரினை உரமிட்டு
செங்குருதியால் வரலாறு எழுதியவர்கள் மாவீரர்கள்.
தமிழின விடிவிற்காய் மரணித்தவர்கள் சமராடியவன் உன் அருகில் விம்மி வெடிக்கிறான்.
உறவுகள் ஒன்றாகி உங்கள் காலடியில் அழுது புலம்புகிறார்கள்.
பிஞ்சு மழலைகள் எங்கள், மாமா, மாமி, சித்தப்பா, சித்தி, அக்கா, அண்ணா
என்று கட்டி அழுது தலை சாய்ந்து நிற்க.
தாய்க்கு தாயாகவும் தந்தைக்கு தந்தையாகவும் கண்டிப்பும்
அன்பும் அரவணைப்பும் தந்து வீரமிக்க போர் வீரர்களாக
வழி காட்டிய தானைத் தலைவன் விழி கசிந்து மனமுருகி
உங்களைக் காணத் துடிக்கிறான்.
உலகத் தமிழினமே இன்று உங்களுக்காக மௌனிக்கிறது.
உங்கள் உணர்வுகளைத் தாங்கி எம் தமிழினம் பயனிக்கத் தயாராகின்றது.
உங்கள் புனித இடத்திற்கு எங்கள் கால்கள்
நகரும் போது எம் முன் புதிய உணர்வுகள் ஏற்படுகின்றது. கால்களில் வேகம் தெரிகின்றது. உங்களினுள் எரிந்த இலட்சிய நெருப்பு எம் முன் எரிந்து கொண்டிருக்கிறது.
உங்களின் கனவுகளும் நினைவுகளும் நாளை நனவாகும்
என்றநம்பிக்கையில் நீங்கள் சென்றீர்கள்.
உங்கள் விதை
குழிகளில் நாங்கள் சபதம் இடுகின்றோம்.
தாயகத்தின் புலர்வுக்காகவும், உயர்வுக் காகவும் உழைத்து இந்த மண்ணுக்கே உரமாகி விட்டவர்கள்.

## மாவீரர்களே உங்களின் கனவுகளும் நினைவுகளும் இன்று நனவாகின்றது


எம்தேசம் துாளாகிய போது விழித்திருந்தீர்கள்.
தேச மக்களின் பாசப் பிணைப்பிற்காக தமது பாசங்களைப் பொசிக்கியவர்கள்.
பள்ளிப் பராயத்தை பள்ளித் தோழருக்காய் பறி கொடுத்தவர்கள்.
ஊரெல்லாம் ஒன்றாகி விழாக் கொண்டாடும்
வேளையிலும் எல்லை சுற்றி காவலிருந்தவர்கள் எம் மாவீரர்கள்.
வீரமிக்க உறுதிமிக்க போர் வீரர்கள்.



உயிரினை மதியாது நாளும் பொழுதும் நட்ட நடு நாசியிலும் கண் விழித்துக் காவலிருந்து களமாடிய காவலர்கள்.
கொட்டும் மழையும் பணியும் அவர்கட்குச் சொந்த மென்றாகி
கொடியவர் படைகளைக் கொழுத்தி எரித்தவர்கள்.
எங்கள் கண் முன்னே ஏந்திய சுடுகலனுடன் உலா வந்தவர்கள்.
எங்கள் தோழில் தட்டி உறுதியூட்டி ஒன்றாக இருந்து உண்டு மகிழ்ந்தவர்கள்.
இன்று எங்கள் கண் முன்னே படங்களாய் கல்லறை
பூக்களாய்ப் பூத்துச் சிரிக்கின்றார்கள்.
நினைத்துப் பார்க்க நெஞ்சம் துடிக்கின்றன.
கல்லறை தேடி ஓடி வந்து தட்டித் தடவி கதறுகிறாள் உன் அன்னை.
உன்னோடு கூடி இருந்தவன் களத்தில் எங்கள் மூச்சுடன் கலந்து விட்ட நீங்கள் மாவீரர்களே! உங்கள் தியாகம்
எம்மால் மறக்க முடியாதவை. உங்களின் உணர்வுகள் இலட்சியத் தாகம் என்பன எம்மால் என்றும் மறக்க முடியாதவை.
உங்களை நினைத்து நினைத்து எமது விழிகளில் இருந்து வடியும் கண்ணீருக்கு அர்த்தமிருக்கிறது.
உங்கள் கல்லறைகளில் விளக்கெரிக்கின்றோம். விடுதலைத் தீ வளர்க்கின்றோம். உங்கள் இலட்சியங்களோடு தமிழினம் தலை நிமிர்கின்றது. ஏற்றுகின்றோம். பாடுகின்றோம் உங்கள் கல்லறை மேல் சத்தியம் செய்கின்றோம்.
வல்லமை தாருமென்று உங்களின் வாசலில் வணங்குகின்றோம். இங்கே விழிகளைத் திறந்து விடை கொடுங்கள். இது சமாதான காலமே தவிர எங்கள் உணர்வுகள் மங்கி விடவில்லை.
உங்களின் நினைவுகளோடு விடுதலைத் தாகம் கொண்டு எம் விடுதலைப் பயணத்தின் உறுதியால் நாம் பயணிக்கின்றோம். காலம் பதில் கூறும் காத்திருப்போம். உங்கள் கனவுகள் நனவாகும். அதுவரையும் நீங்கள் விட்டுச் சென்ற பணியை நாங்கள் தொடர்கின்றோம்.

**S.சஜிக்கா (அகநிலா)**
**கிரான்**

## "தமிழீழத்தைத் தெரிந்து கொள்வோம்"



197. தமிழீழ நீதித்துறையின் நீதியாளர்கள், சட்டவாளர்கள் தேவையேற்படும் இடங்களில் களமுனைப் பணிகளுக்கும் தமது நேரடிப் பங்களிப்பைச் செலுத்தியே வந்துள்ளனர். சட்டவாளராக இருந்து கரும்புலியாகச் சென்று தற்கொடையாற்றிய மாவீரர் யார்?
**கரும்புலி மேஜர். சந்தனா.**

198. தமிழீழ விடுதலைப் போராட்டத்தைச் சிதைக்கும் நோக்கில் சிறீலங்காவின் தேசியப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலி கடல்வலயத் தடைச் சட்டத்தை எப்போது அமுல்படுத்தினார்?
**1984 சித்திரையில்**

199. தமிழீழ நீதித் துறையின்தனித்துவக் கட்டமைப்பாக முதலாவது தமிழீழ நீதிமன்றின்அமர்வு 1993.08.21 இல் எங்கு இடம்பெற்றது?
**சுன்னாகம் மாவட்ட நீதிமன்றில்**

200. தனது பள்ளி வயதில் தான் கண்ட இனக்கலவரப் பாதிப்புகள் தன் மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியதாகத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் தனது ஊடக நேர்காணல் ஒன்றில் (1984.மார்ச்சில்) தெரிவித்திருந்தார். தலைவர் குறிப்பிட்ட அவ் இனக்கலவரம் எது?
**1958ம் ஆண்டு இனக்கலவரம்.**

*(கோமளமைந்தன)*

# காத்திரன் பதில்

**01. கே. காத்திரனே! ஆண்கள் ஒரு பெண்ணைக் காதலிக்காமல் பல பெண்களைக் காதலிப்பது ஏன்?**

*கே.பி.குமார். கன்னன்குடா.*

ப. இவ்வாறான ஆண்களைத்தான் காதல் பசாசுகள் என்று அழைப்பதுண்டு. பல பெண்ணைக் காதலித்து ஏமாற்றுபவர்களுக்குக் கடைசியில் இந்த மண்ணும் கைகொடுக்காது.

**02. கே. காத்திரனே! இடைக்கால நிர்வாகத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீகள்?**

*சு.நவசக்தி. மண்டூர் ஸ்ரீ இ.கி.வி.*
*தரம்-11 மண்டூர்.*

ப. இடைக்கால நிர்வாகத்தைப் பற்றி நான் சிந்திக்கவே இல்லை. முழுக்காலநிர்வாகம் பற்றித்தான் சிந்திக்கிறேன்.

**03. கே. லக்ஸ்மன் கதிர்காமர், ஆனந்தசங்கரி இரண்டு தமிழரும் எப்போது திருந்துவார்கள்?**

*எம். வாணி வாகரை.*

ப. நாடாளுமன்ற நாற்காலிகள் பறிபோகும் போது....

**04. கே. அதிகம் கனவு காண்பவர்கள் ஆண்களா, பெண்களா?**

*கந்தசாமிகுட்டி - பதுளைவீதி செங்கலடி.*

ப. இராக்கனவு காண்பதில் பெண்கள் அதிகம். பகல் கனவு காண்பதில் ஆண்கள் அதிகம்.

**05. கே. காத்திரனே பரீட்சையில் தோல்வி அடையும் மாணவர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?**

*நா. யோகநாதன் - தரம்-13*

*அரசடித்தீவு ம.வி. வித்தியாலயம்.*

ப. தோல்விகளில் இருந்துதான்வெற்றி பிறக்கிறது. இது பரீட்சைக்கும் பொருந்தும், பயிற்சிக்கும் பொருந்தும்.

**06. கே. காத்திரனே! சினிமாத் திரைப்படங்களால் மாணவர் சமுதாயம் சீரழிக்கப்படுகிறது என்பது உண்மையா?**

*சி. சுராஞ்சனி மண்டூர்- 01*

ப. தமிழ் சினிமாவில் அண்மைக்காலத் திரைப்படங்களால் தமிழ்த் தேசியமும் கொச்சைப்படுத்தப் படுகின்றது என்பது உண்மை.

**07. அரசியல் கைதிகள் சிலர் விடுதலையாகி விட்டார்கள் ஆனால் என்னைப் போன்ற பலர் இன்றும் சந்தேகக் கைதிகளாகச் சிறையில் வாடுகின்றோம். இடைக்கால நிர்வாகம் கிடைத்தால் எங்களை விடுதலை செய்வார்களா?**

*பொ. சுபாஸ்கரன். சிறைச்சாலை- மட்டக்களப்பு*

ப. சிறிலங்கா சிறைக்கூடங்களில் உள்ள அப்பாவித் தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலையாக வேண்டும் என்பதே எமது அவா.

**08. கே. காத்திரனே! சில நண்பர்கள் நன்றாகப் பழகிவிட்டு பின்பு சில காலத்தால் வெறுக்கிறார்கள். இவ்வாறான பண்புள்ளவர்களை என்ன செய்யலாம்?**

*கே. ரேணுகா- அரசடித்தீவு ம.வி*

ப. நன்றாகப் பழகும் நண்பர்களை விட்டு பண்பாகப் பழகும் நண்பர்களுடன் அன்பு வைக்கவும்.

**உங்கள் கேள்விகளை:**

**காத்திரன் பதில்**
**தமிழ் அலை**
**கொக்கட்டிச்சோலை**

*எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்*

# கந்தப்பேரடியும் கலந்தர்லெவ்வையும்

கந்தர்:- குரங்கு பாஞ்சான் முகாம அகற்ற தென்பகுதியில இருந்து ''சிகல உறுமய'' கட்சி ஆக்கள் படையெடுத்து வரப் போறாங்களாமே.....

கலந்தர்:- தெகிவளை மிருகக் காட்சி சாலையில இருக்கிற குரங்குகள் எண்டு இந்தக் குரங்கு பாஞ்சான நினைச்சித்தாங்க போல மச்சான்......

கந்தா:- சரியாச் சொன்னா மச்சான் நம்மட குரங்குகள் குரல்வளைகளப் பாய்ந்து கடிக்கும் எண்ட சங்கதி விளங்கல்ல போல.....


கலந்தா:- சும்மா கிடந்த சங்க ஊதிக் கெடுத்த கதமாதிரி எலுவா இவங்கட துள்ளு இருக்கு.....

கந்தா:- திலக் கருணாரெத்தினட பட தொடக்கம் சந்திரிகாட அப்பன் பட வந்தாலும் குரங்கு பாஞ்சான உசுப்ப ஏலாது.....

கலந்தர்:- இந்த விஷயம் எங்களுக்கு விளங்குது. அவங்களுக்கு இன்னும் விளங்கல்லயே...

கந்தா:- கொஞ்சம் பொறு மச்சான் எல்லாருக்கும் விளங்கத்தான் போகுது.

# சமாதான நீதிவான்



ஆரையம்பதி-02, ஸ்ரீ பேச்சியம்மன் ஆலய வீதியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை இளங்கோ என்பவர் மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதிவானாக நீதிவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொண்டார். இவர் ஆரையம்பதி நொத்தாரிஸ் மூத்ததம்பி வித்தியாலயத்தில் தமது ஆரம்பக் கல்வியைக் கற்ற இவர் மட்/சிவானந்தா வித்தியாலயத்தின் பழைய மாணவனுமாவார். தற்போது H.N.D.A. 3ம் வருட மாணவராவார். இவர் ஸ்ரீ சித்தி விநாயகர் , ஸ்ரீ பேச்சியம்மன் ஆலய பரிபாலன சபையின் கணக்கு பரிசோதகரும், பாரதி சனசமூக நிலையத்தின் தலைவரும், பாரதி கிராம அபிவிருத்திச் சங்கப் பொருளாளரும், முன்னாள் காந்தி இளைஞர் சேவைகள் மன்ற தலைவருமாவார். இவர் சிறந்த சமூக சேவையாளரும், ஆரையம்பதி ''சத்யசாயி பாவா'' சாயி சமித்தியின் ஆரம்ப கால உறுப்பினருமாவார். மட்டக்களப்பு மாவட்டத்தின் முதன்மைப் பாராளுமன்ற உறுப்பினர் த.தங்கவடிவேல் அவர்களால் ''வீரப் பேச்சாளர்'' என்ற பட்டம் வழங்கியமை குறிப்பிடத் தக்கது.

# வாழைச்சேனையில் புலிகள் முஸ்லிம் பிரதி நிதிகள் கலந்துரையாடல்

(நமது நிருபர்)

முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சந்திப்பு புதன்கிழமை வாழைச்சேனை இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. விடுதலைப்புலிகள் தரப்பில் மட்டு அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தலைமையிலான குழுவினரும் முஸ்லிம்கள் தரப்பில் கல்குடா பள்ளிவாயல்களின் முஸ்லிம் நிறுவனங்களின் தலைவர் ஏ.எல். அலிகார்காஜியார் தலைமையின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

முஸ்லிம்களுக்குரிய விவசாயக் காணிகளில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளல் காணாமல் போன பொருட்களை மீளக்கண்டு பிடிப்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

# வெல்லாவெளி, பட்டிப்பளை பிரதேச டேபா உத்தியோகத்தர்களுக்கு இம்மாதச் சம்பளம் இதுவரைஇல்லை

(சக்திவேல்)

வெல்லாவெளி, பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுகளில் டேபா திட்டத்தின் கீழ் கடமையாற்றும் ஊழியர்களுக்கான இம்மாதச் சம்பளம் பிற்போடப்பட்டுள்ளதாக அவ்வூழியர்கள் தமிழ் அலைக்குத் தெரிவித்தனர்.

மேற்படி பிரதேசங்களில் வேலை செய்யும் டேபாதிட்ட உத்தியோகத்தர்களது பதிவேடுகள் இணைப்பாளரினால் அதற்குப் பொறுப்பான தலைமை அலுவலகத்திற்கு உரிய காலத்திற்கு அனுப்பிவைத்த போதும் அஞ்சல் சேவையின் குறைபாடு காரணமாக சம்பளம் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாக இவ்வுத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

# நாட்டுப் பொறுப்பை தேரர்கள் ஏற்க வேண்டும

(நமது நிருபர்)

மகாநாயக்க தேரர்கள் நாட்டின் தலைமைப் பதவியை வகிக்க வேண்டும். இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் அனுரா பண்டாரநாயக்கா.

நேற்று முன் தினம் புதன்கிழமை பொதுஜன ஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர் குழு மாகாநாயக்க தேரர் வெலிகம ஞாயவர்தன தேரவைச் சந்தித்த போதே இதனைத் தெரிவித்தார்.

மகாநாயக்க தேரர்கள் மக்களுக்குத் தலைமை வகிக்க வேண்டும் என்று கூறினார். யார் பிரதமராக இருந்தாலும், யார் ஜனாதிபதியாக இருந்தாலும் எந்தக் கட்சி நாட்டை ஆட்சி செய்தாலும் அதிகாரப் பரவலாக்கல் ஒருமைப்பாடுடைய நாட்டிற்குள்ளேயே மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனென்றால் இது ஒரு பௌத்த நாடு எனக் குறிப்பிட்டார்.

# துண்டிக்கப்பட்ட தொலைபேசி சேவை சீராகவில்லை

(அரியம்)

மட்டு நகரில் ஒரு வார காலமாக தொலைபேசி சில இடங்களில் துண்டிக்கப் பட்டிருந்தும் அந்தத் தொலைபேசிகளை மீள இயங்கவைக்கும் நடவடிக்கையினைச் சம்பந்தப்பட்ட ரெலிக்கொம் நிறுவனம் மேற்கொள்ளவில்லையென பாதிக்கப்பட்ட மட்டு நகர் பகுதியின் பாரதி மக்கள் தமிழ் அலைக்குத் தெரிவித்தனர்.

கடந்த ஒரு வாரகாலத்திற்கு முன் மட்டு நகர், காத்தான்குடி ஆகிய பகுதிகளில் தொலைபேசி வயர்கள் வெட்டி எடுக்கப்பட்டுள்ளமையினால் பல நகர்களின் உள்ள தொலைபேசிகள் முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா தொலைத் தொடர்பு அலுவலர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில் சேதமாக்கப்பட்ட தொலைபேசி வயர்களை மீளவும் பொருத்தும் நடவடிக்கையினை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்தார்.

# அலையின் பார்வையில்

Regd.as a News Paper at the G.P.O.(QD/101/NEWS/2003)





## அயர்லாந்தில் ஆழமான ஆலோசனை

இடைக்கால நிர்வாக சபைக்கு இறுதி வடிவம் வட அயர்லாந்தில் சட்ட நிபுணர்களுடன் ஆழமான, நீளமான ஒரு வடிவமிடல் அது தமிழினத்தின் தாயக உரிமையின் முதற்படி ஆனால் சிங்கள ஆட்சியாளர்களுக்கு அது வேண்டாத ஒரு நகலாகுமா? களம் கண்ட புலிகளின் தளபதிகள் அயர்லாந்தில் ஆளுமைகொண்ட சட்ட நிபுணர்களுடன் ஒரு ஆழமான ஆலோசனை,





## குமுறி எழுந்த குடாநாடு

புரிந்துணர்வு உடன் படிக்கையின் பின்னர் சிங்களப் படைகளின் உடன் படிக்கை மீறல்கள் எத்தனை~ எத்தனை இதன் ஒரு பதிவாக யாழ்.குடா நாட்டில் இரு அப்பாவித் தமிழ் இளைஞர்கள் சிறிலங்கா இராணுவ ட்றக்வண்டி ஓட்டுநரின் முறையற்ற வாகன ஓட்டுதலால் பலிக்கடாக் களாக்கப்பட்டனர். அந்தப் பரிதாபத்தைப் பார்த்து பொங்கி எழுந்த யாழ் மக்கள் அவர்களின் உணர்வுகளைப் புறக்கணிக்கும் சிங்களப் படைகள்.

## வலுவடைந்துவரும் வடிவங்கள்

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் முஸ்லிம் மக்களின் இன ஐக்கியம் வலுவடைந்து வரும்வடிவங்கள் இவை. பிட்டும் தேங்காய் பூவும் போல் இவர்கள் உறவு பலப்பட பல பல சந்திப்புக்கள்.

வியாழக்கிழமை வவுணதீவில் நடைபெற்ற விடுதலைப்புலிகள், முஸ்லிம் பிரதிநிதிகள் சந்திப்பின் காட்சிகள்,








அண்மையில் நித்திபதிப்பகம், தமிழ்அலை அலுவலகம் போன்றவற்றை பார்வையிட வந்த மட்/கறுவாக்கேணி வி.வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள்குழு.

## திருமலை நகரில்...



நவராத்திரி தினத்தன்று திருமலை தலைநகரில் கும்ப உலாவீதி வரும் காட்சி

ஈழத்திருநாட்டின் சிறப்புமிக்க கும்ப உலா வீதிவலம் வருவது திருமலை நகரில்தான் என்பது பெருமைப்பட வேண்டிய விடயம்.

(படம் தகவல்:- எஸ்.எஸ்.குமார்)

இப்பத்திரிகை கொக்கட்டிச்சோலை நித்தி பதிப்பகத்தில் 11.10-2003 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

F:\computer\11.10.2003 Tamilalai.cdr